Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 02 திங்கட்கிழமை (18.08.2014) பக்கங்கள் 20 ஓசை - 321

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

### வீதிப் புனரமைப்பில் பாகுபாடு

## வலி.கிழக்கு தவிசாளருக்கு எதிராக அச்சுவேலி மக்கள் இன்று ஆர்ப்பாட்டம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட அச்சுவேலி தெற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியினையும், அச்சுவேலி - தொண்டைமானாறு பிரதான வீதியினையும் இணைக்கும் சுமார் 2 கிலோ மீற்றர் நீளமான நாவற்காடு-பயிற்றோலை பிரதான வீதியினைத் திருத்தியமைக்கும் வேலைகள் கடந்த சில தினங்களாக நடைபெற்று வருகின்ற போதிலும், அவ்வீதியின் ஒரு பகுதியினை திருத்தியமைப்பதில் வலி.கிழக்குப் பிரதேச சபையின் தற்போதைய தவிசாளர் சமூக ரீதியான பாரபட்சமான நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதால், அவ்வீதியின் மீதிப்பகுதியின் திருத்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இருப்பதற்கு எதிராக இன்று எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அச்சுவேலி தெற்குப் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேச சபையின் தவிசாளரின் சமூக ரீதியான பாகுபாட்டுப் புறக்கணிப்பு நடவடிக்கைக்கு எதிராகக் கொதிப்படைந்து இருக்கும் அச்சுவேலி தெற்குப்பகுதி மக்கள், இன்றைய தினம் குறித்த வீதிப் பகுதியின் திருத்த வேலைகளை மேற்கொள்ளாது ஏனைய குறுக்கு வீதிகளான விக்னேஸ்வரா வீதி மற்றும் முத்துமாரியம்மன்

(19) பக்கம் பார்க்க...

## பருத்தித்துறையில் குழு மோதல்; ஒருவர் படுகாயம், பஸ் சேதம்




(பருத்தித்துறை)

யாழ்.பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோதலில் படுகாயமடைந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் தும்பளையைச்

(19) பக்கம் பார்க்க...

# சுயாதீன விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவது அவசியம்

### இந்திய மனித உரிமை ஆர்வலர் தெரிவிப்பு



(கொழும்பு)

இலங்கை தொடர்பாக ஐ.நா. விசாரணையொன்றை ஆரம்பித்தாலும் கூட அதற்குப் புறம்பாக சுயாதீன விசாரணையொன்றை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது என ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேச நிபுணர்குழுவில் அங்கம் வகிக்கும் இந்திய மனித உரிமை ஆர்வலர் அவ்டோஸ் கௌஷால் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, சகலருடைய மனித உரிமையை எவ்வித முற்கற்பிதங்களுமின்றி நிலை நாட்டுவதற்காகவே ஐ.நா. ஏற்படுத்தப்பட்டது. எனினும் சில வேளைகளில் ஐ.நா. முன்னெடுக்கும் விசாரணைகள் சுதந்திரமாக இருப்பதில்லை, தனிப்பட்ட நலன்களை உள்ளடக்கியதாகவும் அவை காணப்படுகின்றன.

ஆகவே ஐ.நா. விசாரணையொன்றை ஆரம்பித்தாலும் கூட அதற்குப் புறம்பாக சுயாதீன விசாரணையொன்றை இலங்கை குறித்து மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. சர்வதேச ஆலோசனைக்குழு மேற்கொள்ளும் யுத்த பொறுப்புக் கூறல் விசாரணை சுதந்திரமான பக்கச்சார்பற்ற விசாரணை இடம்பெறுவதை உறுதிசெய்யும். ஆலோசனைக் குழுவில் நான் பலவந்தமாக காணாமற் போகச் செய்யப்பட்டோர் மற்றும் யுத்தக் குற்றச்சாட்டுகள் குறித்து கவனம் செலுத்துவேன். சிறுவர்களை யுத்தத்திற்கு பயன்படுத்தியது மற்றும் மனித கேடயங்களாகப்

(19) பக்கம் பார்க்க...

## மாணவி மீது வன்புணர்வு முயற்சி; கைதானார் ஆசிரியர்

பாடசாலை மாணவியை வன்புணர்வுக்குட்படுத்த முயற்சித்த சந்தேகத்தின் பேரில் ஆசிரியர் ஒருவர் நேற்றைய தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மானிப்பாய்ப் பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவியைக் குறித்த ஆசிரியர் நேற்று முன்தினம் மாலை தனக்குத் தெரிந்த வீட்டிற்கு அழைத்துச் சென்று வன்புணர்வுக்குட்படுத்த முயற்சித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அறிந்த குறித்த பாடசாலை

(19) பக்கம் பார்க்க...

## ஆசிரியையின் சடலம் எரிந்த நிலையில் மீட்பு

வடமராட்சி புலோலி, 1ஆம் கட்டைப் பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து எரிந்த நிலையில் ஓய்வுபெற்ற ஆசிரியை ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேயிடத்தைச் சேர்ந்த தருமராசா இராசலக்ஷ்மி (வயது-63) என்ற ஆசிரியையே சடலமாக மீட்கப்பட்டார். (19) பக்கம் பார்க்க...

## புலிகளின் வலையமைப்பை உருவாக்க ஐரோப்பிய நாடுகள் தீவிர முயற்சி

### அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)


இலங்கைக்கு எதிராகச் செயற்படும் வகையில் புலிகளின் வலையமைப்பை மீளவும் உருவாக்கும் முயற்சியில் ஐரோப்பிய நாடுகள் ஈடுபட்டு வருவதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளதாவது,



ஐரோப்பா எப்போதும் ஆசிய நாடுகளை அழிக்கவும், தனது

(19) பக்கம் பார்க்க...




## போரின் இறுதிக்கட்டச் சம்பவங்கள் விசாரணைக்கான நடவடிக்கைகள் என்ன?

### கேள்வியெழுப்பவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் குழு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பாக நடுநிலையான விசாரணைகளை மேற்கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், அது தொடர்பான இராணுவ விசாரணைகள் எந்த நிலையில் உள்ளதென அரசாங்கத்திடம் ஐ.நா. மனித உரிமைகள் குழு கேள்விகளை எழுப்பவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா. பணியகத்தில், ஐ.நா. மனித உரிமை

(19) பக்கம் பார்க்க...

உள்ளே
க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை கணித பாட வினாத்தாள்

# சரியான நீர் முகாமைத்துவத்தினால் சிறுபோக செய்கைகளில் வெற்றி

## கிளி. பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் தெரிவிப்பு

இரணைமடுக்குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச் செய்கைகளில் சரியான நீர் முகாமைத்துவம் பின்பற்றப்பட்டமையால் பயிர்ச் செய்கை வெற்றியளித்துள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப் பாசன பொறியியலாளர் என்.சுதா கரன் நேற்றுத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும தெரிவித்ததாவது,

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் கீழ் வருடாந்தம் 8 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப் பரப்பில் சிறுபோக செய்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றமை வழமை. கடந்த ஆண்டும் (2013), இந்த ஆண்டும் (2014) நிலவிய எதிர்பாராத கடும் வற ட்சி காரணமாக குளத்தின் நீர் அளவைக் கொண்டு 800 ஏக்கர் நிலப்பரப்பில் மாத்திரம் சிறுபோ கச் செய்கை மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இம்முறை சிறுபோகச் செய் கைக்கான கூட்டத்தீர்மானம் எடுக் கும் போது இரணைமடுக்குளத் தின் நீர் மட்டம் 13 அடி 9 அங்கு லமாக இருந்தது. சிறுபோக பயிர்ச் செய்கை ஆரம்பிக்கும் போது ஏப்ரல் மாதத்தில் பெய்த மழையை அடுத்து நீர் மட்டம் 15 அடி 2 அங்குலமாக இருந் தது.

இந்த 800 ஏக்கர் சிறுபோக செய்கை மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான நீர் விநியோகம் வழங்கப்பட்டு, நிறுத்தப்பட்ட நிலையில் தற்போது இரணை மடுவின் நீர் மட்டம் 10 அடி 6 அங்குலமாக உள்ளது.

இவ்வாறு குளத்தின் நீரைப் பாதுகாத்து சரியான நீர் முகா மைத்துவம் பேணப்பட்டமையால் இச்சிறுபோக நெற்செய்கை மற் றும் அதன் ஊடான சிறுதானியம் என்பனவும் வெற்றியளித்துள் ளது. அத்துடன் நிலத்தடி நீரும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் எதிர்வரும் கால போக நெற்செய்கைக்குத் தேவை யான விதை நெல்லில் 40 வீத மான விதை நெல்லினை சிறு போகத்தின் மூலம் பெற்றுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.

# கண்காட்சியும் விற்பனைக்கூடமும் நல்லூரில் நேற்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சும், அதன் கீழான கைத்தொழில் அபிவி ருத்தி சபையும் இணைந்து ஏற் பாடு செய்துள்ள கைத்தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திக ளின் கண்காட்சியும் விற்பனைக் கூடமும் நேற்று அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவினால் திறந்து வைக்கப்பட்டது.



அமைச்சர் டக்ளஸ் தேவானந் தாவின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்கு அமைவாக யாழ். மாவட்டத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள தோற்பொருள் உற்பத் தியகம், தும்புசார் கைத்தொழில் உறபத்தி நிலையம், பற்றிக் கைத் தொழிற்சாலை, கைப்பணிகள் கைத்தொழில் உற்பத்தி நிலை யங்களில் உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திகளே இங்கு காட்சிக்கும் விற்பனைக்கும் வைக்கப்பட்டுள் ளன. இக்கண்காட்சி எதிர்வரும் 25 ஆம் திகதிவரை நல்லூர் மாந கர சபை வளாகத்திற்கு அருகில் தின மும் காலை 10.00 மணி முதல் மாலை 7.00 மணி வரை திறந்தி ருக்கும் என் பது குறிப்பி டத்தக்கது.


**சிறு விளம்பரம்**

**டயானா பிளாஸ்ரிக்**

*ரீசைக்கிள் (மீள் சுழற்சி)*

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித் தீன், என்பன விலைக்கு வாங் கப்படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.06 கனகசபை லேன்,
சிவலிங்கப்புளியடி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
021 222 8680,
077 592 5088.

(C/3733)


# "சதுர் கட லய" இசை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மென்டலின் சிவகுமார சர்மா வின் லலித ஷேத்ரா வழங்கும் இந்திய பிரபல கட வித்துவான் பத்மஸ்ரீ ரி.எச்.விக்கு விநாயகராம் ஒரே மேடையில் நான்கு கடங் கள் ஒன்றுசேர வழங்கும் சதுர் கட லய சமர்ப்பணம் இன்று பி.ப. 3.00 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அரங்க இசை கலை ஞர்களாக மென்டலின் வி.சிவ குமார், மிருதங்கம் லய கலா விபஞ்சி நீ.ராமகிருஷ்ணன், கெஞ் சிரா செ.ஸ்வாமிநாதன், மோர்சிங் ஏ.கணேசன், கெத்து வாத்தியம் நீ.ராஜாராமன் ஆகியோர் வழங்க வுள்ளனர். (54)

# "தமிழ் முற்றம்" சஞ்சிகை நேற்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

காவலூர் விஜேந்திரனின் "தமிழ் முற்றம்" எனும் கலை இலக்கிய பண்பாட்டு விடயங் களை உள்ளடக்கிய சஞ்சிகை நேற்று யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிட்டு வைக் கப்பட்டது.

எழுத்தாளர் யோசெப் பாலா வின் தலைமையில் நடைபெற்ற இவ்வெளியீட்டு விழாவில் கவிஞர் அரசையா சஞ்சிகையை வெளி யிட்டு வைக்க அதனை யாழ். மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கான பிரதிக ளும் வழங்கப்பட்டது. நாடாளு மன்ற உறுப்பினர் சிறிதரன் அவற்றை வழங்கிவைத்தார்.

மேலும் தமிழ் முற்றம் சஞ்சி கையின் அறிமுக உரையை கவி ஞர் சோ.பத்மநாதன் நிகழ்த்தி னார். கோகிலா மகேந்திரன் மற் றும் தமிழ்த் தேசியமும் தமிழ் ஊடகங்களும் எனும் தொனிப் பொருளில் சமகால அரசியல் ஆய்வாளர் நிலாந்தனும் சிறப்பு ரையாற்றினர். (பா)

# மோசடி செய்த கிராம சேவகர் பணியிலிருந்து இடைநிறுத்தம்

முல்லைத்தீவு கரைதுறை பற்று பிரதேச செயலகப் பிரிவில் முல்லைத்தீவு தெற்கு கிராம சேவையாளரை, மாவட்ட செயல கத்தின் புலனாய்வுப் பிரிவின ருக்கு மக்களால் வழங்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இக் கிராம் சேவையாளர் பணியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது,

தவறான ஆவணங்களைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட் டதாக இப்பிரதேச மக்கள் வழங் கிய தரவின் அடிப்படையில் மாவட்ட செயலகத்தின் புலனாய் வுப் பகுதியினால் தகவல் சேக ரிக்கப்பட்டு கிராம சேவை உத்தி யோகத்தர் பணியில் இருந்து அவரை இடைநிறுத்தம் செய்துள் ளதாக முல்லை மாவட்ட அர சாங்க அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்தார். (40)

# கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

வடமராட்சி அருள்மிகு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலய ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் மிகவும் கோலாகலமாகவும் பக்திபூர்வமாகவும் இன்று நடைபெறவுள்ளது.

முன்னிரவு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் விழா ஆரம்ப மாகி நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்புடன் விசேட அபிஷே கங்களைத் தொடர்ந்து 1008 சங்காபிஷேகம் இடம்பெற்று அதிகாலை 4 மணிக்கு மின்னொளியில் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் ஆழ்வார் வீதி வலம் வந்து வெளி வீதியின் வடக்கு திசையில் கண்ணன் வெண்ணை திருடும் உறியடி உற்சவம் இடம்பெறும்.

இதேவேளை கிருஷ்ண ஜெயந்தி விழாவினை முன்னிட்டு இரவு 7.00 மணிக்கு பொலிகை பண்டிதர் சைவப்புலவர் பொன்.சுகந்தனின் 'அவதாரம்' எனும் தலைப்பில் சமயசொற்பொழிவும், இரவு 8.00 மணிக்கு பொலிகை விநாயகர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் மற்றும் பொலிகை கலை இலக்கிய மன்றத்தினரின் கலை நிகழ்ச் சிகளும் அதிகாலை 2.00 மணிக்கு யாழ். பட்டிமன்றக்குழுவினரின் கம்பராமாயணத்தில் சமூகத்திற்கு பெரிதும் வழிகாட்டும் பாத்திரமாக அமைவது இராமனா? சீதையா? கும்பகர்ணனா? குகனா? எனும் தலைப்பிலான சிறப்புப்பட்டிமன்றமும் இடம்பெறவுள்ளது. (116)


**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

**சீட்டிழுப்பு இல. 2555 திகதி 16-08-2014**

ஆங்கில எழுத்து: T

வெற்றி எண்கள்: **14 36 41 67**

போனஸ் இல: **52**

ஜக்பொட் பரிசு ரூ.14,718,500/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 207991 | 20/- | 4,159,820/- |
| 2 இல | 14755 | 100/- | 1,475,500/- |
| 3 இல | 314 | 1,000/- | 314,000/- |
| 4 இல | 01 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 8542 | 40/- | 341,680/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 622 | 1,000/- | 622,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 14 | 10,000/- | 140,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 14,718,500/- | - |
| 1 இல + போனஸ் இல | 9954 | 100/- | 995,400/- |
| 2 இல + போனஸ் இல | 446 | 500/- | 223,000/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 420 | 200/- | 84,000/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 243085 | | 9,886,900/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014.08.20 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு **ரூ. 15,286,650/-**

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2335546/7

(C/3763)





**நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்**

**ஆட்சேர்ப்பு அறிவித்தல்**

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி**

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவிலின் கட்டுமானப் பணிகள் தொடர்பில் மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும் மேற்பார்வை செய் வதற்குமாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை நியமிப்பதற் காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட படிவத்தில் சுய விபரங்களை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை 28.08.2014 இற்கு முன் கிடைக்கத் தக்கதாக "செயலாளர், நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

இப்பதவிக்கு தகுந்த வேதனம் வழங்கப்படும்.

செயலாளர்,
அறங்காவலர் சபை, நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில்.
18.08.2014

(C/3436)

# ஆசிரியர் கலாசாலையின் வெற்றிக்கு பின்புலமாக இருந்தவர் கணபதிப்பிள்ளை

## வடமாகாண ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்நிருபர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடளாவிய ரீதியில் ஒரு தேசிய கல்லூரிக்குரிய பொறுப்புடன் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனமாக விளங்குகிறது. மிகக்குறைந்த வளங்களுடன் வினைத்திறன் மிக்க செயற்பாடுகளை மேற்கொள்ளும் நிறுவனமாக விளங்கும் இந்த ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வெற்றிக்கு பின்புலமாக அமைந்தவர் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை ஆவார்.

இவ்வாறு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளையின் மணிவிழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கிய வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் குறிப்பிட்டார்.

கலாசாலை ரதிலஷ்மி மண்டப வீரமணி ஐயர் கலையரங்கில் மணிவிழாக் குழுத்தலைவர் வீ.கருணலிங்கம் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இம் மணிவிழாவில் இளங்கோவன் தொடர்ந்து பேசுகையில்,

சமூகத்துடன் இணைந்த வகையில் கலாசாலையை இயக்கிய பெருமை இவரைச்சாரும் எதையும் இலகுவாகவும் புன்சிரிப்புடனும் எதிர்கொள்ளும் அவரது ஆளுமை தனித்துவமானது. இத்தகைய சிறப்புடன் விளங்கும் இவருக்கு அறுபது வயதாகி விட்டதா என நம்பமுடியாமல் உள்ளது.

உடற் கல்வித்துறை சார்ந்த ஆசிரியராக பணியாற்றிய பின்புலமும் மகிழ்ச்சியான குடும்பவாழ்வும், கலாசாலைக்குடும்பம் நல்கிய ஒத்துழைப்புமே அவரது இளமையின் இரகசியம் எனலாம்.

மத்திய, மாநில பிளவுகளுக்கு அப்பால் பொதுநோக்கினை அடிப்படையாகக் கொண்டு கலாசாலையை சிறந்த முறையில் இயக்கி வந்த அதிபர் கணபதிப்பிள்ளையின் ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இம்மணிவிழாவன்று இருபாலை சந்தியில் இருந்து விழா மண்டபம் நோக்கி மங்கல வாத்தியம் முழங்க விழாநாயகனும் அவரது பாரியாரும் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

ஓய்வுநிலை உப அதிபர் சங்கீத பூஷணம் செ.குமார்சுவாமியின் இறை வணக்கப் பாடலுடன் விழா ஆரம்பமானது. கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய அதிபர் திருமதி.சாந்தினி வாகீசன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மதத் தலைவர்களின் ஆசியுரைகளைத் தொடர்ந்து வடமாகாணக் கல்விப்பணிப்பாளர் இ.இராஜேந்திரா யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி, முன்னாள் தமிழ்த்துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, கல்வியியற்றுறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த.கலாமணி, டாக்டர் லயன் வை.தியாகராசா உட்பட பலர் வாழ்த்துரைகளை வழங்கினர். (10)

## கவனயீர்ப்பு போராட்டம்


(யாழ்ப்பாணம்)

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்குமாறு கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முற்போக்கு தமிழ்த்தேசிய கூட்டணி நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடாத்தவுள்ளது.

எனவே இப்போராட்டத்தில் அனைத்து மக்களையும் கலந்து கொள்ளுமாறு கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# இளைஞர் சேவைகள் மன்றத்தால் ஆன்மீக சிந்தனை வேலைத்திட்டம்

(மானிப்பாய்)



இளைஞர் மனதிற்கு ஆன்மீக சிந்தனை என்னும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் கீரிமலையில் இடம் பெற்றது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட காரியாலயமும் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து ஏற்பாடு செய்த இந்நிகழ்வு யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப்பணிப்பாளர் ஐ.தவேந்திரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை தலைவர் சோ.சுகிர்தன் கலந்து கொண்டு நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தார்.

ஆசியுரைகளையும் கருத்துரைகளையும் கீரிமலை நகுலேஸ்வர ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ நகுலேஷ்வரக் குருக்கள், ஸ்ரீநாக விகாரை விகாராதிபதி மீகயந்துரே ஸ்ரீ விலதேவர், அருட்தந்தை யோ.பஸ்ரியன் யோகநாதன், பெரிய பள்ளிவாசல் மௌலபி எம்.றலீம் உள்ளிட்ட மதகுருமார்கள் வழங்கினார்.

தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் எஸ்.கேதீஷ்வரன் தலைமையில் அவரது குழுவினரால் சிறப்பு தியானப் பயிற்சியும் வழங்கப்பட்டது. (48)

# கிருஷ்ணஜெயந்தி

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடத்தில் அமைந்து விளங்கும் இணுவில் திருப்பதி அருள்மிகு வெங்கடேஸ்வரர் திருக்கோவில் கிருஷ்ண ஜெயந்திப் பெருவிழாவும் உறியடி உற்சவமும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 6 மணிக்கு திருவேங்கட பெருமானுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை ஸ்ரீ கிருஷ்ணதரிசனம் இடம்பெறும்.

மாலை 5.30 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணபகவான் மங்கலவாத்தியங்கள் உபசாரங்கள் சகிதம் உறியடி உற்சவத்திற்கு புறப்படுவார். மாலை 7 மணி முதல் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தங்கத்தொட்டிலில் எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சி கொடுப்பார் இரவு 9 மணிக்கு தாலாட்டு உற்சவமும், பிரசாதம் வழங்கலும் இடம்பெறும். (10)

# இதுக்கெல்லாம் ஆரைத்தான் நோகுறது சங்கரா?






வடக்கில வரட்சி வாட்டி வதைக்குதெல்லோ.

மழையைக் கண்டு கனகாலம் ஆச்சுது. கிணறு குளம் எல்லாம் வத்திக் கிடக்கு.

சனங்கள் தண்ணிக்காக அலைபாயுதுகள்

இந்த வரட்சி வடக்கில மட்டுமில்ல நாட்டின்ர ஏனைய பகுதிகளிலையும் நிலவுது.

அங்க இருக்கிற சிங்களச் சனங்களும் இந்த வரட்சியால பாதிக்கப்பட்டுத்தான் இருக்குதுகள்.

அங்கையும் ஆறு, குளமெல்லாம் வரண்டு போய்த்தான் இருக்கு.

இப்பிடி நாடே வரட்சியைப் பற்றி கதைச்சுக் கொண்டிருக்கும்போது தமிழ் ஆக்கள் என்ன சொல்லுகினம் எண்டால் இந்த வரட்சி அரசாங்கத்தால திட்டமிட்டு வடபகுதிக்கெண்டு மட்டும் உருவாக்கப்பட்டதாம்.

அதுவும் சீனாக்காரனைக் கொண்டு இந்த வேலையை அரசாங்கம் செய்திருக்காம்.

ஏனெண்டு தெரியுமோ?

வடக்கில சில கட்டுமான வேலைகளை சீனா ஒப்பந்தம் எடுத்து செய்யுதெல்லோ

அதால இடையில மழை பெய்தால் இந்த வேலைகள் எல்லாம் பாதிக்கப்பட்டுப் போகுமாம் எண்ட படியால மழையைப் பெய்யவிடாமல் ஏதோ இரசாயனக்கலவையைத் தூவி மழையை இல்லாமல் செய்திட்டானாம்.

இப்பிடி சீனாக்காரன்ர லாபத்துக்காக இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்திட்டுதாம்.

இதுகூட இனவாதத்தின்ர இன்னொரு வடிவமாம்.

இதையெல்லாம் இப்பிடி சொல்லிக்கொண்டிருக்கிற ஆக்கள் வேறு யாருமில்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அவையின்ர நம்பர் 1 இணையத்தளமான தமிழ்வின்னும்தான்.

இந்த விசுக்கோத்துக் கதைகளை ஏராளம் தமிழ் மக்கள் நம்பிக்கொண்டுதான் இருக்கினம்.

அதுவும் சாதாரண சனங்களில்ல பெரிய படிப்பெல்லாம் படிச்ச புத்தி சீவிகளே இந்த வெங்காயக் கதைகளை நம்பிக்கொண்டுதான் இருக்கினம்.

இந்தக் கதைகளை வேறு சமூகங்கள் அறிஞ்சால் தமிழ் ஆக்களைப் பற்றி என்னதான் நினைப்பார்கள் எண்ட யோசினை கூட இவர்களுக்கு கிடையாது.

எல்லாத்துக்கும் அரசாங்கத்தைப் பழி சொல்ல வேணும்... எங்கட கஷ்டங்களுக்கெல்லாம் சிங்கள சமூகம்தான் காரணம் எண்டு காட்ட வேணும்... எப்பிடியெண்டாலும் தமிழ் மக்கள் மனதில வெறுப்பும் பகையும் வடிய விடாமல் பாத்துக்கொள்ள வேணும்...

இப்பிடியெல்லாம் இருந்தால்தான் தமிழ் மக்கள் ஆவேசப்பட்டு ஒற்றுமையாய் வாக்குகளை அள்ளிப் போடுவினம். பதவிகள் வரும் எடுத்து வைச்சுக்கொண்டு வெக்கைக்கும் காரணம் சிங்கள அரசு... வெள்ளத்துக்கும் காரணம் சிங்கள அரசு எண்டு தமிழ் மக்களைப் பேய்க்காட்டிப் போய்க்கொண்டே இருக்கலாம்.

தீர்வும் தேவையில்லை, அபிவிருத்தியும் தேவையில்லை, எதையும் செய்யவும் தேவையில்லை... நல்ல அரசியல்... நல்ல தலைமைத்துவம்... நல்ல தமிழ்க்குடி...

தமிழர்களை கடவுளாலும் காப்பாற்ற முடியாது. சாத்தானாலும் காப்பாற்ற முடியாது.

ஆனால் இப்பிடிக் கதைச்சுக்கொண்டே காலத்தை ஓட்டிக்கொண்டும் இருக்கிறார்கள் உலகத்தின் மூத்த தமிழ்க் குடிகள்.

தமிழராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இதெல்லாம் பெருமையைத் தாற விசயங்கள் இல்ல.

பெரிய அவமானங்களைத் தாற – தலையைக் குனிய வைக்கிற சங்கதிகள்.

இதுக்கெல்லாம் ஆரைத்தான் நோகுறது சங்கரா?

வெற்றியில் புதிதாக விரல் ஒன்றும் முளைப்பதில்லை. தோல்வியில் உயிர் ஒன்றும் போவதில்லை. போராடு.

- கவிஞர் சுகி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## நோய் தவிர்த்து வாழ்தல்!

முன்பெல்லாம் மனிதர் வாழ்க்கையில் உடல் உழைப்பு அதிகமாக இருந்ததால் நீரிழிவு, இரத்தக் கொதிப்பு போன்ற நோயின்றி இருந்தனர். தற்போது 35 வயதைத் தாண்டியவர்களில் பெரும்பாலானோர் நீரிழிவு நோய் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் என்கிறது ஆய்வு.

அலுவலகத்திலும், வீட்டிலும் அதிக "பதற்றமாக' காணப்படும் பலருக்கு இரத்தக் கொதிப்பு நோய் வருகிறது. புரதச் சத்தில்லாத உணவைச் சாப்பிடுபவர்கள் பலர் நீரிழிவு நோயால் பாதிக்கப்படுகின்றனர். இவற்றிலிருந்து தப்ப – அதாவது நோய் கூடுதலாகாமல் கட்டுப்படுத்த – மருத்துவர்கள் கூறும் அறிவுரை.. வாழ்நாள் முழுவதும் மருந்தும் நடைப்பயிற்சியும்.

அன்று நம்மைக் கண்டு "நோய்' பயந்து ஓடியது. இன்று அப்படியில்லை, நோயைக் கண்டு நாம் பயந்து "ஓடி'க் கொண்டிருக்கிறோம் – பூங்காக்களிலும் மைதானங்களிலும்.

நடத்தல் என்பது மனிதர்களுக்கு இயல்பான செயற்பாடு; ஆனால் அதையே இன்று ஒரு பயிற்சியாகச் செய்யும் நிலைமைக்கு நாம் வந்திருக்கிறோம்.

நமது முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் உடல் உழைப்புதான் பிரதானமாக இருந்தது. அன்று போக்குவரத்து நடைப் பயணமாகவே இருந்தது. இன்று சிறிது தொலைவு செல்ல வேண்டும் என்றால் இரு சக்கர வாகனங்களையும், பஸ்ஸையும் நம்பியிருப்பதாகி விட்டது.

உடலுக்குப் பயிற்சியைத் தரும் சைக்கிள்களும் கூட அரிதாகி வருகிறது. உடலுழைப்பு வேலைகளை மறந்துவிட்டதால் உடல் தளர்ந்து மூட்டுகளில் வலி ஏற்பட்டு கை – கால்களில் வலு இழந்து வருகிறது.

"எனக்கு எவ்வித நோயும் கிடையாது, மருந்துகள் உண்பது கிடையாது" என்று கூறுபவர்களை இன்று விரல்விட்டு எண்ணிவிடலாம். வேகமாக வளர்ந்துவரும் அறிவியல் தொழில் நுட்பத்துடன் சேர்ந்து 24 மணி நேரத்தில் 8 மணி நேரம் அல்லது 10 மணி நேரம் உழைப்பதாகச் சொல்கின்றோம். நாற்காலியில் அமர்ந்தபடி கணனியிலும், மடிக் கணனியிலும், செல்பேசியில் பேசியபடியும் வேலை பார்ப்பது எப்படி உடல் உழைப்பாகும்?

நாற்காலியில் அமர்ந்தபடியே பணியில் ஈடுபடும் நம்மால் தினமும் உண்ணும் உணவுகூட சமிபாடடைவதற்கு நேரம் கொடுப்பதில்லை. கதிரையில் இருந்தபடியே அதற்குள் அடுத்த உணவு வேளை வந்து விடுகிறது. மீண்டும் உணவ்வை முடித்துவிட்டு கதிரையில் வேலை.

உடல் உழைப்பு என்பது காணாமல் போய்விட்டது. ஒரு மனிதன் 24 மணி நேரத்தில் 6 மணி நேரம் தூக்கத்திற்கும், 8 மணி நேரம் உழைப்புக்கும் 2 மணி நேரம் அறிவை வளர்த்துக் கொள்ளவும் ஒதுக்க வேண்டும். மீதியுள்ள நேரத்தில் கவலைகளை மறந்து குடும்பத்துடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

ஆனால், உழைக்கிறோம் என்ற மாயையை உருவாக்கி, சரியான திட்டமிடல் இன்றி பல மணி நேரத்தை வீணாக்கிவிட்டு, தூங்கும் நேரத்தை குறைத்துக் கொள்கிறோம். இதனால் நோய் நம்மை ஆக்கிரமித்துக் கொள்கிறது.

மனிதர்களின் பல்வேறு நோய்களுக்கும் காரணம் சரியான உறக்கமின்மைதான். அடுத்து உடற்பயிற்சியின்மையும் மோசமான உணவுப் பழக்கமும்.

ஆகவே, சரியான முறையில் உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, எளிய உடற்பயிற்சியுடன் இயற்கை தரும் சத்தான உணவுகளை உண்பதுடன், திட்டமிட்டு வாழ்க்கையை வாழ்ந்தால் நோய்களை நாமும் வெல்லலாம்.

- ஆசிரியர்.

பொருளாதாரத் தடை என்ற நிபந்தனை

# ஐரோ.நிறுவனங்களின் செயற்பாடு அரசாங்கம் கடும் எதிர்ப்பு

இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக் கூடுமென ஐரோப்பிய நிறுவனங்கள் கருதுவதால், இலங்கையுடனான உடன்படிக்கைகளின் போது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படல் என்ற நிபந்தனையும் உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கைகள் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நிறுவனங்களின் இந்த நடவடிக்கைகளுக்கு அரசாங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. ஐரோப்பிய ஏற்றுமதிக்கடன் முகவர் நிறுவனங்கள் இவ்வாறு புதிய நிபந்தனைச் சரத்துக்களை உடன்படிக்கைகளில் உள்ளடக்கியுள்ளன.

ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் இலங்கை மீது பொருளாதாரத் தடை விதிக்கப்பட்டால் அப்போது சில ஏற்பாடுகள் செய்யப்படும் என உடன்படிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன.

சர்வதேச ரீதியில் இலங்கை மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படக்கூடும் என்ற கருதுகோளின் அடிப்படையில் இந்த நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையானது இலங்கைக்குப் பல்வேறு வழிகளில் பாதகத்தை ஏற்படுத்தக் கூடுமென தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இலங்கைக்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் வட்டி வீதத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலான பல்வேறு புதிய உடன்படிக்கைகளில் இந்த நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிபந்தனைகளுக்கு அரசாங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

# கொரியமொழி பரீட்சைக்கு இம்முறை அதிக விண்ணப்பங்கள்

(கொழும்பு)

கொரியமொழித் தேர்ச்சி பரீட்சையில் தோற்றுவதற்கு இம்முறை பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய குறிப்பிட்டார்.

கொரியமொழி தேர்ச்சிப் பரீட்சை அக்ரோபர் 11 ஆம், 12 ஆம் திகதிகளில் நடைபெறும். இம்முறை பரீட்சையில் கடற்றொழில், நிர்மாணப் பிரிவுகளிலான தொழிலுக்காக ஆட்கள் தெரிவு செய்யப்படும்.

இப்பரீட்சைக்காக விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்கும் நடவடிக்கை நாட்டிலுள்ள 14 நிலையங்களில் ஆரம்பமானது.

இரத்மலானை, அத்துருகிரிய ஆகிய நிலையங்களுக்கு மேலதிகமாக 12 நிலையங்களில் ஆகஸ்ட் 11 முதல் 14 ஆம் திகதி வரை விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டதாக பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார்.

# விசேட தேவை உடையோர் வாக்களிக்க புதிய ஏற்பாடு

ஊவா மாகாணசபைத் தேர்தலில் விசேட தேவை உடையவர்களுக்கான விசேட போக்குவரத்து வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் கோரியுள்ளார்.

இதற்கு தேவையான விண்ணப்பத்தை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியிடம் பெற்றுக் கொள்ள முடியும்.

பொதுப் போக்குவரத்தின் சாதனங்களின் ஊடாகவோ, அல்லது கால்நடையாகவோ வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்க முடியாதவர்கள், அதனை உறுதிப்படுத்தும் வகையில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரின் சான்றிதழை தெரிவத்தாட்சி அதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதன்படி குறிததவாக்காளர் விசேட போக்குவரத்து ஏற்பாட்டின் ஊடாகவோ அல்லது அவருக்கு பதிலாக மற்றுமொருவரோ வாக்கினை வழங்க ஒழுங்கு செய்யப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# பாக்.பிரஜைகளின் புகலிடக்கோரிக்கை; அடுத்த வாரம் நீதிமன்ற விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் புகலிடம் கோரிய பாகிஸ்தான் பிரஜைகள் தொடர்பான வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு வருகிறது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் உத்தரவின் அடிப்படையில், இலங்கையில் உள்ள பாகிஸ்தானியர்களை நாடுகடத்தும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து இலங்கைக்கு வந்து சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களை நாடுகடத்துவதற்கு குடிவரவுத்துறைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும் இந்த நாடுகடத்தல் தீர்மானத்துக்கு எதிராக நீர்கொழும்பில் தங்கியுள்ள பாகிஸ்தானியரான அனீலா இம்ரான் என்பவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இதன் அடிப்படையில் அவர்களை நாடுகடத்த மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்காலிக தடை உத்தரவை பிறப்பித்திருந்தது.

எவ்வாறாயினும் இந்த மனு எதிர்வரும் 29 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த விசாரணையின் போது குறித்த மனுவில பிரதிவாதிகளாக கூறப்பட்டுள்ள குடிவரவு மற்றும் குடிபெயர்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் சூலாநந்தா பெரேரா உள்ளிட்ட எட்டு பேர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படவுள்ளனர். குடிவரவுத்திணைக்களத்தின் தகவல் படி இது வரையில் இலங்கையில் சட்டவிரோதமாக தங்கி இருந்த 119 பாகிஸ்தானியர்களும், 19 ஆப்கானிஸ்தானியர்களும் பாகிஸ்தானுக்கே நாடுகடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# விபத்தில் சிக்கியது இராணுவ வாகனம்

(கொழும்பு)

இராணுவ ட்ரக் வண்டியும் பயணிகள் பேருந்தும் மோதிய விபத்தில் 28 பேர் காயமடைந்தனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை தம்புள்ள - ஹபரண வீதியில் இனாமலுவ பிரதேசத்தில் இடம்பெற்ற இந்த விபத்தில் 2 இராணுவத்தினரும் 26 பயணிகளும் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் தம்புள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஆலய குருவுக்கு கௌரவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் பிரதம குரு சிவத்திரு மா.பத்மநாதனின் சேவையையும், குரு சேவையையும் பாராட்டி ஆலயத் தலைவர் பொன்னாடை போர்த்தி கௌரவித்துள்ளார்.

நவாலி கதிர்காமக் கந்தனின் 14 நாள் திருவிழாவும் வைரவர் பூசையும் அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் ஆலய பிரதம குரு சிவத்திரு குருமணி மா.பத்மநாதன், பஜனைக் குழுவினர், ஆலயத் தொண்டு செய்தோர், தொடர் சொற்பொழிவு ஆற்றியோர் என 14 பேருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர். கடந்த வருடம் ஆலயப் பிரதம குருவுக்கு நவாலி ஹேமலதா ஞாபகார்த்த நிதியம் சிறப்பு கௌரவப் பட்டம் வழங்கி கௌரவித்தது. (92)

# கிளிநொச்சி- யாழ் குடாநாட்டிற்கு குடிநீர் வழங்குதல் தொடர்பான சமூகநலப் பிரச்சினையை இதயசுத்தியுடன் அணுகுதல் (பகுதி 3)

சி.கோணேஸ்வரன்

முகாமைத்துவ ஆலோசகர் முன்னைநாள் கூட்டுறவுக் கல்லூரி அதிபர் - திட்ட மதிப்பீட்டு ஆலோசகர்- கமிதிரிய மன்றம் - உலக வங்கியின் உதவித்திட்டம்

**2002ஆம்** ஆண்டில் இயங்கிய முறைசாரா அரசநிர்வாகத்திற்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டினைத் தொடர்ந்து பல்வேறு மீள்கட்டமைப்பு திட்டங்களும் மேம்பாட்டுத் திட்டங்களும் முன்மொழியப்பட்டன. அத்தகைய பல திட்டங்களுக்கு உடனடியாக உதவிபுரிய பல அனைத்துலக உதவி நிறுவனங்களும் இரு தரப்பு உதவிநிறுவனங்களும் முன்வந்தன.

எனினும் இரணைமடுவைப் புனரமைக்கும் திட்டம் பாரிய திட்டமாக இருந்ததால் அதற்கு உதவியளிக்க ஆரம்பத்தில் எவரும் முன்வரவில்லை.

அத்தகைய திட்ட முயற்சிகளில் ஒன்றாக யாழ். குடாநாட்டின் சில வரையறுக்கப்பட்ட பிரதேசங்களுக்கு தரமான குடிநீரையும் வீட்டுப்பாவனை நீரையும் வழங்குவதற்கான மாற்றுமூலங்களைத் தேடும் முயற்சியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை ஈடுபட்டது.

அக்காலகட்டத்தில் வன்னியில் இருந்த முறைசாரா அரசநிர்வாகம் முக்கிய தீர்மானமெடுக்கும் நிறுவனமாக செயற்பட்ட நிலையில் அவர்களின் நிர்வாக கட்டமைப்புக்களின் வழிகாட்டலுடன் குடாநாட்டிற்கு வெளியே காணப்படக்கூடிய நீர்வளங்களைக் கண்டறிந்து பயன்படுத்தும் தெரிவுகளும் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டன.

இத்தகைய நிலையில் நீண்ட ஆய்வுகளின் பின்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியும் வேறு அனைத்துலக நிறுவனமும் இணைந்து யாழ். குடாநாட்டின் நீர்வளத் தேவைக்கான திட்டத்திற்கு நிதியுதவி செய்ய முன்வந்தபோது வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள பெரிய குளங்களில் ஒன்றான இரணைமடுக்குளத்திலிருந்து நீரைப்பெற்றுச் சுத்திகரித்து யாழ். குடாநாட்டிற்கு வழங் கும் முன்மொழிவும் பரிசீலனை செய்யப்பட்டது.

இத்தகைய முயற்சிகளுக்கு அக்காலகட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உபவேந்தராக கடமையாற்றிய பேராசிரியர் அ.துரைராசா அவர்கள் இத்திட்டம் தொடர்பாக ஏற்கனவே முன்வைத்திருந்த அவரது சிந்தனைகள் பெரிதும் வழிகாட்டின.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் அவர்களால் அழைக்கப்பட்ட உள்ளூர் மற்றும் அனைத்துலக நீர்வளத்துறை விற்பன்னர்களும் நேரடியாகவே ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபுணர்களுடன் இது தொடர்பில் விவாதித்தனர். அவ்விவாதங்கள் பின்வரும் பல அடிப்படை விடயங்களைக் கொண்டிருந்தன.

அ). ஆறுமுகத்தின் திட்டத்தினை மீளவும் பரிசீலனைக்குக் கொண்டுவருதல்

ஆ). கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி போன்ற தொலைதூர குடியிருப்புகளின் பிரதேசங்களின் நீண்டகால குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதுவாக நன்னீர் மூலங்களைக் கண்டறிதல்.

இ).தொண்டைமானாறு நீரேரியை நன்னீரேரியாக்குவதற்கு அதன் உவர்நீர்த் தடுப்பணைகளை மீளக்கட்டியமைத்தல்.

ஈ). யாழ். குடாநாட்டின் நிலத்தடி நீர்வளத்தை மீள்நிலைப்படுத்தி விரிவாக்குவதற்கு வேண்டிய நீண்டகாலத் திட்டங்களை முன்னெடுத்தல். அதுவரையான காலத்திற்கு மட்டும் இரணைமடுக்குளத்திலிருந்து தண்ணீர் வழங்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்தல்.

உ). குடாநாட்டிற்கான குடிநீரினை இரணைமடுக் குளத்திலிருந்து பெறும்போது அதிகபட்ச பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு குளத்தின் உள்ளேயே நீர் உறிஞ்சுவதற்கான அமைப்பை உருவாக்குதலும் குழாய்களூடாக கொண்டுசெல்லப்படும் நீரைத் தூரத்தே வைத்து சுத்திகரித்து குடாநாட்டின் மக்களுக்கு வழங்குதல்.

ஊ) யாழ்குடாநாட்டு மக்களுக்கு தொடர்ச்சியாக தொலைதூரத்திலிருந்து சுத்திகரித்து வழங்கப்படும் குடிநீர் வழங்கலில் தங்கவைத்தல் அவர்களின் சுயசார்பான இருப்புநிலையினைக் கேள்விக்கு உட்படுத்தும். எனவே குறிப்பிட்ட காலஅட்டவணைக்குள் (சுமார் 20-30 ஆண்டுகள்) குடாநாட்டின் நிலத்தடி நீர்வளங்களை மீள்நிலைப்படுத்துவதன் ஊடாக இப்பிரதேச மக்கள் தங்களுக்கு அண்மித்த கிணறுகள் மற்றும் நீர்மூலங்களில் சார்ந்திருப்பதை உறுதிப்படுத்துதல்.

எ). இரணைமடுக்குளத்திலிருந்து யாழ்குடாவிற்குக் குடிநீரைக் கொண்டு செல்வதனால் அக்குளத்து நீரில் தங்கி விவசாயம் செய்யும் விவசாயிகளின் நலன்கள் பாதிக்கப்படாதிருப்பதை மேலதிக உபதிட்டங்களூடாக உறுதிப்படுத்துதல்.

மேற்குறிப்பட்ட விடயங்கள் யாவும் உயர்புலமை வாய்ந்த துறைசார் நிபுணர்களால் ஆய்வு செய்யப்பட்டதுடன் இவை பற்றிய விபரங்களும் விவசாயிகள் அமைப்பினூடாக கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு விளக்கப்பட்டு அவர்களின் சம்மதமும் பெறப்பட்டிருந்தது.

2005-2006ஆம் ஆண்டிலேயே இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டுகளைப் பலப்படுத்துவது தொடர்பான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. தவிர்க்க முடியாத நிலையில் யுத்தம் காரணமாக இத்திட்டங்கள் யாவும் இடைநிறுத்தப்பட்டு தற்போது மீள ஆரம்பிக்கப்படும் நிலையில் சில முரண்பாடுகளும் குழப்பங்களும் தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஆரம்பத்தில் குறிப்பிட்டது போலவே பெருகிவரும் சனத்தொகையால் நீர்வளம் அருகி வருகின்றது. 21ஆம் நூற்றாண்டில் இந்நிலை மேலும் உக்கிரமடையும். உலக யுத்தம் ஒன்று மீண்டும் ஆரம்பிக்குமானால் அது நீருக்காகவே ஏற்படும் என்ற கருத்து மிகையன்று.

இவ்வகையில் இரணைமடுவில் இருந்து நீர் வழங்குதல் தொடர்பான விடயத்திலும் உள்ளக முரண்பாடுகள் ஏற்பட்டுவருவது தவிர்க்கமுடியாததாகி விட்டது. இதனை சுமுகமான முறையிலும் எவருக்கும் பாதகமேற்படாது அணுகுதலுமே அவசியமாகின்றது.

எந்த திட்டத்திலும் முரண்பாடுகள் எழுவது இயற்கை. விவாதங்கள், முரண்பாடுகள் எழும்போதுதான் திட்டத்தைச் செயற்படுத்துவோரை நல்லமுறையில் நெறிப்படுத்தத் தூண்டுவதுடன் வேலை முடக்கிகளையும் ஊக்கப்படுத்தலாம்.

இத்திட்டம் வடக்கு மாகாண மக்களின் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு இருப்பிற்கான அடித்தளத்தை வழங்குகின்றது. இத்திட்டத்தின் முதன்மை நோக்கம் குடாநாட்டின் குடிநீர்ப் பிரச்சினையின் கடுமையை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு குறைப்பதாகும். அதன்பொருட்டு சில சந்தர்ப்பங்களில் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய இழப்புகள் இத்திட்டத்தினுள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன என்பதையும் ஏற்றுக்கொண்டு திட்டம் தேவையான மாற்றங்களுடன் செயற்பட பங்களிப்பினை வழுங்குதல் அனைவரதும் பொறுப்பாகும்.

அத்துடன் விவசாயிகளால் தற்போது கடைப்பிடிக்கப்படும் விவசாய மற்றும் நீர்முகாமைத்துவ முறைமைகளை மீளாய்வு செய்து உற்பத்தித் திறன் வாய்ந்த வினைத்திறனும் விளைதிறனும் கொண்ட மாற்று விவசாய முறைமைகளை தெரிவு செய்வதால் மக்களின் உழைப்பும் இயற்கை வளமும் விரயமாகுதலை தவிர்க்கமுடியும்.

இரணைமடு குளத்திலிருந்து குடாநாட்டிற்கு குடி நீர்வழங்குதல் என்பது மூன்று பத்தாண்டுகளுக்கு மட்டுமான ஒரு இடைக்காலத் திட்டமே. இதை மனதில் நிறுத்தி அக்காலகட்டத்தினுள் மக்கள் முன்னெடுக்க வேண்டிய பின்வரும் பணிகள் பல உள்ளன.

* அ). யாழ்ப்பாண குடாநாட்டின் நிலத்தடி நீர்வளத்தை புதுப்பிப்பதற்கான மக்கள் மயப்படுத்தப்பட்ட தந்திரோபாயத்தைக் கண்டறிதலும் அவற்றை சமூகத்திட்டமாக முன்னெடுத்தலும்.

* ஆ) குடாநாட்டிலுள்ள பிரதேசசபைகள் உள்ளூராட்சி அமைப்புக்கள் யாவையும் இணைந்த ஒருங்கிணைந்த தந்திரோபாயத்தினூடாக குடாநாட்டில் இருந்திருக்கக்கூடிய சகல நீர்நிலைகள் குளங்கள் நீரேந்து பகுதிகள் யாவற்றையும் பாதுகாக்கப்பட்ட நீர்நிலைகளாக பிரகடனப்படுத்துதலும் அவற்றைப் புதுப்பித்து பராமரிப்பதற்கான சமூக கட்டமைப்பினை உருவாக்குதலும்.

* இ). குடாநாட்டின் சனத்தொகை பெருகிவருவதால் குடியேற்றத் திட்டங்களின் ஊடாக வடமாகாணத்தின் மேலதிகமானவர்களையும் காணியற்றவர்களையும் இனங்கண்டு பெருநிலப் பரப்பிற்குள் குடிபெயர்வதை ஊக்குவித்தல்.

* ஈ). குடாநாட்டின் விவசாயிகளின் விவசாய முறைகளையும் நீர்முகாமைத்துவத்தையும் விவசாய இரசாயனங்களின் பிரயோகத்தையும் மறுஆய்வுக்கு உட்படுத்தி பொருத்தமான மாற்றுத் திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

* உ). கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளதும் குடிமக்களதும் மேம்பாட்டுக்கான தொடர்ச்சியான ஆதரவையும் பங்களிப்பையும் உறுதிப்படுத்துதல் மூலம் வடமாகாணத்தின் மிகைமதிப்பூட்டப்பட்ட விவசாய விளைநிலமாக பெருநிலப் பரப்பை வலுப்படுத்துதல்.

இத்திட்டத்தின் பிரதான இலக்குகளும் பயனும்

இத்திட்டம் இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் தமது சொந்த நிலங்களில் வாழ்வதற்குத் தூண்டுதலாக அமைவதோடு அவர்கள் சுகாதார முறையில் வாழ்வதை உறுதிப்படுத்துதல். இவ்வகையில் புனர்வாழ்வு, மீளக் கட்டுமானம், அபிவிருத்தி, சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளல் என்பன இத்திட்டத்தின் பிரதான இலக்குகளாகும்.

**இன்று முக்கியமாக விவாதிக்கப்படும் விடயம் இரணைமடுவில் இப்போதே தண்ணீர் குறைவாக இருக்கின்றது திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நீர் இல்லாவிட்டால் தண்ணீரை எங்கிருந்து வழங்க முடியும் என்ற வினாவாகும். தற்போதுள்ள கடும் கோடை நிலைமை திட்ட வரைவாளர்களுக்கு பெருத்த சவாலாக உள்ளதுடன் இரணைமடு நீரின் மட்டம் குறைந்து வரும் நிலை திட்டத்தை நிராகரிப்போருக்கு ஏதுவாக அமைந்து விட்டது.**

### 1. அணைக்கட்டைத் திருத்தி வலுவூட்டுதல்

இரணைமடுக்குளத்தின் நீரேந்தும் இயலளவை அதிகரிப்பதற்காக குளத்தின் அணைக்கட்டைத் திருத்தி வலுவூட்டுதல். இதன்படி அணைக்கட்டானது 100 வருடங்கள் உறுதியாக இருப்பதை உறுதிப்படுத்தல். அணைக்கட்டின் உயரத்தை மேலும் இரண்டு அடிகள் உயர்த்துதல்.

குளத்திலிருந்து வயல்களுக்கு நீரெடுத்துச்செல்லும் வாய்க்கால்களைச் செம்மைப்படுத்தி நீர்வழங்கல் ஒழுங்கமைப்பைச் (Regulatary) சிறப்பாக அமைப்பதன்மூலம் நீர் வீணாகுதலைத் தவிர்த்தல்.

### 2. நீரை உச்சளவில் பயன்படுத்தும் விவசாய நடைமுறைகளைப் போதித்தலும்

தற்போது விவசாயிகள் தங்களது தேவைக்கு மேலதிகமான நீரை வயல்களுக்குப் பாய்ச்சுகின்றனர். இதனால் மேலதிக நீர் வீணாவதோடு வயலுக்கு இடப்படும் உரங்களும் ஏனைய விவசாய உள்ளீடுகளும் நீருடன் கரைந்து வெளியேறுகின்றன.


எனவே விவசாயிகளின் விவசாய முறைகளையும் நீர்முகாமைத்துவத்தையும் மேம்படுத்துவதற்கான பயிற்சிகளை வழங்குதலும் அதனால் மீதப்படுத்தப்படக்கூடிய நீரை மேலதிக விளைநிலங்களுக்குப் பாய்ச்சுதலும். அத்தோடு நீரை உச்சளவில் பயன்படுத்தும் விவசாய நடைமுறைகளைப் போதித்தலும்.

### 3. கழிவுகளைச் சேகரித்து மீள் சுழற்சிக்கிடும் திட்டம்

பிரதானமாக கிளிநொச்சி யாழ் குடிநீர் வழங்கும் செயல்முறையுடன் சுகாதார வாழ்வை உறுதிப்படுத்துவதற்காக யாழ் மாநகர சபை பிரதேசத்தில் குழாய் வழி மலசல நீரகற்றும் திட்டமும் இதற்காக கல்லுண்டாயில் இக்கழிவுகளைச் சேகரித்து மீள் சுழற்சி அடிப்படையில் கழிவு நீரைச் சுத்தம் செய்து வரும் நீரை விவசாயத் தேவைகளுக்குப் பயன்படுத்துவது யாழ் மாநகர குழாய்வழி மலசல கழிவகற்றும் திட்டத்தால் 60,000 மக்கள் நன்மையடைவதுடன், கல்லுண்டாய் கழிவு நீர் சுத்திகரிப்பால் அப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் நன்மையடைவார்கள்.

இக்கழிவுகளைச் சேகரித்து மீள் சுழற்சிக்கிடும் திட்டமானது கொழும்பையடைந்து யாழ்ப்பாணம்-கண்டி என்பவற்றில் இடம்பெறவுள்ள திட்டமாகும். இந் நடைமுறையால் நிலத்தடி நீரும் வளம் பெறும்.

(தொடரும்)



## அனைவரும் இணைந்து நாட்டைப் பாதுகாக்க வேண்டும்

(கொழும்பு)

நாட்டை பாதுகாப்பதற்கு அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அஸ்கிரிய மஹாநாயக்கர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் அனைத்து சமூகங்களும் ஒன்றிணைந்து ஒரே இனமாக செயற்பட வேண்டியது அவசியம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதுவே நாட்டின் எதிர்காலத்துக்கு சிறந்தவிடயமாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் சில தரப்பினர் நாட்டில் அமைதியை குழப்பிவிடும் வகையில் செயற்படுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளை தாம் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

# அதிகாரப்பகிர்வின் மூலமே பிரச்சினைக்கு சரியான தீர்வு

### இந்தியா மீண்டும் வலியுறுத்துகிறது

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வின் ஊடாகவே தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

அர்த்தமுள்ள ஓர் அரசியல் தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதற்கு அதிகாரப் பகிர்வு மிகவும் அவசியமானது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா தெரிவித்துள்ளார்.

யுத்த நிறைவின் பின்னரான சூழ்நிலைகளை சரியான முறையில் பயன்படுத்தி நல்லிணக்



கத்தை ஏற்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் சமாதானத்தை நிலைநாட்ட ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளினதும் உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது மட்டுமன்றி இலங்கைத் தமிழர்களின் உரிமைகளை உறுதி செய்தல் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் கவனம் செலுத்தப்பட உள்ளதாகக் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் அனைத்து இன சமூக மக்களினாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடு என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## வறட்சியால் வாடும் மக்களை அரசு கைவிட்டுவிட்டதா?

### ஐ.தே.க.கேள்வி


(கொழும்பு)

நாட்டின் சில பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில் அரசாங்கம் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசு வெவ்வேறு நிகழ்வுகள் மற்றும் காரணங்களுக்காக பணத்தை செலவிடுவதாகவும், நீரின்றி இருக்கும் மக்களுக்கு பணத்தை செலவிடவில்லை எனவும் அக் கட்சி குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கூறப் பட்டுள்ளது.

# மரணித்த படையினரின் குடும்பங்களுக்கு நிதி உதவி



(கொழும்பு)

போர் வீரர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் வாழ்க்கைத்ரத்தை உயர்த்தும் நோக்கில் பாதுகாப்பு அமைச்சின் சேவா வனித பிரிவின் தலைவி திருமதி. அயோமா ராஜபக்ஷ பல நலன்புரித் திட்டங்களை முன்னெடுத்து அவர்களுக்கு சிறந்ததொரு வாழ்க்கைச் சூழலை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் யுத்த நடவடிக்கைகளால் வலது குறைந்த, உயிர்த் தியாகம் செய்த மற்றும் ஓய்வு பெற்ற முப்படை வீரர்களுக்கும் பொலிஸ் அதிகாரிகளுக்கும் அவர் தங்களது வீடுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு அல்லது புதிதாக நிர்மானிப்பதற்கு நிதியுதவி ரணவிரு சேவா அதிகார சபையினால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் ரணவிரு சேவா அதிகார சபையில் இடம்பெற்றது. மேலும் இத்திட்டத்தினூடாக 27 இராணுவத்தினர் 06 கடற்படையினர், 07 பொலிஸ் உத்தியோகத்தர் என்ற வகையில் 40 பேருக்கு நிதியுதவி வழங்கப்பட்டது. இந்நிகழ்வு ரணவிரு சேவா அதிகார சபையின் தலைவர் திருமதி. பத்மா வெடவவின் ஆதரவில் இடம் பெற்றது.

# ஊவாவில் ஏழ்மை இது ரணிலின் பார்வை



ஊவா மாகாணத்தை ஏழ்மையான மாகாணமாக அரசாங்கம் மாற்றி இருப்பதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் செயற்பாடுகளால் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மகியங்கனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போது அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் எதிர்வரும் ஊவா மாகாண சபைத் தேர்தலில் பொது மக்கள் அரசாங்கத்துக்கு வாக்களிப்பதை தவிர்க்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

# அரசுக்கு எதிரான சதி கூட்டமைப்பு மீது கண்டனம்

நாட்டுக்கு எதிரான பாரிய சூழ்ச்சிகளை ஆளும் கட்சியினரும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் முறியடிப்பர் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்துக்கும் நாட்டுக்கும் எதிராக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சூழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், வடமாகாண சபையும் அரசாங்கத்துக்கு எதிரான வெளிநாட்டு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டு, அவற்றை ஊக்கப்படுத்துகின்றன.

இன்னும் பல குழுக்களுக்கு அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் விரைவில் அகற்றுவதற்காக நிதியளிக்கப்படுவதாகவும் அமைச்சரை மேற்கோள் காட்டி ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது

# "அறுவடையை பகிர்ந்து ஒன்றிணைவோம்"

### மகிந்தவின் எண்ணக்கருவுக்கு மவுசு



தெற்காசிய நாடுகளுக்கு இடையில் 'அறுவடையை பங்கீடு செய்து ஒன்றிணைவோம் என்ற வாசகம், எதிர்வரும் தெற்காசிய மாநாட்டிற்கான தொனிப் பொருளாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொனிப் பொருளை ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷவே வழங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

18வது தெற்காசிய நாடுகளின மாநாடு எதிர்வரும் நொவம்பர் மாதம் 22ம திகதி முதல் 27ம் திகதி வரையில் நேபாலத்தில் நடைபெறவுள்ளது.

இதன் பொருட்டு கலந்துரையாடுவதற்காக அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த தெற்காசிய நாடுகளின் செயலாளர், ஜனாதிபதியை சந்தித்த போது ஜனாதிபதி இந்த தொனிப் பொருளை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குருக்கள் மடம் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் மீண்டும் இன்று



கோப்புப் படம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு குருக்கள் மடத்தில காணப்படுவதாக கூறப் படும் மனிதப் புதைகுழியின் அகழ்வுப் பணிகள் மீண்டும் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.

நீதிமன்ற உத்தரவிற்கமைய அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமற் போனோர் தொடர்பில் விசாரணைகளை மேற கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பிரதிநிதி ஒருவரும் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டப்ளியூ குணதாச குறிப்பிட்டார்.

ஆணைக்குழுவின் பகிரங்க விசாரணைகள் காத்தான்குடியில் அண்மையில் இடம் பெற்றப் போது மனித புதைகுழி தொடர்பான முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

கிடைத்த முறைப்பாட்டின் உண்மைத் தன்மையை உறுதி செய்யும் நோக்கிலே தமது பிரதிநிதி அகழ்வுப் பணிகளில் கண்காணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் ஆணைக்குழுவின் செயலாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# காத்திருக்கிறது ஆபத்து ஆண்டு இறுதியில் அனர்த்தம்

2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமியை விடவும் பாரியளவில் அழிவுகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் இறுதியில். இவ்வாறு பாரிய இயற்கைப் பேரழிவு ஒன்று இடம் பெறக் கூடிய சாத்தியம் காணப் படுவதாக உலக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

எல்னினோ என்ற கடுமையான புயற்காற்றின் சீற்றம் இலங்கை உள்ளிட்ட ஆசிய நாடுகளை பாதிக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது.

புயல் காற்றினால் ஆசிய கண்டத்தின் இலங்கை, இந்தோனேசியா, இந்தியா போன்ற நாடுகளின் வெப்ப நிலை உயர்ந்து பாரியளவில் வறட்சி ஏற்படக் கூடும். தென் அமெரிக்க நாடுகளில் கடுமையான வெள்ளப் பெருக்கு ஏற்படக் கூடும். காலநிலை சீர்கேட்டின் பாதிப்புக்கள் இந்த ஆண்டு டிசம்பர் மாதம் முதல் அடுத்த ஆண்டின் செபரெம்பர் மாதம் வரையில் நீடிக்கும். இயற்கை அனர்த்தம் காரணமாக இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரம் பின்னடைவை எதிர்நோக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இயற்கை அனர்த்தம் தொடர்பில் ஆளும் கட்சியின் கட்சித் தலைவர் கூட்டத்திலும் பேசப் பட்டுள்ளது.

இயற்கை அனர்த்த நிலைமை தேசிய ரீதியான தேர்தல்களையும் மோசமாக பாதிக்கும் என கூட்டத்தில் பங்கேற்ற அமைச்சர் விமல் வீரவன்ச சுட்டிக்காட்டியுள்ளார்.

# சொகுசு ரயில் சேவை திங்கள் முதல் ஆரம்பம்

கொழும்புக்கும் பளைக்கும் இடையிலான விசேட சொகுசு ரயில சேவை ஒன்று அடுத்த வாரம ஆரம்பிக்கப்படவுள்ளது.

விசேட இருக்கை வசதிகளுடனும் குளிரூட்டப்பட்ட இணைப்பு பெட்டியில் இந்த சேவை எதிர்வரும் திங்கள் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ரயில் சேவைக்கு இணைப்பு பஸ் சேவையும் உண்டு



மனோஜ் எக்ஸ்பிரஸ் சேர்விஸஸ் நிறுவனம் இந்தச் சேவையை ஆரம்பிக்க உள்ளது இதற்கான ஆசனப் பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையில்

# நோயாளர் வருகை அதிகரிப்பு

## நெருக்கடியை தவிர்க்க கோரிக்கை

(சுன்னாகம்)

தெல்லிப்பளை ஆதார வைத தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால் விடுதிகளில தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் நெருக்கடிகளை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக இவ்வைத்திய சாலையில் நாளாந்தம் அதிகளவான நோயாளர்கள் வருகை தருகின்ற நிலையில் இவர்கள் சிகிச்சை பெறுவதற்கு முன்னதாக பதிவிற்காக வெளிநோயாளர் பிரிவில் நீண்ட நேரம் காத்திருப்பதாகவும் பதிவின் பின்னரே சிகிச்சை பெறுவதாகவும் எனினும் அங்கும் நீண்டநேரம் நின்றே சிகிச்சையை பெற வேண்டியிருப்பதாகவும் நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனினும் பதிவுகளை மேற்கொள்வதற்கு ஏதுவாகவேனும் 2 அல்லது 3 ஊழியர்கள் கடமையில் ஈடுபட்டால் நெருக்கடி நிலையினை ஓரளவேனும் தவிர்த்துக் கொள்ளமுடியும் என நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை வெளிநோயாளர் பிரிவில் நீண்ட வரிசையில் நிற்கும் நிலையில் தாமதமாக வரும் நோயாளர்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி தமக்கு முன்பாக செல்வதாகவும் இதனால் தாம் சினமடைவதாகவும் நோயாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே நோயாளர்களின் நெருக்கடியை தவிர்க்கும் வகையில் வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என நோயாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று....

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் ஆன்மீக சிந்தனையும் சமயச் சொற்பொழிவும் கலைநிகழ்வுகளும் தினமும் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

இதில் 18 ஆம் திருவிழாவான இன்று 'அறம் செய்ய விரும்பு' என்னும் விடயம் பற்றி இளம் சைவப்புலவர் க.கைலைநாதன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து வட்டுக்கோட்டை ஸ்ரீ கண்ணகி அம்மன், மட்டுவில் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் இடம் பெறும்.

♦♦♦

நல்லூர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கு நிகழ்வு தினமும் மாலை 6.45 மணி முதல் 8.15 மணிவரை நடைபெற்று வருகிறது.

இதில் 18 ஆம் திருவிழாவான இன்று திருமதி நவமணி பத்மநாதன் வழங்கும் பாட்டு, இசையரங்கம் பக்கவாத்தியம் சகிதம் இடம்பெறவுள்ளது.(42)

## முரசின் இன்றைய பலன்

(18.08.2014 திங்கட்கிழமை)



ஐய வருஷம் ஆவணி மாதம் 02 ஆம் திகதி.
மரணயோகம் / அட்டமி. கிருஷ்ண ஜெயந்தி.
கார்த்திகை நட்சத்திரம் பி.ப. 05.26 வரை. பின் ரோகினி.
இராகு காலம் 07.35 - 09.05 வரை. சுபநேரம் 12.05 - 01.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மழக்கனினி மூலம் விவாக ஜாதகங்களை தேட முற்படுவீர்கள், தொடர் கவலைகளைச் சகிக்க முடியாது சுடலைஞானம் பிறந்து விடல். |
| ரிஷபம் | குருதி அழுக்க கணிப்பீடு வைத்தியசாலைகளில் மாறுபாடாக இருப்பதை எண்ணி விசனப்படல், பணிகளில் ஏற்பட்ட தேக்கம் புதிய யுக்தியைக் கையாண்டதினால் அற்றுப்போதல். |
| மிதுனம் | திருமண விடயத்தில் புரோக்கரைக்கைவிட்டு இருபகுதியும் இணைந்து கொண்டமையால் ரகளை உருவாதல், செவ்வாய்க்குற்றம் சம்பந்தமாக சோதிடர் மத்தியில் கருத்து வேறுபாடு கண்டு மனக்கிலேசம் அடைதல். |
| கடகம் | வேலைப்பளுவில் மூழ்கியதால் தேகசுகம் உளநலமும் பாதிக்கப்படல், மருத்துவரின் விளக்கமும் அன்பான வார்த்தைகளையும் கேட்டதால் நோய் பற்றிய அச்ச நிலை அற்றுப்போதல். |
| சிம்மம் | வீண் விவகாரங்களில் தலையிடாது இருப்பதினால் வில்லங்கம் வந்தடையாது விடும், சொத்து தொடர்பான விடயம் முடிவுபெறாது இழுபறிநிலையைத்தக்க வைக்கும். |
| கன்னி | அச்ச மூட்டிக்கொண்டிருந்த நபர் அயல்நாடு சென்றதால் நிம்மதிபெறல், ஆலய வழிபாட்டுக்கு அழைத்துச் சென்ற பிள்ளையைத் தவறவிட்டு பின் கண்டு பிடித்தல். |
| துலாம் | குடும்பப்பிரச்சினையைப் பேசித்தெளிவுபடுத்திக் கொள்வது நன்மைதரும், தவறிழைக்க முயன்ற கன்னியை புத்திமதி கூறி ஒழுக்கத்தின் உயர்வை எடுத்துரைத்தல். |
| விருச்சிகம் | வெளியூர் பயணத்திற்காக முகவரிடம் கொடுத்த பணத்தைப்பெற காவல்துறையை நாடுதல், விட்டுக் கொடுக்காத ஈகோ வினால் குடும்பகளின் நிலை பாதிக்கப்படல். |
| தனுசு | புதிய அறிமுகம் எதிர்ப்பட்டபோது பேச்சுக்கொடுத்ததில் முரண்பாடான தகவல் வெளிவந்தது கண்டு காய் வெட்டிவிடல், நோய் குணமடையும் அறிகுறி கண்டதால் ஆனந்தமடைதல். |
| மகரம் | குடும்ப கௌரவத்தை நினைத்து ஏற்பட்ட அவமானத்தை வெளியிடாது தாங்கிக்கொள்ளல், பெற்றோரின் புத்திமதியைக் கேட்டதால் நாடிவந்த உறவினைக் கைவிட்டு விடல். |
| கும்பம் | நீண்டநாட்களாக இழுபறியாக இருந்துவந்த பிரச்சினை தெய்வசெயலாக தீர்வு பெறல், அநாமதேயக் கடிதம் வந்ததால் குடும்பத்தின் கவி நிலை கெட்டு சந்தேக கோடு ஏற்படல். |
| மீனம் | பாசாங்கு செய்பவரின் மனதை எண்ணிப்பாராது கடன்கொடுத்தமை நினைத்து துயரடைதல், ஆசிரிய மாணவ உறவுப்பாலம் நன்கமைந்ததினால் கல்விப்புலம் சிறப்படைதல். |

# குடிநீரின்றி மக்கள்தவிப்பு

(மண்டைதீவு)

மண்டைதீவு கிராமத்தில் கடும் வறட்சியால் குடிநீருக்கு மட்டுமன்றி தண்ணீருக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இக்கிராமத்திலுள்ள நீர் நிலைகளில் தண்ணீர் வற்றியுள்ளதால் கால்நடைகளும் நீரின்றி இறக்கும் அவலநிலையும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை வேலணை பிரதேச சபை இக்கிராம மக்களுக்கென பௌசர் மூலம் குடிநீரை விநியோகித்து வரும் நிலையில் அவை போதுமானதாக இல்லை எனவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (23)


# இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய தேர்த்திருவிழா இன்று நடைபெறவுள்ளது. முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு சுவாமி தேரில் எழுந்தருளி திருவீதி உலா வரும் காட்சி இடம்பெறும்.

பிற்பகல் 1.30 மணிக்கு உறியடி உற்சவமும் இரவு 12 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறும். நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு சுவாமி தீர்த்தமாட திருவடிநிலைக்கு மஞ்சத்தில் புறப்படுவார். (10)

# நல்லைக் கந்தனுக்கு இன்று 18 ஆம் திருவிழா



## காரிருள் விலகிடும்!

:பல்லவி:
ஆவலாய் மனமே தினமும்
சேவல்கொ டியழகனைச் சேருவாய்...
(ஆவலாய்...)

:அனுபல்லவி
கூப்பிட்ட வேளையில் குமரனவன்
ஆட்பட்டு அருள்பா லித்திடுவான்...
(ஆவலாய்...)

:சரணங்கள்:
நல்லை என்றிலாக் கதிர்காமம், சந்நிதி
தொல்லை களையத் தோழ்தந்து நிற்பான்
முல்லை மக்கள் முன்னின்று காத்தோன்
எல்லை இலாவெம் தேவைகள் தீர்ப்பான்...
(ஆவலாய்...)

போரதில் தொலைந்த பொற்புறு நிலைதனை
வேரடி நிலத்துள் வேராகக் காத்தருள்
நேரத்து எமக்கும் நேர்கதி தீர்ப்பான்
பாரதில் தமிழினம் பாற்கடல் துய்க்குமாம்...
(ஆவலாய்...)

மொழிமதம் இரண்டும் மோதிடும் காரிருள்
வழியதை விலக்கி வளமொடு மனுக்குலம்
கழிகொளும் காலம் கனிந்திட வேண்டும்
எழிலதாய் எம்மண் இலங்கிடக் காணும்...
(ஆவலாய்...)

-கவிமணி பரமகவி-

## கோடி நமஸ்காரம்!

வேலாட சுற்றி வரும் கடலு மாடும்
ஓதமெழுந்து வேதம் ஓதும்
முருகா வெனும் மந்திரம் கண்டுதொடி
அருகாக வாழ்வோரும் வந்துன்
திருப்பாத (போது) கண்டு தீர்வர் துயர்
மருங்ககலா வள்ளி தெய்வானை
காதலா காணகண்பதினாயிரம் தா
உன்கோடி சூரிய பிரகாசம் நான் காணவே.

-மண்டைதீவு மகிழ்நன்-

## குறைதீர்க்கும் முருகா!

நல்லூர் அசையா மணியோசை நாள்தோறும்
அல்லகலும் போதில் அசைந்துவரச் - சொல்முருகா
வாயில்வர வாழ்த்தி வழிபடவே நல்லூரான்
கோயிலுக்குப் போம்போங் குறை.

தண்டா யுதங்கை தரித்ததுதோள் வாகைத்தார்.
கொண்டகொடி சேவல் குலவுமயில் - தண்டா
மரையின் சிவந்த மலர்முகநல் லூரா
விரைவாய் அருள்வாய் விருது.

-நல்லூர்கந்தன் பாமாலை-

## திருமால் மருகனே!

முருகனே நல்லூர் முதல்வனே வள்ளிமணாளனே!
திருமால் மருகனே சேவற் கொடியோனே சரவணனே!
ஒருக்கால் உன்கோயில் வலம்வந்தே பணிந்தால்
இருக்காது எம் வினையே எழில் நல்லூரானே சரணம்!

-கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்-

# நிறைவுக்கு வந்தது மஹேலவின் இனிங்ஸ்



இலங்கை அணியின் முன்னாள் கப்டன் மஹேல ஜெயவர்த்தன பாகிஸ்தானுக்கு எதிரான தொடரோடு டெஸ்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார்.

பாகிஸ்தான் இலங்கை அணிகள் மோதும் 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கொழும்பில் நடைபெற்று வருகிறது. இது ஜெயவர்த்தனயின் கடைசி டெஸ்ட் ஆகும். முதல் இனிங்ஸில் அவர் 4 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். 2ஆவது இனிங்ஸில் 54 ஓட்டங்கள் எடுத்தார். இந்த இனிங்ஸுடன் அவரது டெஸ்ட் சகாப்தம் முடிந்தது.

37 வயதான ஜெயவர்த்தன 1997ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இந்தியாவுக்கு எதிராக கொழும்பில் நடைபெற்ற டெஸ்டில் அறிமுகம் ஆனார். 149 டெஸ்டில் விளையாடி மஹேல 11,814 ஓட்டங்கள் எடுத்துள்ளார். சராசரி 49.84 ஆகும். 34 சதமும், 50 அரைசதமும் அடித்துள்ளார். தென்னாபிரிக்காவுக்கு எதிராக 2006ஆம் ஆண்டில் ஒரு இனிங்ஸில் 374 ஓட்டங்கள் குவித்ததே அதிகபட்ச ஓட்டமாகும்.

டெஸ்டில் அதிக ஓட்டங்கள் எடுத்த 2ஆவது இலங்கை வீரர் ஜெயவர்த்தன ஆவார். சங்கக்கார முதல் இடத்திலுள்ளார். சர்வதேச அளவில் அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்களில் அவர் 7ஆவது இடத்திலுள்ளார். ஜெயவர்த்தன இலங்கை அணிக்கு 38 டெஸ்டில் (2006-13) கப்டனாக இருந்துள்ளார். இதில் 18இல் வெற்றிகளும், 12 டெஸ்டில் தோல்விகளும், எட்டு சமநிலைகளும் ஆகும்.

# எஸ்.எஸ்.சி. துளிகள்...

- கொழும்பில் நடைபெற்று வரும் பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டெஸ்டியின் முதல் இனிங்ஸில் இலங்கை இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் 33.1 ஓவர்களில் 127 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 9 விக்கெட்டுக்களை அள்ளினார். இதன் மூலம் இடக்கை பந்துவீச்சாளர்களில் ஒரு இனிங்ஸில் அதிக விக்கெட்டுக்களை சாய்த்த வீரர் என்ற அபூர்வமான சிறப்புக்குச் சொந்தக்காரர் ஆனார். இதற்கு முன்பு 1889ஆம் ஆண்டு இங்கிலாந்து இடக்கை சுழற்பந்து வீச்சாளர் ஜொனி பிரிக்ஸ் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 11 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து 8 விக்கெட் எடுத்ததே இந்த வகையில் உலக சாதனையாக இருந்தது. 125 ஆண்டு காலமாக ஜொனி பிரிக்ஸ் வசம் இருந்த இச்சாதனையை 36 வயதான ஹேரத் முறியடித்தார்.
- 137 ஆண்டுகால டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களுக்கு மேல் வீழ்த்தப்படுவது இது 18ஆவது நிகழ்வாகும். இதில் இங்கிலாந்தின் ஜிம் லாகெர், இந்தியாவின் அனில் கும்ளே ஆகியோர் இனிங்ஸில் தலா 10 விக்கெட்டுக்களை வீழ்த்தியதும் அடங்கும்.
- சுழற்பந்து வீச்சு ஜாம்பவான் முரளிதரனுக்கு பின்னர் (2 முறை 1998ஆம் ஆண்டு மற்றும் 2002ஆம் ஆண்டுகளில்) இனிங்ஸில் 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய 2ஆவது இலங்கை பந்து வீச்சாளர் என்ற சிறப்பையும் ஹேரத் பெற்றார்.
- பாகிஸ்தானுக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய இலங்கை பந்துவீச்சாளர் என்ற பெருமையை முரளிதரனிடம் (16 டெஸ்டில் 80 விக்கெட்) ஹேராத் தட்டிப்பறித்துள்ளார். அவர் அந்த அணிக்கு எதிராக இதுவரை 17 டெஸ்டில் விளையாடி 83 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிருக்கிறார். மொத்தத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக நிறைய விக்கெட்டுக்கள் எடுத்தவர்களின் வரிசையில் இந்தியாவின் கபில்தேவ் (29 டெஸ்டில் 99 விக்கெட்), அவுஸ்ரேலியாவின் ஷேன் வோர்ன் (15 டெஸ்டில் 90 விக்கெட்) ஆகியோருக்கு அடுத்த இடத்தில் ஹேராத் உள்ளார்.
- டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்துள்ள வீரர்களின் பட்டியலில் வெஸ்ட் மேற்கிந்தியத்தீவுகளின் பிரையன் லாராவை (11,953 ஓட்டங்கள்) பின்னுக்கு தள்ளிவிட்டு 5ஆவது இடத்தைப் பிடித்துள்ள இலங்கையின் சங்கக்கார (128 டெஸ்டில் 11,988 ஓட்டங்கள்) இன்னும் 12 ரன்கள் எடுத்தால் 12 ஆயிரம் ஓட்டங்கள் மைல்கல்லை எட்டிய 5ஆவது வீரர் என்ற பெருமையை பெறுவார்.
- கொழும்பு டெஸ்ட் போட்டியின் இரண்டாவது இனிங்ஸில் சங்கக்காரவும், ஜெயவர்த்தனவும் 3ஆவது விக்கெட்டுக்காக 107 ஓட்டங்கள் சேர்த்துள்ளனர். ஒட்டுமொத்தத்தில் இவர்கள் ஜோடியாக டெஸ்ட் கிரிக்கெட்டில் இதுவரை 119 இனிங்ஸில் 6,518 ஓட்டங்கள் குவித்துள்ளனர். இதன் மூலம் டெஸ்டில் ஜோடியாக அதிக ஓட்டங்கள் எடுத்து 2ஆவது இடம் வகித்த மே.தீவுகளின் தேஸ்மான்ட் ஹெய்ன்ஸ்-கார்டன் கிரீனிட்ஜ் (148 இனிங்ஸ் 6,482 ஓட்டங்கள்) ஆகியோரை முந்தி விட்டனர். முதலிடத்தில் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கர்-ராகுல் ராவிட் கூட்டணி (143 இன்னிங்சில் 6,920 ஓட்டங்கள்) உள்ளது.

# தோல்வியைத் தவிர்க்க பாகிஸ்தான் போராட்டம்

இலங்கை அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியைத் தவிர்க்க பாகிஸ்தான் அணி போராடி வருகின்றது.

இலங்கை பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதி ஆட்டம் கொழும்பு எஸ்.எஸ்.சி.யில் நடைபெற்று வருகின்றது. இரண்டாவது இனிங்ஸிற்காக இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. மூன்றாவது விக்கெட்டுக்காக மஹேல, சங்கா இணை நிதானமாக ஆடியது. இந்த ஜோடி 107 ஓட்டங்களைப் பெற்ற வேளை பிரிக்கப்பட்டது. . தொடர்ந்து அரைச் சதம் கடந்து அசத்திய மஹேல ஆட்டமிழந்து வெளியேற்றியதைத் தொடர்ந்து இலங்கை அணியின் விக்கெட்டுக்கள் வேகமாக சரிக்கப்பட்டன. இருப்பினும் ஒரு முனையில் கப்டன் மத்தியூஸ் போராடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தார். இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 282 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இறுதி இனிங்ஸில் ஆடிய மஹேல ஜெயவர்த்தன 137 பந்துகளை எதிர்கொண்டு எட்டு பவுண்டரிகள் அடங்லாக 52, சங்கக்கார 130 பந்துகளை எதிர்கொண்டு நான்கு பவுண்டரிகள் அடங்கலாக 59, தரங்க 45 ஓட்டங்களைப் பெற்றனர். கப்டன் மத்தியூஸ் 119 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 45 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சயிட் அஜ்மல், வாகப் றியஷ் ஆகியோர் தலா மூன்று, ரஹ்மான் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு 270 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவதுஇனிங்ஸிற்காக ஆடிவரும் பாகிஸ்தான் அணி ஹேரத்தின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த அசாட் ஷாகிப், அகமட் இணை பொறுப்புடன் ஆடியபோதிலும் நீண்டு நிலைக்கவில்லை. இந்த ஜோடி 55 ஓட்டங்களைப் பெற்றவேளை பிரிக்கப்பட்டது. இறுதியில் நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தவேளை, பாகிஸ்தான் அணி இரண்டாவது இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில் அகமட் ஆட்டமிழக்காது 38 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் அசாட் ஷாகிப் 32, அசார் அலி 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஹேரத் நான்கு, பிரசாத் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். மூன்று விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் பாகிஸ்தான் அணி வெற்றிபெற இன்னும் 144 ஓட்டங்களைப் பெறவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கை முதல் இனிங்ஸ் 320. பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் 332. இன்று போட்டியின் இறுதி நாளாகும்.

# இங்கிலாந்து முதல் இனிங்ஸ் 486

(லண்டன்)

இந்திய அணிக்கெதிரான இறுதி டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 486 ஓட்டங்களைப் பெற்றது. இரு அணிகளுக்குமிடையிலான இறுதி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் நடைபெற்று வருகின்றது.

முதல் இனிங்ஸிற்காக ஆடிய இந்திய அணி 148 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 486 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரூத் ஆட்டமிழக்காது 149, பட்லர் 45, புரொட் 37 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் இசாந், சர்மா நான்கு அஸ்வின் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

338 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக இந்திய அணி ஆடி வருகின்றது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

# முத்தரப்புத் தொடர்; வட்சன் விலகல்

(பிரிஸ்பேன்)

அவுஸ்ரேலிய அணியின் சகலதுறை வீரர் ஷேன் வட்சன், கணுக்கால் காயம் காரணமாக, சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் இருந்து விலகினார்.

சிம்பாப்வே செல்லவுள்ள அவுஸ்ரேலிய அணி, முத்தரப்பு ஒருநாள் தொடரில் பங்கேற்கவுள்ளது. மூன்றாவது அணியாக தென்னாபிரிக்கா விளையாடுகிறது. ஹராரேயில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ள முதல் போட்டியில் சிம்பாப்வே, அவுஸ்ரேலிய அணிகள் மோதவுள்ளன. இத்தொடருக்கான அவுஸ்ரேலிய அணியில் வட்சன் இடம் பெற்றிருந்தார். பிரிஸ்பேனில் நேற்று முன்தினம் நடைபெற்ற பயிற்சியின் போது, வட்சனின் வலது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. இதனையடுத்து இவர், சிம்பாப்வே தொடரில் இருந்து விலக வேண்டியதாயிற்று. இவருக்கு பதிலாக பிலிப் ஹியுஸ் தேர்வு செய்யப்பட்டார்.

இதுகுறித்து கிரிக்கெட் அவுஸ்ரேலியா கிரிக்கெட் சபை (சி.ஏ.,) வெளியிட்ட அறிக்கையில், பயிற்சியின் போது வலது கணுக்காலில் காயமடைந்த வட்சன், சிம்பாப்வேயில் நடக்கும் முத்தரப்பு ஒருநாள் தொடரில் இருந்து நீக்கப்பட்டார். சிட்னியில் காயத்துக்கு சிகிச்சை மேற்கொள்ளவுள்ள இவர், ஐக்கிய அரபு எமிரேட்சில் (யு.ஏ.இ.,) நடைபெறவுள்ள தொடருக்கு தயாராக உள்ளார். சிம்பாப்வே தொடரில், இவருக்கு பதிலாக பிலிப் ஹியுஸ் தேர்வு செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

# இறுதிக்கு முன்னேற்றம்

(சின்சினாட்டி)

அமெரிக்காவில் உள்ள சின்சின்னாட்டி நகரில் சர்வதேச ரென்னிஸ் போட்டி நடைபெற்று வருகிறது. இதில் ஆண்கள் இறுதிப்போட்டியில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) டேவிட் பெரர் (ஸ்பெயின்) மோதவுள்ளனர். பெடரர் அரையிறுதியில் 6-2, 6-3 என்ற கணக்கில் ரோனிக்கை (கனடா) வீழ்த்தினார்.

பெண்கள் இறுதிப் போட்டியில் செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) இவானோவிக் (சேர்பியா) மோதவுள்ளனர். செரீனா அரையிறுதியில் 2-6, 6-2, 6-4 என்ற கணக்கில் வோஸ்னியாக்கியையும், இவானோவிக் 6-2, 7-5, 7-5 என்ற கணக்கில் ஷரபோவாவையும் தோற்கடித்தனர்.

# கோடிகளில் புரள்வதில் என்றும் ராணி நீயே

அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனைகள் வரிசையில் தொடர்ந்து 10ஆவது ஆண்டாக முதலிடத்தில் இருந்து வருகிறார் ஷரபோவா.

ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரியா ஷரபோவா, (வயது-27). பிரெஞ்ச் ஓப்பனில் 2, அவுஸ்ரேலிய ஓப்பன், விம்பிள்டன், யு.எஸ். ஓப்பனில் தலா 1 என, மொத்தம் 5 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார். இவர், போர்ப்ஸ் பத்திரிகை வெளியிட்ட அதிகம் சம்பாதிக்கும் விளையாட்டு வீராங்கனைகள் பட்டியலில் முதலிடம் பெற்றுள்ளார். கடந்த 2013 யூன் முதல் 2014 யூன் வரையிலான காலத்தில் விளம்பர வருமானம் மற்றும் பரிசுத் தொகை என ஆண்டுக்கு 148 கோடி சம்பாதித்துள்ளார்.

இந்த ஆண்டு காயம் காரணமாக அதிக போட்டிகளில் பங்கேற்காத இவருக்கு, டென்னிஸ் தொடர்களின் உதவியால் ரூ. 15 கோடி மட்டும் தான் கிடைத்தது. இருப்பினும், பல்வேறு விளம்பர ஒப்பந்தங்கள் மூலம் ரூ. 133 கோடி கிடைத்துள்ளது.

143 கோடி சம்பாதித்த சீனாவின் லி நா இரண்டாவது இடத்தில் உள்ளார். அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (ரூ. 135 கோடி) மூன்றாவது இடம் பெற்றுள்ளார். தென் கொரியாவின் பிகர் ஸ்கேட்டிங் ஒலிம்பிக் சம்பியன் கிம் யுனா (ரூ. 99 கோடி), அமெரிக்க ரேசிங் டிரைவர் டேனிகா ரூ. 91 கோடி) 4, 5ஆவது இடத்தில் உள்ளனர். ரென்னிஸ் வீராங்கனைகள் பெலாரசின் அசரன்கா (ரூ. 68 கோடி), டென்மார்க்கின் வோஸ்னியாக்கி (ரூ. 61 கோடி), போலந்தின் ரத்வன்ஸ்கா (ரூ. 43 கோடி), சேர்பியாவின் இவானோவிச் (ரூ. 39 கோடி) 6 முதல் 9 இடங்களை பிடித்தனர். கலிபோர்னியாவின் கோல்ப் வீராங்கனை கிரீமர் (ரூ. 33 கோடி) 10ஆவது இடத்தில் உள்ளார்.



# கிண்ணம் வென்றது சண்டிலிப்பாய் வசந்தசிறி



ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரின் பி பிரிவுக்கான இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் சண்டிலிப்பாய் வசந்த சிறி அணியும் மட்டுவில் மோகனதாஸ் அணியும் மோதிக் கொண்டன. முதலிரு செட்களையும் சண்டிலிப்பாய் வசந்த சிறி அணி 25-16, 25-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிக்கொண்டது. மூன்றாவது சுற்றில் எழுச்சிபெற்ற மட்டுவில் மோகனதாஸ் அணி 25-19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இந்நிலையில் அடுத்த செட்டையும் மட்டுவில் மோகனதாஸ் அணி கைப்பற்றும் என எதிர்பார்க்கப்பட்டது. இதன் பின்னர் எழுச்சி பெற்ற சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 25-10 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. இறுதியில் சண்டிலிப்பாய் வசந்தசிறி அணி 3-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. இப்போட்டித் தொடரின் ஏ பிரிவுக்கான இறுதிப் போட்டி நேற்று இரவு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

## விளையாட்டுச் செய்திகள்

# இன்றைய ஆட்டம்

கிளிநொச்சி மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழா இன்று பிற்பகல். 2.00 மணிக்கு கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கரைச்சி, பளை, கண்டாவளை, பூநகரி பிரதேச செயலகங்களைச் சேர்ந்த வீர.வீராங்கனைகள் முட்டி மோத வுள்ளதுடன் தடகளம் மற்றும் வினோத உடைப் போட்டிகள் நடைபெறவுள்ளன. கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் ராஜா ரணசிங்க ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளார்.

## தேசிய மட்ட விளையாட்டு விழா

# 11 குழுப் போட்டிகளுக்கு பருத்தித்துறை மெதடிஸ் தகுதி

(வடமராட்சி)

பாடசாலைகளுக்கிடையிலானதேசிய மட்ட பெருவிளையாட்டுப் போட்டிகளுக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 11 பிரிவுகளுக்குத் தகுதி பெற்று அசத்தியுள்ளது.

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் விளையாட்டுப் பிரிவினால் நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் நிறைவடைந்தன. இந்நிலையில் பாடசாலைகளுக்கிடையிலானதேசிய மட்டப் போட்டிகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன. இந்நிலையில் மாகாண மட்டப் போட்டிகளில் அசத்திய பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாட-சாலை அணி 11 குழுப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ளது.

வடமாகாண மட்டத்தில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டம், 15 வயதுப் பிரிவு மேசைப்பந்தாட்டம், 15 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டம், 19 வயதுப் பிரிவு சதுரங்கம், 15 வயதுப் பிரிவு சதுரங்கம் ஆகிய போட்டிகளில் சம்பியன் பட்டத்தையும், 19 வயதுப் பிரிவு கபடி, 17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்டம், 15 வயதுப் பிரிவு பூப்பந்தாட்டம் ஆகிய போட்டிகளில் இரண்டாமிடத்தையும், 19 வயதுப் பிரிவு பூப்பந்தாட்டம், 17 வயதுப் பிரிவு கரப்பந்தாட்டம், 15 வயதுப் பிரிவு கபடி ஆகிய போட்டிகளில் மூன்றாமிடத்தையும் பிடித்து அசத்தியுள்ளது.

வீராங்கனைகளின் ஆற்றல்களின் மூலம் இந்த அரிய வாய்ப்பை எமது பாடசாலை பெற்றுக்கொண்டது. எனவே, தேசிய மட்டப் போட்டிகளில் எமது வீராங்கனைகள் சாதனை புரிவார்கள் என்ற நம்பிக்கை எமது பாடசாலை சமூகத்திற்கு உள்ளது. அத்துடன் தேசியப் போட்டிகளில் இந்த வீராங்கனைகள் சாதிக்க வேண்டும் என நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் என பருத்தித்துறை மெதடிஸ்த உயர் தரப் பாடசாலை குழாம் வாழ்த்துத் தெரிவித்துள்ளது. (01)

# மாபெரும் தாச்சிப் போட்டி

## அரையிறுதியில் சிந்து, காளியம்பாள்

(கைதடி)

யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதிக்கு ஆலடி சிந்து மற்றும் தாவடி காளியம்பாள் அணிகள் முன்னேறியுள்ளன.

இலங்கை வங்கி, வர்த்தக வங்கி, மக்கள் வங்கி ஆகிய வங்கிகளின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கம் நடாத்தும் 18ஆவது மாபெரும் தாச்சிப் போட்டி கைதடி விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெற்று வருகின்றது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் உடுவில் புதுமடம் வைகரை அணியும் ஆலடி சிந்து அணியும் மோதின. இரு அணிகளுமே ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் மோதிக் கொண்டன. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆலடி சிந்து அணி 9-7 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் தாவடி காளியம்பாள் அணியும் பண்டத்தரிப்பு அறிவொளி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தாவடி காளியம்பாள் அணி 12-07 என்ற பழம் அடிப்படையில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

இதேவேளை, எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் முதலாவது அரையிறுதிப் போட்டியில் சாந்தை விநாயகர் அணியும் தாவடி காளியம்பாள் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (48)

# பலாலி விண்மீனின் கால்பந்தாட்டம் அரையிறுதி ஆட்டங்கள் இன்று ஆரம்பம்

(நெல்லியடி)

தும்பளை நற்கருணையுள்ளம் நற்பணி மன்ற அனுசரணையுடன் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் வல்வை றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

அணிக்கு ஏழு பேர் கொண்ட இக் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் விலகல் முறையில் நடாத்தப்பட்டன. இதில் 15, 16ஆம் திகதிகளில் வெற்றியீட்டிய அணிகள் விபரம் வருமாறு:

15ஆம் திகதி நடைபெற்ற முதல் போட்டியில் யங்கமன்ஸ் அணியும் நவஜீவன் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய உடுப்பிட்டி நவஜீவன் அணி 4-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் ஊரெழு றோயல் அணியும், இளவாலை ஹென்றிஸ் அணியும் மோதின. இதில் ஊரெழு றோயல் அணி 5-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இறுதியாக நடைபெற்ற போட்டியில் திக்கம் இளைஞர் அணியும் கரவைச்சுடர் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் திக்கம் இளைஞர் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் இன்றைய தினம் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (12)

# கால்பந்து தொடர் விரைவில் ஆரம்பம்

(தீவகம்)

தீவக கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை சென். ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டித் தொடர் விலகல் முறையில் நடைபெறவுள்ளதாகவும், இப்போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் எனவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மற்றும் ஆட்ட நாயகன், தொடர் நாயகன் விருதுகளும் வழங்கப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# பெண்கள் கரப்பந்தாட்டம் கிளிநொச்சி ஆதவன் சம்பியன்

(கிளிநொச்சி)

ஆதவன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை ஆதவன் அணி கைப்பற்றிக்கொண்டது.

இப்போட்டித் தொடரின் இறுதி ஆட்டம் கடந்த வாரம் ஆதவன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஆதவன் அணியும், விபுலானந்தா அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் ஆதவன் அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றது.

ஆண்களுக்கான இறுதிப் போட்டிக்கு புதிய பாரதி அணியும் இளந்தென்றல் அணியும் மோதவுள்ளன. லீக் அடிப்படையில் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் ஆதவன் அணி பங்குகொண்டது. இதில் புள்ளிகள் அடிப்படையில் புதிய பாரதி, இளந்தென்றல் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இப்போட்டி எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (81)

# அமிர்தலிங்கம் படுகொலைக்கு பிறகு...

- டி.பி.எஸ்.ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

1

மூன்னாள் எதிர்க்கட்சித் தலைவரான அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் அவரது சகாவான வெற்றிவேலு யோகேஸ்வரன் ஆகியோர் 1989 ஜூலை 13இல், புலிகளின் தாக்குதல் பிரிவு ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டபோது, விடுதலைப்





புலிகளைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உத்தியோகபூர்வ தூதுக்குழு ஒன்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ வின் அரசாங்கத்துடன் கொழும்பில் பேச்சுவார்த்தை ஒன்றில் ஈடுபட்டிருந்தது.

பிரேமதாஸ ஆட்சியினருக்கு அந்த படுகொலைச் சம்பவம் பெரிய சங்கடத்தை ஏற்படுத்தியது, அந்த குற்றச்சாட்டுக்கான பொறுப்பிலிருந்து எல்.ரீ.ரீ.ஈ யினை விடுவிப்பதற்கு அதுதான் முதலில் ஒரு உறுதியான பிரசாரத்தை முன்னெடுத்தது.

எனினும் காலப்போக்கில் எல்.ரீ.ரீ.ஈ தானே அந்தக் கொலைச் செயல்களைப் புரிந்ததாக வெளிப்படையாக ஏற்றுக் கொண்டதை கண்டபோது அரசாங்கத்தின் பரிதாபமான மூடிமறைக்கும் முயற்சி அம்பலமாகி, அதன்விளைவாக அதன் முகத்தில் கரி பூசப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ யின் பேச்சுவார்த்தைக் குழுவுக்கு அன்ரன் பாலசிங்கம் என்கிற பாலா அண்ணனும் அரசியல் பிரிவு தலைவரான யோகி என்கிற நரேன் யோகரட்ணமும் இணைத் தலைமை வகித்தார்கள். புலிகளின் பேச்சுவார்த்தை பிரதிநிதிகள், ஜனாதிபதி பிரேமதாஸ வுடனும் அவரது மூத்த அமைச்சர்கள் மற்றும் உயர் அரச அதிகாரிகள் ஆகியோருடனும் நேரடியாகப் பேசுவதற்கு கொழும்புக்கு பல பயணங்களை மேற்கொண்டிருந்தார்கள்.

பெரும்பாலான பேச்சு வார்த்தைகள் ஜனாதிபதி பிரேமதாஸவின் இல்லமான சுசரித்தவிலேயே நடைபெற்றது. எல்.ரீ.ரீ.ஈ குழுவினர் ஆரம்ப நாட்களில் ஹில்ரன் ஹோட்டலில் தங்கவைக்கப் பட்டு பின்னர் கலதாரி மெரிடியன் ஹோட்டலில் தங்கவைக்கப் பட்டார்கள். புலிகளின் சொற்பகால கொழும்பு வாசத்தின்போது, அவர்களின் பாதுகாப்புக்குப் பெறுப்பாக காவல்துறையின் விசேட படையணியினர்(எஸ்.ரி.எப்) நியமிக்கப் பட்டிருந்தனர்.

எல்.ரீ.ரீ.ஈ யைச் சேர்ந்த அலோசியஸ் ரி.யு.எல்.எப் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனைக் தொலை பேசியில் அழைத்து ரி.யு.எல்.எப் உடனான சந்திப்பிற்கான நேரத்தை மாற்றியபொழுது புலிக் கொலையாளி, யோகேஸ்வரனிடம் புலிகளின் அரசியல் பிரிவு பொறுப்பாளரான யோகி பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ளும் சாத்தியம் உள்ளது எனச் சொல்லியிருந்தான். ஆனால் உண்மையில் இறுதியில் வந்து, கொலைகளைச் செய்து, பின்னர் கொல்லப்பட்டது யோகி அல்ல விசு.

ரி.யு.எல்.எப் வீட்டில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்தவர்களுக்கு யோகி வரவிருக்கிறார் என்று யோகேஸ்வரனால் அறிவிக்கப் பட்டிருந்ததாலும், யோகி மற்றும் விசு ஆகியோரிடையே உள்ள வலுவான உருவ ஒற்றுமைகளினாலும் (இருவருமே கண்ணாடி அணிபவர்கள்) ஆரம்பத்தில் இந்தக் கொலையில் யோகி தொடர்பு பட்டிருந்தார் என ஊகிக்கப்பட்டது.

எல்.ரீ.ரீ.ஈ தங்களுக்கான பாதுகாப்பு எஸ்.ரி.எப் மூலமாகவே வழங்கப்பட வேண்டும், ஆயுதப் படைகளால் அல்ல என அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். வி.ஐ.பி க்களின் பாதுகாப்பில் நிபுணத்துவம் பெற்றிருந்த ஒரு எஸ்.ரி.எப் பிரிவு அந்த நோக்கத்துக்காக நியமிக்கப் பட்டிருந்தது. அதற்கு பொறுப்பான அதிகாரியாக நிமால் லூவாகே இருந்தார்.

பணியிலிருந்து தற்போது ஓய்வு பெற்றுவிட்ட டி.ஐ.ஜி நிமாலுக்கு, அப்போது அமிர்தலிங்கம் கொல்லப் பட்டது தொடர்பான செய்தி கிடைக்கும்போது அவர் கலதாரி ஹோட்டலில் இருந்தார். அதன் பின் என்ன நடந்தது என்பதை ஒரு மின்னஞ்சல் மூலமாக என்னிடம் அவர்


Anton Balasingham in conversation, on behalf of L... President Premadasa during the 1990 peace talks-pic courtesy:

நினைவு கூர்ந்தார்.

"எல்.ரீ.ரீ.ஈயின் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிய காலம்சென்ற அன்ரன் பாலசிங்கம், யோகி மற்றும் ஏனையவர்களின் பாதுகாப்புக்கு நான் பொறுப்பாக இருந்தேன். எல்.ரீ.ரீ.ஈ யின் வேண்டுகோளின்படியே எஸ்.ரி.எப் தெரிவு செய்யப்பட்டிருந்தது, மற்றும் போர்முனையில் அவர்களுக்கு எதிராக நாங்கள் ஒரு கசப்பான யுத்தத்தை நடத்திக் கொண்டிருப்பதால் அந்த பணி எங்களுக்கு கடினமான ஒன்றாக இருந்தது.

இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கேள்விப்பட்ட அந்தக் கணமே எல்லா எல்.ரீ.ரீ.ஈ தூதுக்குழு அங்கத்தவர்களும் ஹோட்டலுக்குள் இருக்கிறார்களா என்பதை நான் சரிபார்த்தேன். அவர்கள் அனைவரும் அங்கேயே இருந்தார்கள். என்ன நடந்தது என்பதை நான் அன்ரன் பாலசிங்கத்திடம் தெரிவித்தேன். அதைக்கேட்டு அவர்கள் ஒருவித குழப்பமும் அடையவில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். ஒரு வெறுமையான பார்வை மட்டுமே அவர்களின் பதிலாக இருந்தது.


நான் உடனடியாக சம்பவ இடத்துக்கு விஜயம் செய்து, பாதுகாப்பு கடமையிலிருந்தவர்களால் சுடப்பட்ட எல்.ரீ.ரீ.ஈ அங்கத்தவர்களைப் பார்வையிட்டேன். அவர்களது உடல்கள் வீட்டுக்குள் வைக்கப் பட்டிருந்தன. அப்போது மூ[illegible]காவல்துறை அதிகாரிகள் அங்[illegible] வந்தார்கள். அதில் உள்ளவர்களில் கண்ணாடி அணிந்தவர் (விசு), யோகி என்கிற தீர்மானத்தில் இருந்தார்கள், பார்க்கும்போது அவர் யோகியை போலவே இருந்தார், ஆனால் யோகியை நான் ஹோட்டலில் பார்த்தபடியால் அது யோகி அல்ல வேறு யாரோ என்று நான் மூத்த காவல்துறை அதிகாரிகளிடம் தெரிவித்தேன்".

"நான் திரும்பி வந்தபின் நான் பாலசிங்கத்திடம் பல கேள்விகளைக் கேட்டேன், ஆனால் அவர் கருத்து தெரிவிப்பதில் மிகவும் கவனமாக இருந்தார், அவர்களது இயக்கம் தங்களது முன்னேற்றத்துக்[illegible] அமிர்தலிங்கம் இடைஞ்சலா[illegible] இருப்பார் என ஏற்கனவே அடையாளம் கண்டுவிட்டதால், அவர்கள் அதைப்பற்றி கிஞ்சித்தும் கவலைப்படவில்லை என்கிற எண்ணத்தை அவருடைய போக்கு என்னுள் ஏற்படுத்தியது.

ஒரு விடயம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது, அவர்கள் அனைவரும் வெவ்வேறான பகுதிகளாக இயக்கப்படுகிறார்கள் மற்றும் அவர்களுக்கிடையில் தொடர்புகள் இல்லை, விசேடமாக உளவுத்துறை தளத்தில் பணியாற்றுபவர்கள் தங்கள் செயற்பாடுகளை திட்டமிட்டபடி நிறைவேற்றுகிறார்கள் மற்றவர்களுக்கு அது தெரிவதேயில்லை.

இல்லையென்றால் அரசாங்கத்துடன் பேச்சுக்களை நடத்திக் கொண்டி[illegible]ம் அதே சமயத்தில் அவர்கள் கொலைகளை மேற்கொண்டிருக்க மாட்டார்கள், அந்த நேரத்தில் பிரேமதாஸவுக்கு அது பெருத்த அவமானமாக இருந்தது."

(தொடரும்)



## காகிதம் பிறந்த கதை!

ஆதிமனிதன் முதன்முதல் எழுத்துகளைப் பதித்து வைத்தது கற்களின் மீதுதான். அப்படி எழுதப்பட்ட கற்களை, தேவை ஏற்பட்டபோது ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட சிரமங்களைத் தொடர்ந்து, விலங்குகளின் எலும்புகளிலும், மூங்கில் தடிகளின் மீதும் மனிதன் எழுதத் தொடங்கினான். பேப்பர்களின் தோற்றத்தைப் போன்ற பொருளில், உலகில் முதன்முதலில் எழுதியவர்கள் எகிப்தியர்தான்.

கி.மு.7 ஆம் நூற்றாண்டில் எகிப்தின் நைல் நதியின் டெல்டா பகுதியில் விளைந்த 2 முதல் 3 மீட்டர் உயரம் வரை வளரக்கூடிய ஒரு தாவரம் "பாப்பிரஸ்" ஆகும். இந்தப் பாப்பிரஸ் தாவரத்தின் தண்டுப் பகுதியை நுண்ணிய துண்டுகளாக வெட்டி, அதனுடன் நீர் மற்றும் சில தாதுக்களைச் சேர்த்து, பதப்படுத்தி, பின்பு அதனை சூரிய ஒளியில் நன்றாக உலர வைத்து, எழுதுவதற்கென்று பயன்படுத்தினர்.

ஒருவகைக் குளவி, மரத்தைத் துளையிட்டு, அதன் மூலம் கிடைத்த சிறு மரத்துகள்களைக் கொண்டு, தனது கூட்டை வலிமையாகக் கட்டிக் கொள்வதைக் கண்டனர். அப்போதுதான், மரத்தைக் கூழ்மயமாக அரைத்தால், பேப்பரை நாம் விரும்பும் வடிவில் மற்றும் அளவில் தயாரித்துக் கொள்ளலாம் என்பதை அறிந்து கொண்டனர்.

1844 ஆம் ஆண்டில் சார்ள்ஸ் மற்றும் கெல்லர் ஆகியோர் இணைந்து வெள்ளை நிறப் பேப்பரை உருவாக்கும் தொழில்நுட்பத்தினைக் கண்டறிந்தார்கள்.

## WWW இற்கு வயது 23




வையக விரி வலை (World Wide Web) என அழைக்கப்படும் இன்ரநெற் வழிமுறை முதன் முதலாக ஆகஸ்ட் 6, 1991இல் இயக்கத்திற்கு வந்தது. 22 ஆண்டு களை இனிதே கடந்து, பல நவீன முன்னேற்றங்களைக் கண்டு, உலகெங்கும் மனிதர்களை இணைக்க பாலத்தினைத் தந்து கொண்டிருக்கிறது.

இணையம் என்ற இன்ரநெற் இதற்கும் முந்தையதாகும். தகவல்களைத் தாங்கிப் பரிமாறிக் கொள்ளும் சேர்வர்களின் கட்டமைப்பும் மற்றும் அவற்றின் வழிகளும் இன்ரநெற் Internet - என அழைக்கப்படுகின்றன. இதில் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வடிவமைக்கப்பட்ட ஒரு வழிமுறை (Protocol) தான் வைய விரிவலை.

இதனை உருவாக்கியவர் ரிம் பெர்னர்ஸ் லீ (Tim Berners Lee) என்பவர். டொகுமெண்ட்களை ஒன்றுடன் ஒன்றினை இணைக்கும் ஹைப்பர் லிங்க் எனப்படும் சிஸ்டத்தை உருவாக்கி, அதனை ஒரு பிரவுசர் வழியாகக் காணும் வழிமுறையை இவர் உருவாக்கித் தந்தார்.

முன்னதாக வேறு வழிமுறைகளில் இயங்கிக் கொண்டிருந்த இணையத்தினை அதனுடன் வெற்றிகரமாக இணைத்து செயற்படுத்தினார். இதன் மூலம் மக்கள் எளிதாகவும், வெற்றிகரமாகவும் டொகுமெண்ட் மற்றும் படங்களை உருவாக்கி பகிர்ந்து கொள்ள முடிந்தது.

இப்போது பெரும் வழக்கில் பயன்படுத்தப்படும் எச்.டி.டி.பி. மற்றும் எச்.டி.எம்.எல். (HTTP:- Hypertext Transfer Protocol, HTML : -Hypertext Markup Language) வழங்கு முறை தொழில் நுட்பங்கள் இதில் உருவானவையே.

# நான்கு மணி



**Price Day எழுதிய Four O' Clock என்ற சிறுகதை**

**தமிழாக்கம்: சுஜாதா தேசிகன்**

மேசை மீது இருந்த டிஜிட்டல் கடிகாரம் 3:47 என்றது. சரியாக 4 மணிக்கு அது நிகழப்போகிறது.

"நிறைய யோசித்தாகிவிட்டது, வேற வழி இல்லை" என்றார் கடிகாரத்திலிருந்து கண்ணை எடுக்காமல்.

"பல முறை விவாதித்து விட்டோம் எனக்கு வேறு வழி தெரியவில்லை" என்றார் தீர்மானமாக.

தலைக்கு மேலே இருந்த கூட்டிலிருந்து எட்டிப்பார்த்த கிளி "கடலை" என்றது. அதன் கண்களிலும் கால்களிலும் முதுமை தெரிந்தது.

கடிகாரத்திலிருந்து கண்ணை எடுக்காமல், மேஜை மீது இருந்த கிண்ணத்திலிருந்து ஒரு வேர்க்கடலையை எடுத்து கையை உயர்த்திய போது கிளி அதைக் கவ்விக்கொண்டது. காலுக்கு அடியில் வைத்து மூக்கால் உடைத்துச் சாப்பிட்ட போது அதன் சத்தம் ஜன்னலுக்கு வெளியே வண்டிகளின் சத்தம், பள்ளிக்கூடம் விட்ட குழந்தைகள் போடும் கூச்சல், பிளேன் போகும் சத்தத்துடன் கலந்து கேட்டது.

கடிகாரம் 3:49 என்றது.

"உண்மை தான்... விருப்பு வெறுப்பு, உணர்ச்சிகள்.... எதுவும் இருக்கக் கூடாது... வெளியாளாக எல்லாவற்றையும் பார்க்க வேண்டும்"

3:50இற்கு பதட்டம் அவர் முகத்தில் தெரிந்தது.

"இன்னும் பத்து நிமிஷத்தில் அந்த வார்த்தையைச் சொன்னவுடன் உலகத்தில் உள்ள எல்லா கெட்டவர் களையும் சுலபமாக அடையாளம் க்ண்டுகொள்ளலாம். அவர்கள் உயரத்தில் பாதியாகிவிடுவார்கள்!"

பிக்பொக்கெற் அடிப்பவர்கள், திருடர்கள், கொலை செய்தவர்கள், ஊழல் செய்தவர்கள், கடத்தல்காரர்கள், பெண்களை கிண்டல் செய்தவர்கள், சிகரெட் குடித்தவர்கள், வாய்தா வாங்கியவர்கள், லஞ்சம் வாங்கியவர்கள், கொடுத்தவர்கள்.... நல்லவர்கள் போல சினிமாவில் ஹீரோவாக நடித்தவர்கள்... எல்லோரும்... விதி ஒன்று தான்... விதிகளை மீறியவர்கள்.. அவர்களை அடை யாளம் காட்ட வேண்டும்"

கிளி "கடலை" என்று கேட்டு ஒன்றைப் பெற்றுக்கொண்டது.

"உனக்கு பிடிக்கவில்லை என்று எனக்கு தெரியும். வேறு வழி இல்லை. இரவு பகல் என்று நிறைய யோசித்துப் பார்த்துவிட்டேன். கெட்டவர்களை அடையாளம் காட்ட வேண்டிய தார்மீக பொறுப்பு எனக்கு இருக்கிறது என்பதை உணர்ந்தேன்"

"போன வாரம் செய்தித்தாளில் நடந்த விபத்தை படங்களுடன் போட்டிருந்ததைப் பார்த்தபோது அதை தடுக்க வண்டிகளின் சக்கரங்களை சதுரமாக மாத்தலாமா என்று கூட யோசித்ததுண்டு"

"யார் கெட்டவர்கள் என்று எப்படி தீர்மானித்தேன் என்று கேட்கலாம். ஒரே விதி தான். கெட்டவர்களின் செயலைப் பார்த்து ஒன்றும் செய்யாமல் சும்மா இருந்தவர்கள் கூடக் கெட்டவர்கள் தான் என்பது என் விதி"

"முதலில் அவர்கள் நெற்றியில் ஊதா நிறத்தில் ஒரு குறி போட லாம் என்று தான் நினைத்தேன் பிறகு இன்றைய பச்சை குத்தும் கலாசாரத்தில் அதையே ஃபாஷி னாக கருதக்கூடும் என்று விட்டுவிட்டேன். இனம் இனத்தோடு சேரும். கெட்டவர்கள் சுலபமாக ஒன்று சேர்ந்து உலகை மேலும் அழிப்பார்கள்"

"உயரத்தைக் கொண்டு எதாவது செய்யலாம் என்ற எண்ணம் வந்த உடன்... பெரிதாக்கிவிடலாம் என்று நினைத்தேன். ஆனால் அதுவே அவர்களுக்கு மேலும் பலத்தைக் கொடுக்கும். வன்முறை அதிகமாக ஆகும். எனக்கு வன்முறை பிடிக்காது. உயரத்தை பாதியாக்கினால்?... பல விஷயங்களை அவர்கள் செய்ய முடியாது. பஸ் படிக்கட்டில் கூட் ஏற முடியாது. சும்மா இருக்க மாட்டார்கள். ஏதாவது கண்டுபிடிப்பார்கள். இதற்கும் ஏதாவது கண்டுபிடிப்பார்கள். ஆனால் அதற்கு கொஞ்சம் நாளாகும். தங்களுடைய சட்டை கால் வரை வரும். காற்சட்டை கழண்டு விழும். எவ்வளவு கோமாளித்தனமாக இருக்கும்" என்று புன்னகைத்தார்.




மணி சரியாக 3:55 என்று காட்டியது. "கடலை" என்றது கிளி.

கண்ணைக் கடிகாரத்திலிருந்து எடுக்காமல், கடலை ஒன்றை பொறுக்கிக் கொடுத்தார்.

"நீதிமன்றத்தில் சுவாரஸ்யமாக இருக்கப் போகிறது. விசாரணை நடக்கும் போது குற்றவாளியா என்று தீர்மானிக்கும் முன் சரியாக நான்கு மணிக்கு குற்றவாளி என்றால் குள்ளமாகிவிடுவான். ஏன் நீதிபதி கூட குள்ளமாக வாய்ப்பு இருக்கிறது.

3:56 படபடப்பு அதிகமாகியது.

"கள்ளுக்கடை, யு படம் பார்க்கும் கூட்டம், ஏன் கோயிலில் கூட பலர் குள்ளமாகப் போகிறார்கள்"

"கடலை". கொடுத்தார்.

"எவ்வளவு இடங்கள்... எவ்வளவு இடங்கள்! இது நடக்கும் போது உன்னுடன் இருக்கிறேன்"

3:57.. 58 ஆனது.

"முதலில் இந்த நிகழ்வை செய்தித்தாள்கள், தொலைக்காட்சி எதுவும் நம்பமாட்டார்கள். அவர்கள் அலுவலகத்திலேயே பலர் குள்ளமாவார்கள். பிறகு அவர்களுக்கே கொஞ்சங் கொஞ்சமாகப் புரிய ஆரம்பிக்கும். கெட்டவர்களை அடையாளம் காண்பார்கள். என்னுடைய வடிவமைப்பு அவர்களுக்குப் புரிய ஆரம்பிக்கும்"

3:59

"செய்தித்தாளுக்கு இது அரு மையான கவர் ஸ்டோரி. டிவி பற்றி கேட்கவே வேண்டாம். யார் செய்தார்கள் என்று எனக்கும் கடலை சாப்பிடும் உனக்கும் மட்டும் தான் தெரியும். வேறு யாருக்கும் தெரியப் போவதில்லை..."

3இற்கும் 59இற்கும் நடுவில் இரண்டு : புள்ளிகள் கண் சிமிட்டிக்கொண்டு இருக்க.... இன்னும் சில நொடிகளில் அது நிகழப்போகிறது.

4:00 என்று கடிகாரம் காண்பித்த போது அந்த கணத்துக்கு காத்துக்கொண்டு இருந்தவர் கண்களை மூடிக்கொண்டு மெதுவாக "இப்பொழுது" என்றார்.

ஜன்னல் பக்கம் சென்று எட்டிப்பார்த்திருந்தால் அது நடந்ததா இல்லையா என்று தெரிந்திருக்கும். அவர் போகவில்லை. அவர் போகத் தேவை இல்லை. அவருக்குத் தெரியும்.

மீண்டும் "கடலை" என்றது கிளி.

கடலையுடன் கையை உயர்த்திய போது முழங்கை சரியாக ஒன்றரை அடி சின்னதாக இருந்தது.

# ஆயுத வியாபாரத்திற்கான போர்!



**– வா. மணிகண்டன்**

பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பி னர் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துகிறார்கள். அதுவும் எப்படி? பாலஸ்தீனத்தில் இருக்கும் குடியிருப்புகள், பள்ளிக்கூடங்கள் போன்ற பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் ஒளிந்திருந்து வீசுகிறார்கள்.

இஸ்ரேல் இதை எதிர்பார்த்துக் காத்திருந்தது போல பாலஸ்தீனப் பகுதியிலிருந்து ஏவுகணை வந்தவுடனேயே அது பள்ளியா, மசூதியா, குடியிருப்புப் பகுதியா என்றெல்லாம் பார்ப்பதில் லை. எந்த இடத்திலிருந்து ஏவுகணை வருகிறதோ அதே இடத்தைக் குறி வைத்து திருப்பி குண்டு வீசுகிறார்கள். வீடுகளும் பள்ளிகளும் மருத்துவ மனைகளும் நொறுங்குகின்றன.

மக்களுக்கு நல்லநேரமாக இருந்தால் மொத்த மாகச் சாகிறார்கள். கெட்ட நேரமாக இருந்தால் உடல் உறுப்புகளை இழக்கிறார்கள். ஒரே வழியாக செத்துவிட்டால் பரவாயில்லை. பிழைத்துக் கொண் டால் கையிழந்து, கால் இழந்து, கண்களை இழந்து கிடந்தால் ஒவ்வொரு நாளும் நரக வேதனைதான்.

ஒரு பக்கம் எகிப்து தனது எல்லையை மூடிவிடு கிறது. இன்னொரு பக்கம் இஸ்ரேல் எல்லையை மூடி வைத்துவிடுகிறது. இன்னொரு பக்கம் கடல். அந்தக் கடலில் இரண்டு கிலோமீட்டர்களைத் தாண்டினால் இஸ்ரேல் படைகள் சுற்றி வளைத்து படகோடு கொளுத்துவார்கள். எங்கே போய் தப்பிப்பது? உண்மையிலேயே பாலஸ்தீன மக்கள் பாவம்தான்.

இந்தப் பிரச்சினையின் பின்னணியில் மிகப்பெரிய உலக அரசியல் இருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்த வரையில் அரேபிய நாடுகளுக்கு செக் வைக்கும் ஒரு தோழன் தேவை. குவைத்தும், சவூதி அரேபியாவும் என்னதான் அமெரிக்காவின் அடிமைகள் என்றாலும் இஸ்லாமிய தேசங்கள் அல்லவா? அவற்றை முழுமையாக நம்ப முடியாது. அதனால் இஸ்ரேலுக்கு எல்லாவிதத்திலும் கொம்பு சீவி விடுகிறது.

மேற்கு ஆசியாவில் பிரச்சினைகள் இருந்து கொண்டேயிருந்தால்தான் தனக்கு பெட்ரோல் வரத்தில் பிரச்சினை இருக்காது என அமெரிக்கா நம்புகிறது. மேற்கு ஆசியா அமைதியாகிவிட்டாலோ அல்லது அவர்களுக்குள் ஒற்றுமை வந்துவிட்டாலோ தீர்க்கவே முடியாத தனது பெட்ரோல் பசியினால் அமெரிக்கா திண்டாடிவிடும்.

இஸ்ரேல்தான் அமெரிக்காவின் நண்பன். பாலஸ்தீனத்தோடு நட்பு பூண்டு என்ன பிரயோ-சனம்? இஸ்ரேலிடம் நட்போடு இருந்தால் ஆயுதமாவது பேரம் பேசலாம். பாலஸ்தீனத்திடம் என்ன இருக்கிறது? செத்துக் கொண்டிருக்கும் சில்வண்டுகளைத் தவிர?

இப்பொழுது பூதாகரமாக்கப்பட்டிருக்கும் இந்தப் பிரச்சினையின் பின்னால் கூட ஒரு அரசியல் அல்லது வியாபாரம் இருக்கிறது என்கிறார்கள்.

உலகத்திலேயே ஆயுத விற்பனையின் மஹாராஜா இஸ்ரேல்தான். இப்பொழுது நடக்கும் பிரச்சினை கூட அதன் புதிய ஆயுதத் தொழில்நுட்பத்தை உலகுக்கு விளம்பரம் செய்வதற்கான உத்திதானாம்.

Iron dome என்ற தொழில்நுட்பம் அது. எதிரி தேசத்திடமிருந்து வரும் றொக்கெற்களையும், ஏவுகணைகளையும் அது வரும் பாதையிலேயே கண்டுபிடித்து திருப்பி அடித்து அழிக்கும் நுட்பம். "எங்களிடம் இந்த ஆயுதம் இருக்கு" என்று எப்படி விளம்பரப்படுத்துவது? அதற்காகத்தான் பாலஸ்தீனத்தை சீண்டி விடுவதும் அதனால் ஆவேசமடையும் ஹமாஸ் அமைப்பினர் தங்களிடமிருக்கும் ஏவுகணைகளை வீசும் போது திருப்பி அடித்து "இது எப்படி இருக்கு?" என்று உலகத்திடம் காட்டிக் கொள்கிறார்கள்.

இதைப் பார்த்துவிட்டு சில நாடுகள் பில்லியன் டொலர்களைக் கொட்டி இந்த ஆயுதத்தை விலைக்கு வாங்குவார்கள்.

என்னவோ அரசியல் இருக்கட்டும். இந்தப் போரில் செத்துச் சுண்ணாம்பு ஆவதெல்லாம் பாலஸ்தீன பொதுமக்கள்தான். அந்தக் குழந்தைகள் என்ன பாவம் செய்தார்கள்? மூன்று வயதில் பெற்றவர் களை இழக்கிறார்கள். உடல் உறுப்புக்களை பறிகொடுக்கிறார்கள். பார்வையை இழக்கிறார்கள். சொந்தங்களை விட்டுப் பிரிந்து தவிக்கிறார்கள். வீடுகளையும் உடமைகளையும் இழந்து பொதுவெளி யில் கூடாரம் அமைத்துத் தங்குகிறார்கள்.

பெற்றவர்களுக்கு இதைவிடவும் கொடுமை. தங்களது குழந்தைகள் கண் முன்னாலேயே சாவதை பார்க்கிறார்கள். பிள்ளைகளின் காயங்களுக்கு மருந்தில்லாமல் தவிக்கிறார்கள். அவர்களைச் சுற்றிலும் அத்தனை கொலைவெறி. அத்தனை வன்மம். அத்தனை காவு வாங்கும் அரசியல்.



நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் கடந்த மாத இறுதியில் நடைபெற்ற அழகியல் பாடகண்காட்சி நிகழ்வு...





முள்ளியவளை தெற்கு பொதுநோக்கு மண்டபம் யுத்த அனர்த்தத்தால் சேதமடைந்த நிலையில் புன ரமைப்பின்றிக் காணப்படுகிறது. (40)


# நிகழ்வுகளின் பதிவுகள்....





இலங்கை வங்கியின் 75ஆவது வருட நிறைவு விழா அண்மையில் யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் நடைபெற்ற போது. பிர முகர்கள் மற்றும் வங்கி உத்தி யோகத்தர்கள் கலந்து கொண் டனர். (105)




அகில இலங்கை தமிழ்த் தினப்போட்டியின் தேசியமட்ட போட்டி குழுஇசைப்பிரிவு 1இல் முதலாமிடத்தை பெற்ற பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி இசைக்குழுவினர் அதிபர், ஆசிரியர்களுடன் நிற்பதை காணலாம். (01)



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கத்தினால் திருத்தி அமைக் கப்பட்ட நித்திய ஒளி முன்பள்ளி பாலர் பாடசாலை..



கரவெட்டி பிரதேச நெல்லியடி சமுர்த்தி வங்கியினால் பணவைப்பு செய்த சிறுவர்களுக்கான பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றபோது சிறுமி ஒருவருக்கு பரிசில் வழங்கப்படுவதைக் காணலாம். (18)



யாழ். இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்ற தீபிகா சுதர்சனின் இசை நிகழ்வின்போது. (48,63)

உடுவிலில் உள்ள டெவ்லிங் நிறுவனத்தினரால் செவிப்புலனற்றவர் களுக்கான ஒருநாள் பயிற்சிப்பட்டறை அண்மையில் நடைபெற்றபோது... (90)



# நலன்புரி நிலையத்திலுள்ள குடும்பங்களை மீள்குடியமர்த்தவுள்ளதை மறுக்கிறார் அரச அதிபர்

## மீள்குடியேற்ற குழுத்தலைவர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

34 நலன்புரி நிலையங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், அங்கு 9948 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதை அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மறுத்து வருவதாக வலி.வடக்கு மீள்குடியேற்ற குழு தலைவர் சண்முகலிங்கம் சஜீவன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த புதன்கிழமை நடீடபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இதனை சுட்டிக்காட்டினார்.

வளலாயில் குடியமர்வதற்கு நலன்புரி முகாம்களில் இருப்பவர்கள் சம்மதம் தெரிவிக்கவில்லை. யாழ். மாவட்டத்தில் 34 பதிவு செய்யப்பட்ட நலன்புரி முகாம்கள் இருக்கின்றன. அவற்றில் 9948 குடும்பங்கள் வாழ்கின்றனர்.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கிட்டத்தட்ட 5700 பேரை மீள்குடியேற்றம் செய்யவுள்ளதாகவே கூறிக்கொண்டிருக்கின்றார்.

வலி.வடக்கில் மட்டும் 9400 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளார்கள். நலன்புரி நிலையங்கள் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் 01, சண்டிலிப்பாய் 04, உடுவில் 09, தெல்லிப்பளை 06, கோப்பாய் 05, கரவெட்டி 02, பருத்தித்துறை 09 உள்ளிட்ட 34இற்கும் மேற்பட்ட நலன்புரி நிலையங்கள் இருக்கின்றன.

இவற்றுள் பதிவு செய்யப்பட்ட நலன்புரி நிலையங்கள் 34 பதிவு செய்யப்படாத நலன்புரி நிலையங்களும் இருக்கின்ன.

உப குடும்பங்களைப் பதிவு செய்ய மாட்டோம் என பல பிரதேச செயலகங்கள் மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இவர்கள் அனைவரும் வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் காணிகளுக்குச் சொந்தமான மக்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (25)

## பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் பட்டப்படிப்பினை முடித்து தொழில் வாய்ப்பினை எதிர்பார்த்திருக்கும் வேலையற்ற பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சி திருநகர் கனகராசா வீதியில் அமைந்துள்ள கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்து வேலையற்ற பட்டதாரிகளையும் குறித்த நேரத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் எஸ்.கபேந்திரமூர்த்தி அறிவித்துள்ளார். (29)

## பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு தேவிபுர கிராம சேவையாளர் பிரிவில் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஏற்பாட்டில் தேவிபுரம் அ.த.க.பாடசாலையில் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றுள்ளது.

இதில் இறப்பு, பிறப்பு திருமணப்பதிவுகள் பொலிஸ் பதிவுகள் போன்ற ஆவணங்கள் இலவசமாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இந் நடமாடும் சேவையில் மருத்துவசேவைகளும் இராணுவம்,பொலிஸ் பொதுமக்கள் இவர்களினால் இரத்ததான நிகழ்வும் இடம் பெற்றுள்ளது.

நிகழ்வு இடம்பெற்றபாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (40)

## "மண்வாசக் காற்று" இறுவட்டு வெளியீடு

(கரணவாய்)

மைசெல்ட் கிறியேவுன்ஸ் எஸ். கங்காதரன் தயாரிப்பில் உருவான மண்வாசக்காற்று இசை இறுவட்டு கடந்த 10ஆம் திகதி ஆவரங்கால் சிவ சக்தி மணிமண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நம்நாட்டு இசைக்கலைஞர்களைக் கொண்டு தென்னிந்திய திரைப்படப்பாடல்களுக்கு ஈடாக உருவாக்கப்பட்ட இவ் இசைத்தட்டு 12 பாடல்களைக் கொண்டதாகும்.


மண்வாசனை, தாய்ப்பாசம் நட்பு, காதல், இசை, இயற்கை என்ற அனைத்து வகைகளையும் உள்ளடக்கி பாடல்கள் மிக சிறப்பாக உருவாக கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் சிறப்பு விருந்தினராக கர்நாடக சங்கீத வித்துவான் ஏ்.கே. கருணாகரன் ஆகியோர் கலந்துகொண்டு இறுவட்டினை வெளியிட்டு வைத்தனர். (18)

## கரவெட்டி பிரதேச செயலகத்தால் சுயதொழிலுக்கு நன்கொடை வழங்கல்

வடக்கு மாகாணசமூக சேவைத்திணைக்களம் கரவெட்டி பிரதேச செயலக பிரிவை சேர்ந்த பயனாளிகளுக்கு சுயதொழில் மேற்கொள்ள 15000 ரூபா நன்கொடைவழங்கியுள்ளது. இப் பயனாளிகள் கரவெட்டி பிரதேச செயலக சமூக சேவைப்பகுதியுடன் தொடர்புகொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ். சிவசிறி அறிவித்துள்ளார்.

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த கந்தன் செல்வராசா, கரவெட்டி மேற்கைச்சேர்ந்த செல்வரத்தினம் சந்திரா, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த பூரணம்பிள்ளை கலையரசி, சமரபாகுவைச் சேர்ந்த முத்துசின்னராசா ஆகியோருக்கே இந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. (18)



தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆடிச்செவ்வாய் உற்சவத்தின் போது... (63)

# தொழில்வாய்ப்பும் பரீட்சைகளும்

## பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு

பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சின் கீழுளுள்ள தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகத்தினால் பயிற்றுவிப்பு அதிகாரி (கணக்கியல் மற்றும் நிதி முகாமைத்துவம்), உள்ளக கணக்காய்வாளர், நிகழ்ச்சித்திட்ட அதிகாரி (பரீட்சைகள் / ஒருங்கிணைத்தல்) நிர்வாக அதிகாரி, நூலகர், பெறுகை உதவியாளர், கணக்கியல் உதவியாளர், செவிப்புல, கட்புல உதவியாளர் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள் போன்ற பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

பட்டதாரிகள் தொடக்கம் க.பொ.த. உயர்தரம் படித்தவர்கள் வரை மேற்படி பொருத்தமான பதவிகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தினைப் பணிப்பாளர், தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவகம், எம்.டி.டீ.எச். ஜயவர்த்தன மாவத்தை, அத்துறுகிரிய என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி இன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை மத்திய வங்கி கனிஷ்ட தனிப்பட்ட உதவியாளர்கள் (தமிழ் சுருக்கெழுத்து-தட்டெழுத்தாளர்)

இலங்கை மத்திய வங்கியின் அலுவலர் அல்லாத தரத்திற்கு இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் காலத்தினைக் கொண்ட கனிஷ்ட உதவியாளராக நியமிப்பதற்கு தகைமை வாய்ந்த அனுபவம் உள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் தமிழ்மொழி மூலமான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தமிழ் மற்றும் ஆங்கிலம் உள்ளடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம் உள்ளடங்கலாக ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியிருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து ஒரு வருட சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து (தமிழ்) டிப்ளோமா சான்றிதழ் கற்கைநெறியைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மற்றும் மைக்ரோ சொவ்ற் (Microsoft Office) கற்கை நெறியில் பரீட்சயம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி 35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். இதற்கான விண்ணப்பத்தினை மத்திய வங்கியின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து (www.cbsl.gov.lk) பணிப்பாளர், மனித வளத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01 என்ற முகவரிக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.

## பொலிஸ் பயிலுநர் கொஸ்தாபல்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தினால் பொலிஸ் பயிலுநர் கொஸ்தாபல் பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு குறையாமலும், 28 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் கல்விப் பொது தராதர சாதாரண தரப் பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் ஒரே தடவையில் 5 பாடங்கள் சித்தியிருத்தல் வேண்டும்.

மேற்படி பொலிஸ் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அடிப்படைத் தகைமைப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

மேற்படி பதவிக்கான எழுத்துப் பரீட்சை இரு வினாத்தாள்களை உள்ளடக்கியது. 45 நிமிடங்களில் 500 சொற்களுக்கு குறையாமல் ஒரு விடயம் தொடர்பாக கட்டுரை எழுதுதல் மற்றும் பொது அறிவுமற்றும், நுண்ணறிவுப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்க்கும் அலுவலகம், இல.375, முதலாம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு -6 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்கான விண்ணப்பம் 2014' என குறிப்பிடுதல் வேண்டும்.


## அரச கரும மொழிப் பரீட்சை

இலங்கை அரச கரும மொழிகள் திணைக்களம் இரண்டாம் மொழிப் பரீட்சைக்கான (சிங்களம்/தமிழ்) விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி இன்று (18.08.2014) என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்பு :-
சி.என்.எச்.சாள்ஸ்

# கிழக்கு முஸ்லிம்களால் இந்தியாவுக்கு ஆபத்து



## பொதுபலசேனாவுக்கு கவலை

இலங்கையின் கிழக்கில் வாழும் சிறுபான்மை முஸ்லிம்கள் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அச்சுறுத்தலாக உள்ளனர் என பொதுபல சேனா இயக்கம் குற்றம் சுமத்தியுள்ளது. பொதுபலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொடத்தே ஞானசார தேரர் இந்திய ஊடகமொன்றுக்கு அளித்த செவ்வியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் இலங்கைக்கு மட்டுமன்றி இந்தியாவிற்கும் அச்சுறுத்தலாக உள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் பௌத்த மதத்தை மேலோங்கச் செய்வதே தனது நோக்கம் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். சிங்கள பௌத்த மத உரிமைகளை உறுதி செய்யும் நோக்கில் செயற்பட்டு வருவதாக தெரிவித்த அவர் பௌத்த மதக் கோட்பாடுகளையே தாம் பின்பற்றி வருவதாகவும், வன்முறைகள், மனிதாபிமான நடவடிக்கைகளில் தனக்கு உடன்பாடில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சிறியளவிலான முஸ்லிம்கள் வாழ்ந்து வந்த போதிலும் அவர்களின் சர்வதேச வலையமைப்பு வலுவாகக் காணப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். பெரும்பான்மையான முஸ்லிம்கள் அப்பாவிகளான என்ற போதிலும், கடும்போக்கு வாதிகள் அப்பாவி முஸ்லிம்களை மனம் மாற்றி விடுவார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாம் கடும்போக்குவாத கொள்கைகளை எப்போதும் பின்பற்றியதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மதத்தைப் பாதுகாப்பதே பிரதான இலக்கு எனவும் குறிப்பிட்டுள்ளார் அவர். பௌத்தர்கள் மிகவும் அமைதியானவர்கள் முஸ்லிம்களே பிரச்சினைகளை தூண்டி விடுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் காணாமற் போன பலர் இப்போது மேற்கு ஐரோப்பாவில்

## அதிர்ச்சித் தகவல் தருகிறது சிங்கள நாளிதழ்

(கொழும்பு)

காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட பலர் ஐரோப்பாவில் புகலிடம் பெற்றுக்கொண்டுள்ளதாக சிலுமின என்ற சிங்கள பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் கிழக்கில் காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட பலர் இவ்வாறு ஐரோப்பிய நாடுகளுக்கு இரகசிய வழிகளில் தப்பிச் சென்றுள் ளனர். வடக்கு கிழக்கில் பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய பலர் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒத்துழைப்புடனேயே இவ்வாறு இவர்கள் வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

காணாமற் போனவர்கள் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவிற்கு இதுவரையில சுமார் 20,000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினரின் கடும் அழுத்தம் காரணமாகவே செய்யப்பட்டுள்ளன. காணாமற் போனதாக அறிவிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கனடா, பிரிட்டன், நோர்வே போன்ற நாடுகளில் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர்.

இரகசியமாக தமிழகத்திற்கு கடல் வழியாகச் சென்று அங்கிருந்து வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ளதாக அந்த பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்படுகிறது.

# வடக்கில் உட்கட்டுமான அபிவிருத்தி மிக விரைவில் புதிய செயற்றிட்டம்

வடமாகாணத்தில் விரைவில் உள்ளூராட்சி சபைகள் பலப்படுத்தப்படவுள்ளன.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாக பெருமளவிலான மில்லியன் ரூபாய்களை வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளுக்கும் பாரம்பரிய சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பெற்றுக் கொடுக்கவுள்ளார் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மேலதிக செயலாளரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள மாநகரசபை, நகரசபை, பிரதேச சபைகள் உள்ளிட்ட 34 சபைகளுக்கும் நிதி பங்களிப்பு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக முன்மொழியப்பட்ட திட்டங்களின் முன்னுரிமை தெரிவுகள் ஊடாக இவ் அபிவிருத்தி நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் முப்பது முதல் 50 மில்லியன் ரூபா வரையிலான நிதிகளை பெறவுள்ளன. வடக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகள் மேற்படி அபிவிருத்தி நிதியை பெற்று பிரதேச அபிவிருத்தியை முன்னிறுத்துவதற்கு தயாராக உள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் நிதி உதவிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக பெற்று பிரதேச அபிவிருத்திகளை முன்னிறுத்த திட்டங்களை கிராம ரீதியாக முன்னிறுத்தி வருகின்றன.

விரைவில் பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதியுடன் உட்கட்டுமான அபிவிருத்திகள் முன்னிறுத்தப்படவுள்ளதாக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (92)

## இந்திய மீனவர் விவகாரம் மீண்டும்

இலங்கை - இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் அடுத்தகட்ட பேச்சுவார்த்தை எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

குறித்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணும் வகையிலேயே இந்த சந்திப்பு ஏற்பாடு செய் யப் பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னர் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் மற்றும் இலங்கை கடற்படையினரின் கைது என்பவற்றை கருத்திற்கொள்ளாது இலங்கை கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்கிறது என்றும் அமைச்சர் குற்றம் சுமத்தியுள்ளார். இந்தநிலையில் அதிகாரிகள் மட்ட பேச்சுவார்த்தையே இந்த மாதம் புதுடில்லியில் இடம்பெறவுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பரமர் சங்கமம்



குதிரேன்ரை குணமறிஞ்சுதான் கொம்பு குடுக்கேல்லை' எண்டது சில காரியங்களில் நூற்றுக்கு நூறு சரியாக இருக்கிறதை எண்டைக்குமே அனுபவித்துக் கொண்டு தானை இருக்கிறம்.

ஒரு தகுதியைப் பெறுகிறேண்டா எல்லோருக்கும் பொருந்தாது பாருங்கோ! நாட்டிலை நகரத்திலை எத்தினை எத்தினை அமைப்புக்கள் கிடக்கு சனசமூக நிலைய ங்களில் இருந்து சங்கங்கள் வரை லட்சக் கணக்கில இருக் கெல்லே!

உதுகளுக்கெல்லாம் தலைவர் செயலாளர் பொருளாளரெண்டு தெரிவு செய்யிறவையில் எத்தினை பேர் அந்தப் பதிவிக்குத் தகுதியானவரா இருக்கினம்? அதுக்காக அப்புடியெல்லாம் இருக்கக் கூடாதெண்டு பரமர் சொல்ல வரவில்லை.

ஒரு நாட்டுக்கே தலைமை தாங்கும் பக்குவத்தை உந்தமாதிரியான கிராம நகரமட்டத்திலான அமைப்புகள் தான் உருவாக்கிவிடுகுது சிலர் தங்கட காலங்களில் இன்ன இன்ன வேலைகளை செய்தெண்டு முத்திரை பதிச்சுச் செண்டதையும் கண்டிருக்கிறம்.

வேறுசிலர் முன்னால் நல்நோக்கத்துக்காக வங்கிகளில் சேகரிச்சு வைச்ச பணத்தைக் கையாடி ஏப்பம் விட்டுப் பெயரெடுத் தவையும் இருக்கினம். அதோடை பதவிக்கு வந்துவிட்டால் பதவியை ஏதோ அதிகாரத்தைத் தந்துவிட்டதாகக் கருதி தன்னிச்சையான செயற்பாடுகளில் இறங்கி விடுவதையும் பார்திருக்கிறம்.

உப்புடித்தான் தொழில் சார்ந்த சங்கமொண்டு யாழ்.மாவட்டத்தை உள்ளடக்கி அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கிக் கொண்டிருக்கு இண்டைக்கும் சொந்தக் கட்டடம் இல்லாமல் வாடகை இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கு இந்தச் சங்கத்திலேம் ஐந்து தடவைக்கும் மேற்பட நிர்வாகத்தில் இருந்தவை காசுகளைச் சுருட்டிக் கொண்டோடியதில்லை தான் இண்டைக்கும் முன்னேறாமல் இருக்கெண்டு சொல்லவா வேணும்.

வீதம் ஏறத்தாள இருநூறு உறுப்பினரிடமிருந்து இருநூறு ரூபா சந்தாப் பணம் சேகரிக்கிற சங்கத்தில மரணக் கொடுப்பனவு பத்தாயிரம் ரூபா வீதம் ஐஞ்சு தேங்கிப் போச்செண்டு வங்கீல இருந்து 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை எடுத்து சீரழிச்சுப் போட்டதால இருநூறு பேரில் 100 பேர் இப்ப சந்தாக் கட்டாமல் விட்டிட்டினம்.

முறைக்கு முறை புதிசா வாற நிர்வாகங்கள் தான் பிடிச்ச முயலுக்கு மூண்டு காலெண்டால் எந்தச் சங்கந்தான் உருப்படும். மூண்டு காலெண்டு சொல்லேக்கைதான் ஒரு நினைவு வருகுது. முச்சக்கரவண்டிச் சங்கம் இருக்கெல்லே! அதின்ர முன்னேற் றத்தைக் கண்டும் கேட்டும் விறைச்சுப் போனேன்.

போனமாசம் எங்கட அமைச்சரை முகதாவில் மரணச் சகாயநிதியொண்டை அங்குரார்பணம் செய்து வைத்திருக்கினமாம் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ஒவ்வொரு லட்சம் ரூபா நிதியை வங்கியில் வைப்பு வைத்திருப்பதாகக் கேள்வி.

இதெல்லோ முன்னேற்றகரமான நடவடிக்கை மாசாமாசம் சேகரிக்கும சந்தாப் பணத்தில் செலவைக் குறைச்சு வங்கி வைப்பை வளர்ப்பதோ அதில இருந்து எடுத்து விளையாடுவதோ நல்லது.

குதிரேன்ரை குணமறிஞ்சுதான் கொம்பு குடுக்கேல்லை எண்டால் கொம்பேனும் பொருளா முதுகெலும்பை இந்தச் சங்கம் எந்தக்காலத்தில பெறப்போகுது சொல்லுங்க பாப்பம்

# அடிப்படை உரிமை மீறும் போக்கை கண்டிக்கிறார் பச்சிலைப்பள்ளி தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்று எமது பிரதேசத்தில் செயலாளர்களாக நியமனம் பெற்று கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களை மறைமுக மாக தகுதியற்றவர்கள முறை யற்றவர்கள் என வடக்கு மாகாண சபையின் சில கூட்டமைப்பு உறுப்பினர் கூறுவது ஏற்றுக்கொள்ள கூடியதன்று.

குறிப்பாக எமது சபைக்கு பளை செயலாளராக பணியாற்ற நியமிக்கப்பட்ட செயலாளர் செ.ரமேஷ் தகுதியற்றவர் முறையற்றவர் நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காது நியமனம் பெற்றவர் என்று பகிரங்கமாக சில ஊடகங்களில் தெரிவிக்கப் பட்டது.

இது ஒரு மனிதனின் அடிபபடை உரிமை மீறலுக்கு ஒப்பான விடயம் என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் பெர்னாண்டோ டொமினிக் அன்ரன் தெரிவித்தார்.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு செயலாளர் இல்லை எனும் தலைப்பில் அண்மையில் ஊடகங்களுக்கு தவிசாளர் பு.டொ.அன்ரன் மேலும் தெரிவித்ததாவது,

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் ஆகியோர் இணைந்த வகையில் நேர்முகப் பரீட்சை நடாத்தியே செயலாளர் நியமனம் கடந்த 9.7.2014 இல் ஆளுநரினால் வழங்கப்பட்டு இதன் பிரதிகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கும் தெரியப் படுத்தப்பட்டன.

மேலும் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளர் செ.ரமேஷ் அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை வைக்கப்பட வேண்டிய தேவையில்லை. ஏனெனில் வேலணை பிரதேச சபையில் நீண்டகாலமாக செயலாளராக கடமையாற்றியவர்.


மானிப்பாய் பிரதேச சபைக்கு இடமாற்றம் கோரிய போது அவரது பதவி இடைநிறுத்தம் செய்யப்பட்டது.

அத்துடன் பொருளியல் துறையில் பீ.ஏ.பட்டமும் முதுமானி பொருளியல் (M.A (ECON) HONS, முதுமானி அபிவிருத்தி (M.A.Development) மற்றும் பட்டப்பின் கல்வி, பட்டப்பின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தில் டிப்ளோமா ஆகிய பட்டங்களையும், முதுமானி பட்டங்களையும், பட்டப் படிப்பின் பட்டங்களையும் ஒருங்கே பெற்றவர் இவரைப் போன்றே ஏனைய உள்ளூராட்சி உதவியாளர்களும் பட்டத்துடனும், பட்டப் படிப்பின் கல்வி தகமைகளுடனும் செயலாளர் சேவையை தொடர்ந்து 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வருகின்றனர்.

அத்துடன் உள்ளூராட்சி உதவியாளர் சேவை வகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உள்ளூராட்சிக்கு என பிரத்தியோகமாக நியமிக்கப்பட்டவர்கள்.

இவ்வாறான உள்ளூராட்சி உதவியாளர்கள் ஏனைய திணைக்களங்கள் அமைச்சுகளுக்கு கூட இடமாற்றம் பெறமுடியாத சேவையில் பணியாற்றி வருபவர்கள்.

இவர்கள் வடக்கின் 5 மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றனர். எனவே வடக்கின் மாகாண சபை உறுப்பினர் கலாநிதி பட்டம் பெற்றவர் செயலாளர்களாக பட்டம் பெற்றும் கடமையாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்கள் தென்பகுதியில் இருந்து வந்தவர்கள் அல்ல இந்த மண்ணில் பட்டம் பெற்று சேவையாற்றுபவர்கள் என்பதனை உறுப்பினர்கள் உணரவேண்டும் என்றார்.



# க.பொ.த. (சா/த) பரீட்சை - 2014

# கல்வி முரசு

O/L




## கணிதம் - பகுதி I

## பகுதி - A

1. ரூபா 78 விலையான தொப்பி ஒன்று வாங்கிய மாணவன் கடைக்காரனுக்கு எவ்வளவு பணம் கொடுத்தால் மீதியாக ரூபா 22 கிடைக்கும்.

2. 2.5 m ஐ cm இல் தருக.

3. உருவில் a இன் பெறுமானம் யாது.





4. தீர்க்க. $\frac{6}{X} = 2$

5. கழிக்க. $1101_{இ} - 101_{இ}$

6. சுருக்குக. $(-0.2)^3$

7. அடைப்பு நீக்கிச் சுருக்குக. 7-2(X+3)

8. உருவில் $A \cap B$ என்ற பகுதியை நிழற்றுக.





9. 10,15,15,20,25,30,35 என்ற புள்ளிகளின் இடையம் யாது?

10. $\begin{pmatrix} 3 & 2 & 0 \\ 0 & -1 & -2 \\ 1 & 4 & 1 \end{pmatrix}$ தாயவரிசை தருக? எவ்வகைத் தாயம் எனத் தருக.


11. ஒரு நோயாளிக்கு மூன்று விதமான மருந்துவில்லைகள் கொடுக்கப்பட்டன. ஒன்று 20 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மற்றையது 25 நிமிடத்துக்கு ஒரு தடவையும் மூன்றாவது வில்லை 30 நிமிடத்துக்கு ஒரு தடவையும் உட்கொள்ள வேண்டும். காலை 8 மணிக்கு 3 விதமான மருந்து வில்லைகள் உட்கொண்டால் மீண்டும் எந்த நேரத்தில் மூன்றும் ஒன்றாக உட்கொள்ள வேண்டும்?

12. ஒரு நிமிடத்தில் 120 m தூரம் செல்லும் ஒரு வாகனம் ஒரு மணித்தியாலத்தில் எத்தனை km தூரம் செல்லும்.

13. 



நாற்பக்கல் ABCD இல் X இன் பெறுமானம் யாது?

14. உருவில் $PQ \parallel SR$ ஆகும். PQRS ஒரு வட்டநாற்பக்கல் x, y இன் பெறுமானம் காண்க.




15. $x \leq -3$ உம் $x > 2$ என்ற சமனிலியை எண் கோட்டில் வரைக. $x > 2$ இல் நிறை எண்கள் இரண்டு தருக.

16. ABCD ஓர்நாற்பக்கல் $AD \parallel BC$ ஆகும். AC, BC என்பன O இல் இடைவெட்டுகின்றன.
அ) முக்கோணம் BCD இற்கு சமமான முக்கோணி எது?
ஆ) OCD முக்கோணிக்கு சமபரப்பான முக்கோணி எது?




17. ரூபா 85000 இற்கு ரூபா 8.50 விலைப்படி எத்தனை 10 ரூபாய் பங்குகள் வாங்கலாம்? பங்குகளின் மொத்தப் பெயர்மாத்திரைப் பெறுமானம் யாது?


18. 2x + 3y = 10 என்ற நேர்கோட்டில் கீழே தரப்பட்ட எந்த ஆள்கூறுகள் தரப்பட்ட நேர்கோட்டில் அமைந்திருக்கும். $A\left(\frac{1}{2}, 3\right)$ $B(1, -3)$ $C(-1, 4)$

19. $\frac{2}{3}$, 2, 6 ..... பெருக்கல் விருத்தியில்
அ) பொதுவிகிதம் என்ன?
ஆ) n ஆம் உறுப்பை முதன்மை எண்களின் பெருக்கத்தின் சுட்டியாக எளிய வடிவில் தருக?

20. $S = \frac{n}{2}(a + l)$ ஆனது ஒரு கூட்டல் விருத்தியில் n ஆம் உறுப்புகளின் கூட்டுத் தொகை யாகும். a ஐ எழுவாயாக மாற்றுக?


21. 8 மனிதர் ஒரு வேலையை 7 மணித்தியாலத்தில் செய்து முடிப்பர்.
அ) இவ்வேலை எத்தனை மனித மணித்தியாலங்கள் ஆகும்?
ஆ) அந்த 8 மனிதர்களும் அவ்வேலையை ஆரம்பித்து $2\frac{1}{2}$ மணித்தியாலங்களின் பின்னர் மின்தடை காரணமாக வேலை நிறுத்தப்பட்டது. அப்போது எத்தனை மனி-மணித்தியாலம் வேலை செய்யபபடாமை இருந்தது.


22. மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தாது தீர்க்க. $\log\frac{12}{5} + 2\log x = lg60$

23. 


ஒரு வட்டத்தில் AB, DC என்ற இரு நாண்கள் X ஐ இடைவெட்டுகின்றன. AX=12 cm, CX=8cm, AD=15cm ஆகும். BC இன் நீளம் யாது?


24. உருளை திண்மமொன்றின் விட்டம் 2r உம், உயரம் 3r உம் ஆகும். இரு வட்டப்பரப்புக்கும் வளைபரப்புக்கும் உள்ள விகிதம் எளிய வடிவில் தருக. (உருளையின் வளை பரப்பு $2\pi rh$)




25. 



A,B என்பன வட்டங்களின் மையங்கள் ஆகும். AC, BC வட்டங்களின் தொடலிகள் ஆகும்.
1) கோணம் ACB இன் பருமன் யாது?
2) $AC = 4\sqrt{2}cm$, $BC = 2cm$ எனின் AB இன் நீளம் என்ன?

26. உருவில் A இற்கு வடக்கே 15 km தூரத்தில் Bயும் மேற்கே 15km தூரத்தில் Pயும் உள்ளது.
அ) தரவுகளைப் படத்தில் குறிக்க?
ஆ) B இல் இருந்து P இன் திசைகோள் யாது?




27. இருபடிச் சமன்பாடு தீர்க்க. $6x^2 - 3x = 0$

28. 1) AB என்பது காணியின் ஒரு எல்லையாகும்.
I) O இல் இருந்து 7m தூரத்தில் அசையும் புள்ளியின் ஒழுக்கை பருமட்டாக வரைக?





29. ஒரு சதுரத்தில் 3,3,2,5 என்ற இலக்கம் எழுதப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 3 | 5 |
| 2 | 3 |

அ) தீபன் எழுமாறாக 3 என்ற இலக்கம் தொடுகிறான். அவன் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?
ஆ) தீபன் தொடும் சில நிமிட நேரத்தில் ராஜியும் வேறு ஒரு இலக்கம் தொடுகிறார். இருவரும் தொட்ட இலக்கத்தின் நிகழ்தகவு யாது?

30. அ) $1\frac{1}{2}l$ குளிர்பானத்தை 75ml கொண்ட குவளை எத்தனை பாவித்து முற்றாக நிரப்பலாம்?

ஆ) குவளையின் கொள்ளளவு $1\frac{1}{2}l$ குளிர்பானத்தின் கொள்ளளவின் எத்தனை சதவீதமாகும்?





## பகுதி - B

01. சப்பாத்து சோடி ஒன்றின் உற்பத்தியில் மூலப்பொருளுக்கும் கூலிக்கும் உள்ள விகிதம 2:3 ஆகும். ஒரு சோடி சப்பாத்து உற்பத்தி செய்ய ரூபா 2000 செலவாகின்றது. உற்பத்தியாளன் 40% இலாபம் வைத்து விற்கின்றான்.
1. மூலப்பொருள் செலவு யாது? கூலிச்செலவு யாது?
2. உற்பத்தியாளன் அச்சோடிச் சப்பாத்தை விற்றவிலை யாது?
3. மூலப்பொருள் 45% ஆலும் கூலிச் செலவு 10% ஆலும் அதிகரித்தால்
I) புதிய மூலப்பொருள் செலவு யாது?
II) புதிய கூலிச் செலவு யாது?
4. புதிய உற்பத்திச் செலவு யாது?
5. பழைய சதவீத இலாபம் பெற என்ன விலைக்கு விற்க வேண்டும்?

02. ஒருவன் தனது பயணத்தின் 3/5 பங்கை புகைவண்டியிலும் எஞ்சியதில் 1/3 பங்கை பஸ்வண்டியிலும் மிகுதியை நடந்தும் பயணம் செய்தான்.
அ) புகை வண்டியில் பயணம் செய்தபின் இன்னும் எவ்வளவு பங்கு பயணம் செய்ய உள்ளது?
ஆ) புகைவண்டி, பஸ்வண்டியில் பயணம் செய்த மொத்தப் பங்கு யாது?
இ) நடந்து செல்வதற்கு முழுவதன் என்ன பங்கு மிகுதியாக உள்ளது?
ஈ) நடந்து சென்ற தூரம் 8km எனின் பயணத்தின் மொத்தத் தூரம் யாது?
உ) நடந்து சென்ற தூரம் முழுப் பயணத்தின் என்ன சதவீதம்?

03. ஒரு பாடசாலையில் உள்ள க.பொ.த (சாதாரணதரம்) வகுப்பில் உள்ள மாணவர் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி பார்ப்பது தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.





A- நாடகம்

B- நடனம்

C- சினிமாப்படங்கள்


1. நாடகம், நடனம் மட்டும் பார்ப்போர் பகுதியை நிழற்றுக?
2. சினிமாப்படங்கள் பார்ப்போர் எத்தனைபேர்?
3. நாடகம் பார்ப்போர் 32 பேர் எனின் நாடகம் நடனம் மட்டும் பார்ப்போர் எத்தனை பேர்?
4. குறைந்தபட்சம் இரு நிகழ்ச்சியாவது பார்ப்போர் எத்தனை பேர்?
5. வகுப்பில் உள்ள மாணவர் தொகை 75 பேர் எனின் தரப்பட்ட ஒரு நிகழ்ச்சியினையும் பார்க்காதோர் நிகழ்வு யாது?

04. ஒரு பாடசாலை நுழைவாயிலில் ஒரு அலங்கார முகப்பு இரும்புக் கம்பிகளினால் ஆக்கப்பட்டுள்ளது. AP = BQ = 6m உம் PQ = 13m உம் AD = BC = 8m உம் DR = CT = 3m உம் RS = 5m உம் ஆகும்.




1. அரைவட்டமொன்றின் விட்டம் என்ன?
2. பைதகரசின் தேற்றத்தின்படி DP இன் நீளம் என்ன?
3. நிழற்றிய பகுதியின் சுற்றளவு?
4. நிழற்றிய பகுதிக்கு மின்வயர் மூலம் நிற மின்குமிழ்கள் 6m இற்கு ஒரு மின் குமிழாக எத்தனை மின்குமிழ்கள் பொருத்த வேண்டும்?
5. நிறம் தீட்டிய பகுதியின் பரப்பு யாது?

05. மாணவர் குழு ஒன்று கணித பாடத்தில் பெற்ற புள்ளிகளை வலையுரு வரையம் ஒன்று காட்டுகிறது.




அ) ஆயிடை 10-30 இல் எத்தனை மாணவர்கள் வகை குறிக்கப்படுகிறது?
ஆ) இவ்வலையுரு வரையத்தில் எத்தனை மாணவர்கள் விபரம் எடுக்கப்பட்டது?
இ) ஆகார வகுப்பு யாது?
ஈ) இவ்வலையுரு வரையத்தில் மீடிறன் பல்கோணி ஒன்று அமைக்க?

01. ஒரு செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வங்கி ஒன்றில் காணி கொள்வனவு செய்வதற்கு கடன்பெறலாம். ஆண்டுக்கு எளிய வட்டி 12 வீதம் ஆகும். | தனியார் வங்கி ஒன்றில் 150,000 ரூபா கடன் பெற்றால் 3 ஆண்டுகள் முடிவில் வட்டியாக ரூபா 49500 ஐக் கொடுக்கலாம். |
|---|---|

மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு ஏற்ப வங்கியில்

அ. 100 ரூபா கடனுக்கு ஓர் ஆண்டு வட்டி யாது?

ஆ. எக்கடன் முதலுக்கு ஓர் ஆண்டு முடிவில் வட்டியாக 2400 ரூபா கொடுக்க வேண்டும்.

இ. 150,000 ரூபா கடன்பெற்ற ஒருவர் 3 ஆண்டுகள் முடிவில் கொடுக்க வேண்டிய வட்டி யாது?

ஈ. தனியார் வங்கியில் அறவிடப்பட்ட வருட வட்டி வீதம் யாது?

02. I. A என்ற அப்பிள் வியாபாரி 3 தட்டுகளில் 3 தரங்களில் அப்பிள் விற்பனை செய்கின்றார்.

| | பெரிது | நடுத்தரம் | சிறிது |
|---|---|---|---|
| முதலாவது தட்டில் | 6 | 4x | 12 |
| இரண்டாவது தட்டில் | 2 | 6 | 4 |
| மூன்றாவது தட்டில் | 2x | 4 | 8 |

அ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

II. B என்ற வியாபாரி

| | முதலாவது தட்டில் | இரண்டாவது தட்டில் | மூன்றாவது தட்டில் |
|---|---|---|---|
| பெரிது | 8 | 7 | y |
| நடுத்தரம் | y | 4 | 6 |
| சிறிது | 5 | 8 | 5 |

ஆ. இதனைத் தாயமாகத் தருக. வரிசையில் தருக.

இ. $A+B=\begin{pmatrix}14 & 20 & 17\\ 9 & 10 & 12\\ 12 & 12 & 13\end{pmatrix}$ எனின் x,y இன் பெறுமானத்தைத் தருக.

ஈ. பெரிய அப்பிள் ஒன்று 40 ரூபா. நடுத்தர அப்பிள் ஒன்று 30 ரூபாவும் சிறிய அப்பிள் ஒன்று 25 ரூபா எனில் இரு வியாபாரிகளும் பெரிய அப்பிள் முழுவதும் விற்றால் ஒவ்வொருவரும் பெறும் பணத்தொகையைத் தனித்தனியாகக் காண்க.

03. $y=x^2-4x$ இன் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பெறுமானங்களின் வெற்றிடப் பகுதியை நிரப்புக.

| $x$ | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 5 | 0 | -3 | --------- | -3 | 0 | 5 |

அ. x=2 ஆகும் போது y இன் பெறுமானம் காண்க.

ஆ. வரைபுத்தாளில் x-அச்சு, y- அச்சு வழியே பத்து சிறிய சதுரங்களை ஒரு அலகாகக் கொண்டு சார்பின் வரைபை வரைக.


இ. வரைபின் சமச்சீர் சமன்பாடு யாது?

ஈ. $y=x^2-4x$ இன் இழிவுப் பெறுமானம் யாது?

உ. y=x-3 என்ற நேர்கோட்டை அதே வரைபுத் தாளில் வரைக.

ஊ. $y=x^2-4x$ உம் y=x-3 உம் ஆகியன வெட்டும் x இன் ஆள்கூறு சமன்பாடு $x^2-5x+3=0$ திரும்பதி ஆக்குமெனக் காட்டுக.

04. a. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளில் 48 பேரிடம் கைத்தொலைபேசி இருந்தது. 43 பேர் பெண்களாவர். தொலைபேசி வைத்திராத பெண்கள் எண்ணிக்கை 27 ஆகும். தொலைபேசி வைத்திராத ஆண்களின் எண்ணிக்கை 35 ஆகும். இத்தரவுகளை தரப்பட்ட வெண் உருவில் குறித்துக் காட்டுக.




அ.தொலைபேசி வைத்திருக்கும் பெண்களின் எண்ணிக்கை யாது?

ஆ. தொலைபேசி இல்லாத ஆண்களின் பகுதியை வென் உருவில் நிழற்றிக் காட்டுக.

இ. புகைவண்டி நிலையத்தில் இருந்த பயணிகளின் எண்ணிக்கை யாது?

b. அ. வானூர்தி ஒன்றினால் எதிரிகள் முகாமுக்கு குண்டுகள் போடப்பட்டன. குண்டுகள் எதிரி முகாமுக்குள் சரியாக விழுவதற்கான நிகழ்தகவு 4/5 ஆகும். அடுத்தடுத்த இரு குண்டுகள் போடப்பட்டன. எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான அல்லது விழாதிருப்பதற்கான நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப்படம் ஒன்று தருக.

1. இரு குண்டுகளும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?
2. ஒரு குண்டு மட்டும் எதிரிகள் முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?
3. குறைந்தபட்சம் ஒரு குண்டேனும் எதிரி முகாமுக்குள் விழுவதற்கான நிகழ்தகவு யாது?

05. அ. அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் h கொண்ட உருளை வடிவத் திண்மத்தின் கனவளவு π r,h இல் தருக.

ஆ. உருளை வடிவப் பகுதியில் ஆரை r ஆகவுள்ள அரைக்கோணப் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு π r இல் தருக.

இ. ஆரை 2r ஆகவும் உயரம் a ஆகவும் கொண்ட கூம்பின் பகுதி சமச்சீராக வெட்டி எடுத்தால் அதன் கனவளவு π,r,a இல் தருக.


ஈ. a=4r ஆகவும் h=6r ஆகவும் இருப்பின் எஞ்சிய உருளைப் பகுதியின் கனவளவு $18\pi r^3$ எனக் காட்டுக.

உ. π=3.14,r=0.7 என்ற மடக்கை வாய்ப்பாடு பயன்படுத்தி எஞ்சிய உருளைத் திண்மத்தின் கனவளவு யாது?

[உரு கனஅளவு $\pi r^2 h \longrightarrow$ கூம்பின் கனஅளவு $\frac{1}{3}\pi r^2 h \longrightarrow$ கோளகனஅளவு $\frac{4}{3}\pi r^3$]

## பகுதி - C

07. I. நீளமான கம்பியில் இருந்து வெட்டப்பட்ட ஒரு சென்றிமீற்றர் நீளமான சர்வசமக் கம்பித்துண்டு ஒட்டிப் பொருத்தப்பட்டு மேல்மாடிக் கிரில்கள் செய்யப்படுகின்றன.



அ. முதலாவது வடிவத்துக்கு இரண்டாவது வடிவத்தைவிட எந்தக் கம்பித்துண்டுகளைத் குறைவாக வேண்டும்.

ஆ. முதல், இரண்டாம், மூன்றாம் வடிவத்துக்குத் தேவையான கம்பித்துண்டுகள் தனித்தனியே காண்க.

இ. 12ஆவது வடிவம் அமைக்க எத்தனை கம்பித்துண்டுகள் தேவை?

ஈ. 12 வடிவமும் அமைக்க 3.6 m நீளமான நேரிய கம்பி போதுமானது என ஒரு மாணவன் கூறினார். இக்கூற்று உண்மையானதா? காரணம் தருக?

II. ஒரு பெக்கல் விருத்தி $T_n = 5 \times 2^{n-1}$ இல் $T_n = 160$ எனில் $n$ இன் பெறுமானம் யாது?

08. cm, mm அளவிடையும், நேர்விளிம்பும், கவராயம் மட்டும் பயன்படுத்தி அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி வரைக.

I. PQ=6cm, QR=7.2cm கோணம் PQR $=120^0$ ஆகுமாறு முக்கோணி PQR ஐ அமைக்க. அடிக்கோடு QR ஐ வரைக.

II. பக்கம் QR ஐ Qவில் செங்குத்து வரைக.


III. PQ இன் செங்குத்து இருசம கூறாக்கி வரைக.

IV. இரு நேர் வரைகளும் சந்திக்கும் புள்ளி O எனக் குறித்து OQ ஐ ஆரையாகக் கொண்டு வட்டம் வரைக. ஆரையை அறிந்து எழுதுக.

V. நீங்கள் வரைந்த வட்டத்துக்கும் QR இற்கும் உள்ள தொடர்பு.

09. அ. ஒரு வட்ட நாற்பக்கல் எதிர்க்கோணச் சோடி பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தை எழுதுக.

ஆ. உருவில் AB ஓர் விட்டம், AC ஓர் நாண். கோணம் CAB இன் இருசம கூறாக்கி AP ஆகும். AP=DP ஆக இருக்குமாறு நாண் AC ஆனது D வரை நீட்டப்பட்டுள்ளது. பின்வருவனவற்றை நிறுவுக.





I. கோணம் CPB=180-2x

II. கோணம் APD=180-2x

III. கோணம் $CPD=90^0$

IV. $\Delta APB = \Delta DPC$

10. a. நடுப்புள்ளித் தேற்றத்தின் மறுதலைத் தேற்றத்தைக் கூறுக.




1. உருவில் AB, AC இன் நடுப்புள்ளிகள் முறையே P,Q ஆகும். BC=CD வரை நீட்டப்படுமாறு AC ஆனது E ஆரை நீட்டப்படுவது CS=ES ஆகும். உருவை வரைந்து தரவுகளைக் குறிக்க.
2. $PQ//BC$ என நிறுவுக.
3. $CD//SR$ எனின் DR=ER என நிறுவுக.
4. PQRS ஓர் இணைகரமாகும்.

11. ஒரு குறித்த நாளில் வைத்தியசாலைக்கு கண்பார்வை தொடர்பாக வந்தவர்கள் பற்றிய விபரம் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வயது - வருடம் | 0- 10 | 11- 23 | 24 - 38 | 33 -40 | 40 -50 | 50 - 50 | 60-70 |
|---|---|---|---|---|---|---|---|
| நோயாளர்களின் எண்ணிக்கை | 5 | 12 | 15 | 20 | 25 | 15 | 5 |

1. சிகிச்சை பெற்றவர்களில் அதிக எண்ணிக்கையானோர் எந்த வயதுக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்?
2. சிகிச்சை பெற்ற 50 வயது அல்லது 50 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை சிகிச்சைபெற வந்தவர்களின் மொத்த எண்ணிக்கையின் என்ன சதவீதம்?
3. (33-41) வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகப் பயன்படுத்தி சிகிச்சைபெற வந்தவர்களின் இடை வயதைக் காண்க. (முழு எண்ணில் தருக)


12. DB என்பது கிடைத்தளம் ஆகும். DC என்பது 20 m உயரமான கட்டடத்தில் C என்ற யன்னல் உண்டு. அதற்கு எதிரே BA என்ற மாடிக்கட்டடம் உண்டு.



I. உருவைப் பிரதி செய்து C இல் இருந்து பார்க்கும்போது மாடிக்கட்டட உச்சி A இன் ஏற்றக்கோணம் $45^0$ உம், அதன் அடி B இன் இறக்கக் கோணம் $35^0$ உம் எனக் குறிக்க.


II. DB இன் தூரம் என்ன?

III. AB இன் உயரம் என்ன?

IV. D இலிருந்து உச்சி A ஏற்றக்கோணம் (θ)யாது?





கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபராகவிருந்து பணியோய்வு பெறும் வே.கா. கணபதிப்பிள்ளையின் மணிவிழா நேற்று முன்தினம் கலாசாலை ரதிலஷ்மி மண்டபத்தில் மணிவிழாக்குழுத் தலைவர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநரின்செயலாளர் இ.இளங்கோவன் உரையாற்றுவதையும், விழாநாயகனுக்கு மணிவிழாக்குழு வாழ்த்துப்பா வழங்குவதையும், 'கணாதீபம்' மணிவிழா மலரை அதன் பதிப்பாசிரியர்களான ச.லலீசன், அ.பௌநந்தி ஆகியோர் வெளியிட்டுவைப்பதையும் காணலாம். (63,48)

# ஓய்வூதியர்களை கௌரவிக்கும் முன்னோடிகள் தினம் நாளை

## பிரகடனப்படுத்துகிறது இலங்கை வங்கி

(யாழ்ப்பாணம்)

தேசத்தின் வங்கியான இலங்கை வங்கி 75 ஆவது ஆண்டு விழாவை கடந்த முதலாம் திகதி நாடளாவிய ரீதியில் கொண்டாடியது.

இந்நிலையில் இந்த 75 ஆவது ஆண்டில் சிறப்பு வேலைத்திட்டமாக வங்கியின் ஓய்வூதியர்களை கௌரவிக்கும் வகையில் நாளை செவ்வாய்க் கிழமையை இலங்கை வங்கி முன்னோடிகள் தினம் என்ற வாசகத்தை பிரகடனப்படுத்த வுள்ளது.

இலங்கைவங்கி தனது 75 ஆவது ஆண்டில் பல தொடர் வேலைத்திட்டங்கள் நடத்திவருகின்றது. இதன் ஓர் அங்கமாக இத்திட்டம் நடை முறைப்படுத்தப் படுகிறது. இத்தினத்தில் இலங்கையிலுள்ள ஒவ்வொரு இலங்கை வங்கிக்கிளையிலும் சமகால ஊழியரும் ஓய்வூதியரும் கலந்து பரஸ்பர உறவுகளையும் உயர்வு களையும் பகிர்ந்து கொள்ளும் நிகழ்வு நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஓய்வூதியர்களின் அனுபவங்கள் பகிர்ந்துகொள்ளப் படுவதுடன் அன்பளிப்புக்களும் பரிமாறப்படும்.

இந்த ரீதியில் வடமாகாணத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கங்களும் இந் நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளன.

இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத்தின் வன்னிமாவட்ட தலைவா எஸ். திருச்செல்வம் யாழ். மாவட்ட சங்கத்தலைவர் ந.சிவரட்ணமும் இதற்கான ஏற்பாடுகளை செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாண கிளையின் புதிய கட்டடம் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.45 மணியளவில் இல. 570 வைத்தியசாலை வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கூட்டுறவு காப்புறுதி நிறுவனத்தின் தலைவராகிய டபிள்யு லலித் ஏ.பீரிஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமாகிய திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார்.

# நூறு ஆண்டுகள் தாண்டியும் உள்ளத்தால் என்றும் இளமை



(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் யுத்தத்துக்கு முன்னர் வசித்து வந்த ரூபி பாட்டி என்று செல்லமாக அனைவராலும் அழைக்கப்பட்ட பெண்மணி ஒருவர் நூறுவயதைத் தாண்டியும் இளமையுடன் தலைநகர் கொழும்பில் வாழ்ந்து வருகிறார்.

கொழும்பு பம்பலப்பிட்டி தொடர்மாடியில் வசித்துவரும் ஜோர்ஜ்ஹனா ரூபி அதிசயமணி அரியரட்ணம் என்ற இவர் தனது தூய்மையான இறைபக்தி மிக்க வாழ்க்கை முறை காரணமாக உள்ளத்தால் என்றும் குன்றாத இளமையுடன் வாழ்ந்து வருகிறார்.

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் தனது வாழ்வில் ஆத்ம திருப்தியான பல காரியங்களை ஆற்றியுள்ளார்.

இதனால் அவரது குடும்பமும் சமூகமும் பயன் அடைந்துள்ளது அவருக்கு இறைஆசி இன்னும் நிறையும்.

# கிருஷ்ணஜெயந்தி உற்சவம்

முழங்காவில் ஸ்ரீ தேவி சமேத ஸ்ரீமத் வெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய கிருஷ்ணஜெயந்தி விழா இன்று திங்கட்கிழமை காலை விசேட பூசை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலை சங்காபிஷேகமும் இரவு 8 மணியளவில் உறியடி உற்சவமும் இடம்பெறவுள்ளது. அத்துடன் தொடர்ந்து காவடிகள் தீ மிதிப்பு அறநெறி பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள் பட்டிமன்றம் என்பனவும் இடம்பெறவுள்ளன.

## – அளவெட்டி நாகேஸ்வரம் –

# ஸ்ரீநாகவரத நாராயணனுக்கு இன்று இரதோற்சவம்



**அளவெட்டி-நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தான இரதோற்சவம் இன்று நடைபெறுகிறது அதையொட்டி அமரர் அருட்கவி சீ.வினாசித் தம்பி புலவர் எழுதிய தலவரலாறு நூலில் இருந்து சில பகுதிகள் இடம்பெறுகிறது.**

ஸ்ரீ நாகவரத நாராயணர் வீற்றிருக்கும் நாகேஸ்வரம் முன்பு பற்றைக் காடாயிருந்தது. இக் குறிச்சி தம்பளாவத்தை என அழைக்கப்பட்டது. இப்பகுதிக்கூடாக மக்கள் போக்குவரத்துக்குச் சிறிய சிறிய கால் நடை வழிகளிருந்தன. ஆடு,மாடுகள், இஷ்டப்படி மேய்ந்து திரியும்பகுதி.

முற்காலத்தில் இத் தலத்துக்குத் தெற்கேயுள்ள கிராம மக்கள் வடக்கேயிருக்கும் கீரிமலை-மாவிட்டபுரம் முதலிய தலங்களுக்கு மேற்குறிப்பிட்ட கால்நடைப் பாதை வழியாகச் செல்வார்கள்.

கீரிமலையில் ஆடி அமாவாசைத் தீர்த்த மாடுவதற்கு இரவிரவாக நடந்து செல்வார்கள்.

ஒரு தினம் கூட்டம் கூட்டமாகச் சென்றவர்களில் ஒருவரின் 9 வயதுச் சிறுவன் வழியைத் தவறவிட்டான் பிதாவும் மகன் வருகிறான் என்று மற்றவர்களுடன் போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் மகன் தன்னைப் பிரிந்து விட்டான என்று தெரிந்து மக்கள் கூட்டத்துள் தேடினார் பயனளிக்கவில்லை. கண்ணீர் வடித்து நின்றார் தீர்த்தமாடவில்லை. உடன் வந்தவர்கள் அங்கும் இங்கும் தேடினார்கள். சிறுவன் பற்றைக் காடெல்லாம் மிகுந்த இருளில் அப்பா அப்பா என்று கத்தித் திரிந்தான் நாவரண்டு விட்டது. சோர்ந்து ஒரு மரத்தடியில். இருந்து விட்டான். அது வாகை, நுணா, நாவல் மூன்று விருட்சமும் சேர்ந்த இடம் அப்போது ஒரு பெரியவர் வந்தார் மகனே அழாதே உனது அப்பாவிடம் யான் கூட்டிச் சென்று ஒப்படைப்பேன் என்று கொஞ்சம் அவலை உண்ணக் கொடுத்துத் தண்ணீரும் பருகவைத்தார். மெல்ல மெல்லக் கூட்டிச் சென்று சிறுவனின் பிதாவிடம் ஒப்படைத்து மறைந்து விட்டார். யாவரும் அதிசயப்பட்டனர் பின்பு சிறுவனும் பிதாவும் தீர்த்தமாடிவிட்டு வீடு திரும்பினர் வருகின்ற போது தான் ஓடி அலைந்த இடங்கள் தங்கிய இடம் பெயரியவர் அவல் கொடுத்த இடம் யாவற்றையும் சிறுவன் பிதாவுக்குக் காட்டிய வண்ணம் வந்தான் வழக்கமான வழியிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் அந்த இடங்கள் அமைந்திருந்தன உடன் வந்தவர்கள் யாவரும் குறிப்பிட்ட இடத்தை மிக்க ஆர்வத்துடன் தேடினார்கள், பார்த்தார்கள் என்ன அற்புதம் சிறுவன் தங்கிய இடம் பெரிய பாம்புப் புற்றுள்ள இடம். அங்கேதான் பெரியவர் வந்து அவலும் தண்ணீரும் கொடுத்த நிகழ்ச்சி நடந்தது. யாவரும் காணும் படியாகப் புற்றிலிருந்து 2 பாம்புகள் வெளிப்பட்டுக் காட்சி காட்டி மறைந்து விட்டன. எல்லோரும் இது நாகதம் பிரானின் இடமென்று வழிபட்டுச் சென்றனர்.

காலகதியில் இவ்விடம் சிறு ஆலயமாக மாறியது இது 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்) இதன் பக்கத்தில் கால்நடைகள் தண்ணீர் குடிப்பதற்காக தர்மசிந்தனையாளர் ஒரு கேணியை வெட்டி விட்டார் அதனால் "கேணியடி நாகதம்பிரான்" என எம் பெருமான் அழைக்கப்பட்டார். ஆவணி ரோகிணியில் விசேட பொங்கல் பூசை செய்து வந்தனர். பூசைக்காலத்தில் பெரிய பலகார மடைகள் வைப்பார்கள் பஞ்சாரத்தி காட்டும் நேரம் மடைகளுக்கிடையே 2 பாம்புகள் காட்சி காட்டிச் செல்வது வழக்கம்.


பிற்காலத்தில் இவ்விடத்தில் பொங்கல் காலத்தில் மாத்திரம் பந்தலிட்டுப் பூசை செய்வார்கள் ஒரு வைரவ சூலம், ஒரு செம்பினால் செய்த பாம்பின் உருவம் உரு முக்கோணக்கல் இவை நிலத்திலேயே இருக்கும் இடையிடை மக்கள் வந்து கும்பிடுவார்கள் இரவு வேளையில் பெரிய தீச்சுவாலை தெரியும். இதனால் சிலர் கேணியடி முனி என்றும் சிலர் கேணிய டிச் சோதி வைரவர் என்றும் சிலர் நாராய ணராகிய நாகதம்பிரான் என்றும் வழிபட்டார்கள். ஆனால் கண்ணன் அவதாரம் செய்த தினமாகிய ஆவணி ரோகிணி கிருஷ்ணஜெயந்தியில் பொங்கல் செய்வார்கள் திருவருள் உத்தரவுப்படி இத்தலத்தின் பெயர் நாகேஸ்வரம் என அழைக்கப்படுகிறது.

— — — — — —

**- தேவிபரமலிங்கம் -**

# நேபாளத்தில் கனமழை, நிலச்சரிவு

# இதுவரை 240 பேர் பலியாகினர்





(காத்மாண்டு)

இந்தியாவின் அண்டை நாடான நேபாளத்தில் பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மேற்கு நேபாளத்தில் ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

வெள்ளம் ஊருக்குள் புகுந்ததால் வீடுகள் தண்ணீரில் மிதக்கின்றன. எனவே, அங்கிருந்து வெளியேறிய மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப் பட்டுள்ளனர். பல இடங்களில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

கடந்த 3 நாட்களாக ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தில் சிக்கி 85 பேர் பலியாகினர். 46 பேர் காயம் அடைந்துள்ளனர். 113 பேரைக்காணவில்லை.

நிலச்சரிவு மற்றும் வெள்ளத்தால் 30 மாவட்டங்கள் பாதிகப்பட்டுள்ளன. இதனால் நாட்டில் மூன்றில் ஒரு பகுதி பலத்த சேதம் அடைந்துள்ளது. கடந்த 2 வாரத்தில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி 240 பேர் பலியாகி உள்ளனர்.

அப்பகுதியில் தற்போது நேபாள இராணுவம் மற்றும் பொலிஸார் மீட்புப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பெஹ்ரி ஆற்றின் மேல் இருக்கும் தாட்டுபானி- காட்கரி மற்றும் தாடபானி- பாபியாசவுர் மேம்பாலங்கள் மழை வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. ஹரிஹரபூர் பகுதியில் மற்றொரு மேம்பாலமும் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டது.

நேபாள அரசின் வேண்டுகோளுக்கு இணங்க மீட்பு பணிக்கு இந்தியா ஒரு விமானம் மற்றும் 3 ஹெலிகொப்டர்களை வழங்கி உள்ளது. மேலும் 4 கோடியே 80 இலட்சம் ரூபா நிவாரண உதவியும் அளித்துள்ளது.

## நிறங்களில் உருளைக்கிழங்கு

### பெலாரஸ் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(மின்ஸ்க்)

சாதாரண உருளைக்கிழங்குகளுக்கு பதிலாக, நீலம் மற்றும் சிவப்பு கலந்த உருளைக் கிழங்கை, பெலாரஸ் நாட்டு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

இதுகுறித்து, தோட்டக் கலை ஆராய்ச்சி நிறுவன தலைவர் இவான் கால்யத்கா கூறியதாவது,

பெலாரஸ் நாட்டு மக்களின் உணவில் உருளைக்கிழங்கு முக்கிய இடம் வகிக்கிறது. அந்நாட்டு, தேசிய அறிவியல் திட்டத்தின் கீழ், பாரம்பரிய நிறங்களைத் தவிர்த்து, புதிய நிறங்களில் உருளைக்கிழங்கை உற்பத்தி செய்யும் முயற்சியில், பெலாரசில் உள்ள அறிவியல் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

இந்த நீலம் மற்றும் சிவப்பு நிற உருளைக்கிழங்குகள், பாரம்பரிய உருளைக்கிழங்குகளை விட சுவை மிகுந்ததாக உள்ளன. எனினும், அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக, இந்த உருளைக்கிழங்குகள் அனுப்பப்பட்டுள்ளன. அரசின் ஒப்புதல் கிடைத்தபின், நீலம் மற்றும் செந்நிற உருளைக்கிழங்கு வகைகள் பயிரிடப்படும்.என அவர் கூறியுள்ளார்.

## ஸ்கொட்லாந்தை பிரிக்கக்கூடாது வலியுறுத்தும் அவுஸ்ரேலியா




ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து ஸ்கொட்லாந்து மக்கள் தனியாக பிரிந்து செல்வதை ஏற்றுக்கொள்ள முடியாதென அவுஸ்ரேலியா வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய ராஜ்ஜியத்திலிருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து தனிநாடு கோரும் வாக்கெடுப்பு இன்று நடைபெறவுள்ளது.

வாக்கெடுப்பு பத்திரத்தில் சுதந்திர நாடாக மாறுவதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஆம் இல்லை என்ற வார்த்தைகள் மாத்திரமே காணப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஆம் என்ற புள்ளியிடலில் புள்ளியிட வேண்டாம் என அவுஸ்ரேலிய பிரதமர் வலியுறுத்தியுள்ளார்.

லண்டனுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்ரேலிய பிரதமர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஈராக் சென்றிருந்த ஜேர்மன் வெளியுறவு அமைச்சர் பிராங்க் வால்டர் (இடது), அந்நாட்டு பிரதமர் பவுத் மொசூமை, சந்தித்தார்

## 700 பேரை சுட்டுக்கொன்ற ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள்

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து மோசுல் நகரை மீட்பதற்கான மோதல்களில் குர்திஸ் படைத்தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை சுனி முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களை இனப்படுகொலைகளுக்கு உட்படுத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. சிரியா மற்றும் ஈராக்கை மையப்படுத்தி கடுமைவாத முஸ்லிம் நாடு ஒன்றை உருவாக்கும் நோக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் தற்போது தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த இரு வாரங்களில் மட்டும் சிரியா நாட்டின் எண்ணெய்வளம் மிக்க கிழக்கு பகுதியான டெய்ர் எஸாரமாகா ணத்தில் உள்ள க்ரணிஜ், அபு ஹமாம், கஷ்கியே உள்ளிட்ட




கிராமங்களைச்சேர்ந்த சுமார் 700 பழங்குடியின மக்களை ஐ.எஸ். ஐ.எஸ் படையினர் சுட்டுக் கொன்றுள்ளதாகவும், அவர்களில் 600க்குள் மேற்பட்டவர்கள் அப்பாவி பொதுமக்கள் எனவும் அங்குள்ள மனித உரிமை கண்காணிப்பகம் அறிவித்துள்ளது.

மேலும், இந்த படையினரால் கடத்தி செல்லப்பட்ட பெண்கள் உள்ளிட்ட சுமார் 1800 பேரின் கதி என்னவாயிற்று? என்பது தொடர்பாக எந்த தகவலும் இல்லை எனவும் இந்த அமைப்பினர் கவலை தெரிவித்துள்ளனர்.

உலகச் செய்திகள்

## முதல்வர் ஜெயலலிதா மோடியை பின்பற்றவேண்டும்

### விஜயகாந்த் அறிவுரை



(சென்னை)

தமிழகத்தில் எதிர்க்கட்சிகளை எப்படிநடாத்த வேண்டும், மதிக்க வேண்டும், அரவணைத்து செல்ல வேண்டும், ஒன்றிணைந்து செயற பட வைக்க வேண்டும் என்பது பற்றி முதல்வர் ஜெயலலிதா பிரதமர்நரேந்திர மோடியிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும் என தே.மு. தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது,பிரதமர் நரேந்திரமோடி சுதந்திர தின விழாவில், இந்தியாவை உலக அரங்கில் முதன்மை நாடாக அழைத்துச்செல்லும் குறிக்கோளுடன் ஆற்றிய உரை இந்திய வரலாற்றில் ஒரு மைல் கல் ஆகும். வேற்றுமைகளை மறந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும், எதிர்க்கட்சிகளும் நாட்டின் வளர்ச்சிப்பாதையில் இணைவதில் தான் வெற்றி அடங்கியுள்ளது என்று பேசி உள்ளார்.நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மை பலம் பெற்று இருந்தாலும் எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படவே விரும்புகிறேன் என்று சொன்ன வார்த்தை மகத்தானது. இப்படிப்பட்ட மாண்புகள் நிறைந்த பிரதமராக நரேந்திர மோடி இந்தியாவை ஆட்சி செய்கிறார்.

எதிர்க்கட்சிகளை எப்படி நடாத்த வேண்டும், மதிக்க வேண்டும் போன்ற நல்ல பல விடயங்களில் பிரதமரை, தமிழக முதல்வர் ஜெயலலிதா பின்பற்றினால் தமிழக அரசியல் நாகரிகமாக இருக்கும்.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## 2880 இல் உலகம் அழியும் விஞ்ஞானிகள் ஆரூடம்

(நியூயோர்க்)

உலகம் அழிந்து விடும் என வதந்திகள் பரவி பின்னர் ஒன்றுமில்லாமல் போகும் சம்பவம் நடந்துள்ளது. இந்த நிலையில் இது குறித்து தற்போது புதுவிதமான தகவல் வெளியாகி உள்ளது.

வருகிற 2880 ஆண்டில் அதாவது இன்னும் 866 ஆண்டுகளில் உலகம் முற்றிலும் அழிந்து விடும் என அமெரிக்க விஞ்ஞானிகள் கணித்து ஆரூடம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் டென்னிசே பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வானவியல் ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் ஒரு ஆய்வு மேற்கொண்டனர். அப்போது மிகப்பெரிய இராட்சத விண்கல் ஒன்று பூமியை நோக்கி சுழன்றபடி பாய்ந்து வருவது தெரியவந்துள்ளது. அதற்கு '1950 டி,ஏ' என பெயரிட்டுள்ளனர். அது 44,800 மெகா தொன் எடையுள்ளது. 1 கிலோமீற்றர் அகலம் கொண்டதாக உள்ளது. இது வினாடிக்கு 9 மைல் வேகத்தில் பூமியை நோக்கி பாய்ந்து வருகிறது.

இந்த விண்கல் 2,880ஆம் ஆண்டில் பூமியை தாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மணிக்கு 38 ஆயிரம் மைல் வேகத்தில் பூமியை தாக்கும் என கணித்துள்ளனர். இதனால் பூமிஅதிபயங்கர சத்தத்துடன் வெடிக்கும். தட்ப வெப்பநிலையில் மாற்றம் ஏற்பட்டு சுனாமி உள்ளிட்ட பேரழிவுகள் ஏற்படும். அதன் மூலம் மனித குலம் அழியும் என்று தெரிவித்துள்ளனர்.

# வறுமையில் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப நிதியுதவி

## கரைதுறைப்பற்று சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களில் வறுமையின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கும், மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கும் நிதியுதவி வழங்கவுள்ளதாக கரைதுறைப்பற்று சமுர்த்தி மகா சங்க முகாமையாளர் எம்.தேவகுமார் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

மது ஒழிப்பு மற்றும் புகைத்தல் வாரத்தின் போது, கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் கடமையாற்றும் வெளிக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால், கொடி விற்பனை மற்றும் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட சுமார் இரண்டு இலட்சம் ரூபாய் நிதி எமது பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

எனவே, பெண் தலைமைத்துவத்தைக் கொண்டிருக்கும் குடும்பங்கள், யுத்தத்தினால் அங்கவீனர்களாக்கப்பட்டவர்கள், பெற்றோர்களை இழந்து கல்வி பயிலும் மாணவர்கள் என கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட 46 கிராம அலுவலர் பிரிவிலுள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கும், மாணவர்களுக்கும் இக்கொடுப்பனவுகள் மானிய முறையில் வழங்கப்படவுள்ளன.

எனவே, ஒவ்வொரு கிராமங்களிலும் கடமையாற்றும் வெளிக்கள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக குடும்பங்களின் பெயர் விபரங்கள் கோரப்பட்டுள்ளதுடன், அவை பரிசீலிக்கப்பட்ட பின்னர் கரைதுறைப்பற்று சமூக அபிவிருத்தி மன்றத்தினூடாக உரியவர்களுக்கு நிதி வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

## இந்திய பாதுகாப்பு ஆலோசகர் காலி மாநாட்டில் பங்கேற்பு?

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் ஏற்பாட்டில் கடற்படை வருடம்தோறும் நடத்தும் காலி கடல்சார் பாதுகாப்பு மாநாடு இந்த வருடம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்திய தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவல் இலங்கைக்கு எதிர்வரும் டிசம்பர் மாதம் விஜயம் செய்யவுள்ளார்.

அஜித்குமார் டோவல் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகப் பொறுப்பேற்ற பின்னர், இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இந்த மாநாட்டின், முதல் நாள் அமர்வில், சிறப்பு உரையாற்ற அஜித்குமார் டோவலுக்கு பாதுகாப்பு அமைச்சு அழைப்பு விடுத்துள்ளது.

எனினும், இந்தப் பயணத்தை அவர் உறுதிப்படுத்தவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

### போரின்...

கள் குழுவின் 112 ஆவது கூட்டம் வரும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி தொடக்கம், 31 ஆம் திகதி வரை நடக்கவுள்ளது.

இந்த அமர்வில், இலங்கை, புருண்டி, ஹெய்டி, மோல்டா, மோன்ரெனிக்ரோ, மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் தொடர்பான அறிக்கைகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இலங்கை தொடர்பான வாதம், ஒக்ரோபர் 7ஆம், 8ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான அனைத்துலக உடன்பாட்டின், 40 ஆவது பிரிவுக்கு அமைய, நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையை இலங்கை அரசாங்கம், ஏற்கனவே, மனித உரிமைகள் குழுவிடம் கையளித்துள்ளது.

இதில், 2003 ஆம் ஆண்டு தொடக்கம், 2012 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரையான காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள முக்கியமான முன்னேற்றங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.

அதேவேளை, சிவில் சமூகத்தின் சார்பிலும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில், இலங்கையிடம் பல்வேறு விவகாரங்கள் குறித்து கேள்வி எழுப்பப்படவுள்ளது.

ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த இலங்கை தொடர்பான நிபுணர் குழுவினதும், நல்லிணக்க ஆணைக்குழுவினதும் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்தும், இதில் கேள்வி எழுப்பப்படவுள்ளது.

சரத் பொன்சேகாவுக்கு எதிராக அரசியல் உள்நோக்கத்துடன் எடுக்கப்பட்ட பழிவாங்கும் நடவடிக்கைகள், மத சிறுபான்மையினர் மீதான தாக்குதல்கள், இனப்பாகுபாட்டை ஒழிக்க மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள், பெண்கள், சிறார்கள் மீதான வன்முறை கள், சுதந்திரமான கருத்துக்களை வெளியிடும் மற்றும், ஒன்று கூடும் உரிமை மறுக்கப்படுவது. வாழும் உரிமை, பொறுப்புக் கூறல், தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து கேள்விகள் எழுப்பப்படவுள்ளன.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகளைக் கண்காணிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள ஐ.நா.வின் மனித உரிமைகள் குழுவில், அனைத்துலக அளவில் பிரபலம் வாய்ந்த 18 சுதந்திர நிபுணர்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### புலிகளின்...

ஆதிக்கத்தை செலுத்தவுமே விரும்புகிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிர்ப்பைத் தோற்றுவித்து, அதன்மூலம இலங்கையின் அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் தடையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

புலிகளின் தோல்வி காரணமாக அமெரிக்காவும் ஐரோப் பிய நாடுகளும் தாங்கள் நினைததை இலங்கையில் சாதிக்க முடியவில்லை என்று கவலை கொள்கின்றன. இப்போது, இந்த நாடுகள் தங்கள் இலக்குகளை அடைவதற்காக ஐ.நா.மனித உரிமைகள் சபை மூலம் இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பதில் ஈடுபட்டு வருகின்றன என்றார்.

### மாணவி...

அதிபர் மானிப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டு, சம்பவம் தொடர்பில் முறைப்பாடு செய்துள்ளார். இந்த முறைப்பாட்டின் பிரகாரம் குறித்த ஆசிரியர் மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஆசிரியரை நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையினை மானிப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (25)

### வலி.கிழக்கு....

வீதி ஆகியவற்றின் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்ட நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும் சமூக ரீதியான இத்தகைய புறக்கணிப்புக்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து உடனடியாக மீதமாகவுள்ள நாவற்காடு-பயிற்றோலை வீதியினை திருத்தியமைக்குமாறு கோரி இவ்வேலைத் திட்டத்துடன் தொடர்புடைய அனைத்து அதி காரிகளுக்கும் தனித்தனியான மகஜர்கள் தயாரித்து அனுப்பப்படவுள்ளதாகவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தேர்தல் காலங்களில் வீடு வீடாகச் சென்று வாக்குச் சேகரித்த தமிழ்க் கூட்டமைப்பினர் தற்போது ஆட்சிக்கு வந்த பின்னர் இவ்வாறான அநாகரிகச் செயல்களில் ஈடுபட்டு வருவதானது தமக்கு மிகுந்த வேதனையை அளிப்பதாகவும் தெரிவிக்கும் பொது மக்கள் தமக்கு நியாயம் கிடைக்கும் வரை தொடர்ந்தும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்தனர். (03)

### பருத்தித்துறையில்...

சேர்ந்த தெய்வேந்திரன் சிறிரங்கன் (வயது-22) என்பவரே படு காயமடைந்தவராவார்.

இது தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக தெரிவித்தனர்.

இந்த கைகலப்புச் சம்பவத்தில் யாழ் - கொழும்பு தனியார் பேருந்து ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது. (18)

### ஆசிரியையின்....

வீட்டில் தனித்து வசித்து வந்த மேற்படி முன்னாள் ஆசிரியை, நேற்று வீட்டைவிட்டு வெளியில் வராததையடுத்து, சந்தேகம் கொண்ட அயலவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுத்தனர். இதனையடுத்து பொலிஸார், ஆசிரியையின் வீட்டிற்குச் சென்று பார்த்தபோது, ஆசிரியை எரிந்த நிலையில் சடலமாகக் கிடந்தார்.

இதனையடுத்து, வடமராட்சிப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி அன்ரலா வின்சன் தாயனின் உத்தரவிற்கமைய சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைகளுக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (18)

## சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் முத்தமிழ் சங்கமம் நிகழ்வு



சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஏற்பாட்டில் முத்தமிழ் சங்கமம் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை 2.00 மணியளவில் வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது வீராச்சாமி கரன் குழுவினரின் மங்கள வாத்தியம், பூந்தோட்டம் நர்த்தனாலய மாணவர்களின் நடனம், திருமதி ர.அருந்ததியின் மாணவர்களது இசையமுதம், வாத்திய கலாலய மாணவர்களின் வயலின் இசை, கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரன் தலைமையில் சிறப்பு கவியரங்கமும் வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்க செயலாளர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் சிறப்பு பட்டிமன்றமும் கூமாங்குளம் சிதம்பரேஷ்வரம் நாட்டிய பள்ளி மாணவர்களின் எங்கள் தமிழ் எங்கே என்ற நாட்டிய நாடகமும் இடம்பெற்றது.

வவுனியா சிந்தாமணி பிள்ளையார் கோவில் கலாசார பேரவையின் தலைவர் சைவ சித்தாந்த முதுமானி சிவ. கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளை நிலைய தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் முதன்மை விருந்தினராகவும், பேராதனை பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் கி.விசாகரூபன் சிறப்பு விருந்தினராகவும், சர்வதேச இந்து இளைஞர் பேரவையின் ஸ்தாபகர் சி.கணேஷ்குமார் விசேட விருந்தினராகவும் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா, செட்டிக்குள பிரதேச செயலர் என். கமலதாசன், நெடுங்கேணி பிரதேச செயலர் கா.பரந்தாமன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர். (70)

## பண்பாட்டு பெருவிழாவும் 'செம்பருத்தி மலர்' வெளியீடும்



வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவை நடத்திய பண்பாட்டு பெருவிழாவும் 'செம்பருத்தி மலர்' பிரதேச நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் யாழ்.பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலய பர்வதவர்த்தினி மண்டபத்தில் பருத்தித்துறை பிரதேச செயலரும், பிரதேச கலாசாரப் பேரவைத் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை பிரதேச கலாசார பேரவை நிர்வாக உறுப்பினர் கோ.கோகிலரதனும், தலைமையுரையை பிரதேச செயலர் இ.த.ஜெயசீலனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகமும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து நூலை வெளியீடு செய்து முதற் பிரதியினைப் சி.சத்தியசீலன், எஸ். பத்மநாதனுக்கு வழங்கினார். அதனைத் தொடர்ந்து கலைஞர்களுக்கு கலைப்பரிதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றது. இதில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை நகரசபை தலைவர்களும், உறுப்பினர்களும், எழுத்தாளர்களும் மற்றும் கலைஞர்களும், பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

### சுயாதீன...

பயன்படுத்தியது போன்ற விடயங்களுக்கு கடுமையான தண்டனை கோருவேன்.

இலங்கையில் நிலவிய சூழ்நிலை குறித்த முழுமையான அணுகுமுறையொன்றை அமெரிக்காவும் ஏனைய மேற்குலக நாடுகளும் எடுக்க வேண்டும். அமெரிக்கா பொலிஸ்காரனாகச் செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். 'பொது மக்கள், குழந்தைகள் மீதான அமெரிக்காவின் தாக்குதல்களை நாங்கள் மறக்க முடியாது. யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட முக்கிய நாடு அமெரிக்கா எனவும் அவ் டேஸ் கௌஷால் தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கான பணிகளில் பாரபட்சம் காட்டக்கூடாது

## அமைச்சர் டக்ளஸ் அறிவுறுத்து



(யாழ்ப்பாணம்)

மக்களுக்கான திட்டங்களை வகுக்கும்போது மனிதாபிமானத்துடன் செயற்பட வேண்டும். அதேவேளை தொகுதிகளில் வேலைத்திட்டங்களை அடையாளம் காண்பதிலும், அதற்கான மதிப்பீடுகளைச் செய்வதிலும் வெளிப்படைத் தன்மையும், நேர்மையும் பேணப்பட வேண்டும் என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை தொகுதிகளுக்கு பங்கீடு செய்வது தொடர்பாக கட்சியின் தொகுதி அமைப்பாளர்கள், தொகுதி நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

பதினைந்து பிரதேச செயலர் பிரிவுகளையும் மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்த நிர்வாகக் குழுவினர் அடுத்ததாக உங்கள் பிரதேச பொதுக் குழுவை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும்.

தொகுதி நிர்வாகக் குழுவும், தொகுதி பொதுக் குழுவும் பொதுச் சபையும் செயற்திறன் மிக்கதாகவும் உறுதிமிக்கதாகவும் கட்டியெழுப்பப்பட்டு செயற்படும் போது தற்போதைய நமது பயணம் மேலும் முன்னோக்கிச் செல்லும். தற்காலிகமாக நியமிக்கப்பட்டுள்ள இந்த நிர்வாகக் குழுவினர் நியமனங்கள் எதிர்காலத்தில் தொகுதி குழுக்களிலிருந்து தெரிவு முறையிலேயே தெரிவுசெய்யப்படுவார்கள்.

எனவே நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மற்றும் அமைப்பாளர்கள் மக்களுக்கான திட்டங்களை பாரபட்சமற்றவகையிலும், நேர்மையாகவும் அரசியல் கடந்த மனிதாபிமானத்துடனும் செயலாற்ற வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட நிதி மற்றும் விசேட ஏற்பாடுகளுக்குள்ளாக அரசிடமிருந்து பெறப்படும் நிதிகள் என்பவற்றுக்கான வேலைத்திட்டங்களை வகுப்பதோடு அவற்றை முன்னுரிமை அடிப்படையில் பட்டியலிட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை மூவருக்கு விசேடமாக வாய்ப்பு

நாடளாவிய ரீதியில் நேற்று நடந்து முடிந்த ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில், பரீட்சை மண்டபத்திற்கு செல்ல முடியாத மூன்று பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றியுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

விபத்தில் சிக்கிய மாணவியொருவர் வைத்தியசாலையிலும், வெள்ளத்தினால் பரீட்சை மண்டபத்திற்கு செல்லமுடியாதிருந்த மாணவர் இருவர் சனசமூக நிலையத்திலும் பரீட்சைக்கு தோற்றினர்.


தம்புள்ள பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தொன்றில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த சந்தனி புன்சரணி என்ற மாணவியே தம்புள்ள வைத்தியசாலையில் வைத்து பரீட்சை எழுதியுள்ளார்.

இதற்கு வைத்தியசாலையின் வைத்தியர் மற்றும் பரீட்சைகள் திணைக்களம் என்பன தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன.

இதேவேளை, போபத்தலாவை தெரங்கலையில் ஏற்பட்ட வெள்ளத்தினால் இரண்டு மாணவர்களுக்கு பரீட்சை மண்டபத்திற்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருந்ததாக பரீட்சைகள் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து பிரதேச செயலக அதிகாரிகள் மூவர், டிங்கி வள்ளத்தின் மூலம் தெரங்கலைக்குச் சென்று அங்குள்ள சனசமூக நிலையத்தில் வைத்து அவ்விரு பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சை நடத்தியுள்ளனர்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்து கட்டட சுவரில் மோதிய பஸ்



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியில் நேற்றுக் காலை தனியார் பஸ் வேகக்கட்டுப்பாட்டை இழந்து கட்டடச் சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

கவனயீனமாக சென்ற சைக்கிளுக்கும் முச்சக்கர வண்டிக்கும் வழிவிட முற்பட்ட வேளையே குறித்த தனியார் பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

விபத்தில் அந்த பஸ்ஸில் பயணித்த சிலர் சிறுகாயங்களுக்கு உள்ளானார்கள். அச்சுவேலி பகுதியிலிருந்து குறித்த பஸ் யாழ்ப்பாணம் நோக்கி வந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இந்த விபத்தில் பஸ் பலத்த சேதங்களுக்குள்ளானது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### திருமலை - கருமலையூற்றில்

# உயர்பாதுகாப்பு வலயத்திலிருந்த பள்ளிவாசல் இடித்தழிப்பு



திருகோணமலை மாவட்டத்தில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள கருமலையூற்று பள்ளிவாசல் பாதுகாப்புத் தரப்பினரால் உடைக்கப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாணசபை உறுப்பினரான மஹ்ரூப் இம்ரான் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் ஐ.தே.கட்சி உறுப்பினர் மொகமட் மஹ்ரூப் இம்ரான் இது தொடர்பான குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

இது தொடர்பாக அந்த பகுதி மக்களும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்திடம் முறையிட்டுள்ளனர்.

நேற்று கடலுக்குச் சென்ற மீனவர்கள் இந்தப் பள்ளிவாசல் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர். இதையடுத்து தகவல் ஊருக்குள் பரவியது. கடந்த இரண்டு நாள்களாக அங்கு கடும் மழை பெய்தது என்றும் இதன்போது இயந்திரங்களைக் கொண்டு கட்டடமொன்று இடிக்கப்படும் சத்தம் தமக்குக் கேட்டதாகவும் அயல் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பள்ளிவாசல் உடைக்கப்பட்டதை மறுக்காத இராணுவத்தினர், உணவகம் ஒன்றை அமைப்பதற்காக அடித்தளம் இட்டபோது தவறுதலாக பள்ளியின் ஒரு பகுதி உடைந்து விட்டது என்று நேற்று மாலை அங்கு கூடிய உள்ளூர் அரசியல்வாதிகளிடம் கூறினர் என்று கிழக்கு மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

எனினும், உண்மை நிலையை அறிவதற்காக நாம் அங்கு மக்களுடன் சென்றபோது இராணுவத்தினர் எம்மைத் தடுத்துவிட்டனர் என்று இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார். சம்பவம் குறித்து அப்பகுதி முஸ்லிம்கள் திரண்டு சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவுசெய்துள்ளனர்.

இதேவேளை, அப்பகுதியில் பள்ளிவாசல் ஒன்று இருக்கவில்லை என்றும், இல்லாத பள்ளிவாசலை எப்படி உடைக்க முடியும் என்றும் கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லால் பெரேரா கூறியுள்ளார்.

# பத்து ரூபா தாள் அச்சிடப்படமாட்டாது

(கொழும்பு)

இலங்கையில் இனிமேல் 10 ரூபா தாள் அச்சிடப்படமாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தீர்மானத்துக்கு இணங்க இந்தத் தாள் அச்சிடல் நிறுத்தப்படவுள்ளது. அதற்குப் பதிலாக 10 ரூபா நாணயம் அச்சிடப்படவுள்ளது.

இந்தநிலையில் 10 ரூபா தாள்களுக்குப் பதிலாக மத்திய வங்கி ஏனைய வங்கிகளுக்கு 10 ரூபா நாணயங்களை விநியோகித்து வருகிறது.

# யுத்தகால காணி உரித்து ஓராண்டுக்கு சட்டத் திருத்தம்

(கொழும்பு)

இலங்கையில் தனியார் காணியை 10 ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித தடைகளும் இன்றி வைத்திருந்த காரணத்தைக் காட்டி, அதனைச் சொந்தமாக்கிக் கொள்ள இருக்கின்ற சட்ட ஏற்பாடு வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் யுத்த காலத்துக்கு பொருந்தாது என்று கூறுகின்ற புதிய சட்ட மசோதா தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடந்துவருகின்றது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் நிலவிய யுத்த சூழ்நிலைகள் காரணமாக தமது குடியிருப்புகளை விட்டு வெளியேறியவர்கள், அவர்களின் காணி உரிமையை மீளப் பெற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் சட்டத் திருத்தங்களைக் கொண்டுவருமாறு நல்லிணக்க ஆணைக்குழு ஏற்கனவே பரிந்துரை செய்திருந்தது.

1983 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி தொடக்கம் 2009 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கும் மட்டும் பொருந்தும் விதத்தில் ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தில் புதிய திருத்தம் கொண்டுவரப்படுகின்றது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக தமது அசையாச் சொத்துக்கான உரிமையை பாதுகாப்பதற்கு இயலாதவராக இருந்து வெளியேறியவர்களுக்கே புதிய சட்டத் திருத்தம் ஏற்புடையதாகின்றது.

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்த காலத்தில் பெருமளவான மக்கள் தமது காணிகளை விட்டு வெளியேறியிருந்தனர்.

இந்த சட்டத்திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேறி ஓராண்டு காலப்பகுதிக்குள் சட்டபூர்வ சொந்தக்காரர்கள் தமது காணிக்கான உரித்தினை நீதிமன்றத்தினூடாக கோர முடியும்.

எனினும் புதிய சட்டம் முதல் 12 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகுமாக இருந்தால், அதன் பின்னர் போடப்படும் வழக்குகள் நடைமுறையில் எப்படி அமையும் என்பதை நீதிமன்ற வழக்குகளில் தான் தீர்மானிக்கலாம் என்று வழக்கறிஞர் கே.வி.எஸ். கணேஷராஜன் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் பெருமளவான மக்கள் குடியிருப்பு காணிகள் ஆயுதப்படைகளின் பாவனைக்காக கையகப்படுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஆகஸ்ட் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.